மாண்புடைய மங்கையர்

1. அழகை வெறுத்த அம்மையார்

அழகு என்பது ஒரு பண்பு. இதனை அடைய விரும்பாதவர் எவரும் இலர். இஃது இயற்கை அழகு செயற்கை அழகு என இரு வகையாக இயம்பப் பெறும். இயற்கை அழகு அடையப் பெருதவர் செயற்கையாலேனும் அழகை அடைய விரும்புவர். அத்தகைய அழகை ஆடவர், பெண்டிர் என்னும் இரு பாலாருள் பெண்பாலாரே மிகுதியும் பெற்றவர். அஃது அவர்களிடம் இயற்கையில் அமைந்த ஒரு தனி இயல்பு. அதனுலேயே அவர்கள் அழகு எனப் பொருள்படும் 'மாதர்' என்றும் 'காரிகை' என்றும் குறிக்கப்படுகின்ருர்கள். மாது என்னும் குற்றுகரச் சொல், 'அர்' என்னும் ஈற்றுப் போலி பெற்று வழங்கப்படுகிறது. ஆகவே, மாதர்கட்கே இயற்கையில் அமைந்த "அழகினைத் துறத்தல் எத்துணைச் சீரிய குணம் என்பதைச் சிந்திக்க வேண்டாவா? அவ்வாறு துறந்த தூய்மையர் யாரேனும் உளரோ எனில், உளர் என்பதை உணர்த்தவே இக்கட்டுரை எழுந்ததென்க.

அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்னும் நால்வகைக் குடிகளுள் வணிகர் முப்பிரிவினர். அவர்களை இப்பர், கவிப்பர், பெருங்குடியர் என்று

உலகளாவிய பொதுக் கள உரிமம் (CC0 1.0)

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

பதிப்புரிமை அற்றது

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✸✸✸

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் (https://ta.wikisource.org), தமிழ் இணையக் கல்விக் கழகமும் (http://tamilvu.org) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

No Copyright

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✸✸✸

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community (https://ta.wikisource.org) and Tamil Virtual Academy (http://tamilvu.org). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

பொருளடக்கம்

எண்		பக்கம்
1.	அழகை வெறுத்த அம்மையார்	1
2.	உண்மைத் துறவுடைய உத்தமியார்	21
3.	கணவனுக்கேற்ற காரிகையார்	32
4.	தென்னர் குலப் பழி தீர்த்த தெய்வ மாதரார்	50
5.	மங்கலநாண் ஈந்த மாதரார்	61
6.	கணவனைத் திருத்திய காரிகையார்	68
7.	உத்தி கூறிய உத்தமியார்	79
8.	மனையை மங்கலம் ஆக்கிய மாதரார்	88
9.	ஆரூர் அம்மையார்	97
10.	ஒற்றியூர் ஒள்ளிழையார்	111

பெரியார் பகுப்பர். இப்பகுப்பு அவர் அவர் செல்வ நிலையால் அமைந்ததேயாம். 'இப்பரினும் கவிப்பர் செல்வர். கவிப்பரினும் பெருங்குடி மக்கள் பெருஞ் செல்வர்கள்.

இப்பெருங்குடியினர் மரபில் தனதத்தனுர் என்னும் செல்வர் தோன்றினுர். அவர் சோழநாட்டின் தொல்பதியாகிய காரைக்காற்பதியில் சிறப்பாய் வாழ்ந்து வந்தனர்.

காரைக்கால் வணிகர் பொதுவாகத் திரைகடல் ஓடியும் திரவியம் தேடும் திருவினர். மானமிகு தருமத்தின் வழி நிற்பவர்; வாய்மையில் சற்றும் வழுவாத 'வர். அவர்கள் கடல் நெறியே' செல்வதும் மீளுவதும் ஆய செயலை மேற்கொண்டவர்கள்.

தனதத்தனுருக்குத் திருமகள் தோற்றம்போல ஒரு பெண் மகவு பிறந்தது. பெற்ருேர் அம்மகவைப் பாராட்டிச் சீராட்டி வளர்த்துப் புனிதவதி என்னும் பெயரைச் சூட்டி வழங்கினர். அம்மகளார் பொங்கிய பேரழகு மிகு புனிதவதியார் எனத் திகழ்ந்தார். புனிதவதியார், நன்கு வளர்ந்து விளையாடும் காலத்தும் இறைவனைப் பற்றிய பேச்சும் ஆட்டமுமே பயின்று வந்தனர். இவ்வாறு இவ்வம்மையார் தம் இளமைப் பருவத்தில் பயின்று வந்ததை நினைவிற் கொண்டே பின்னல் தாம் பாடிய அற்புதத் திருவந்தாதி என்னும் நூலின் முதற்பாடலிலேயே

''பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம் காதற்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன்''

என்று சிவபெருமானை நோக்கிப் பாடி மகிழ்ந்தார்.

இவ்வாறு அறிவாலும் திருவாலும் உருவாலும் சிறந்த புனிதவதியார், கன்னிப் பருவத்தையும் கவினுறப் பெற்றனர்.

புனிதவதியாரைப் பற்றிப் பாடவந்த சேக்கிழார் மொழியில் நாகரிகப் பண்பும் நயமார்ந்து காணப்படுகிறது. புனிதவதியார் பூப்பு (மணப்பருவம்) அடைந்தனர். பொதுவாகப் பூப்பிற்குப் பின் நடந்துகொள்ள வேண்டுவது இல்லிகவாமை. அஃதாவது, வீட்டை விட்டு வெளியே செல்லாமை. இதனை உட்கொண்டு சேக்கிழார், 'இல்லிகவாப் பருவம்' என்று இயம்பியிருப்பது நம் நாட்டு மாதர்களின் பண்பை விளக்குவதோடு நாகரிக முறையையும் நன்கு புலப்படுத்துகிறது.

தனதத்தனார் திருமகளார் பூப்புற்றுப் பொலிவதைக் கேள்வியுற்ற நிதிபதி என்னும் பெயரிய வணிகர், இவரைத் தம் தனையனுக்கு மணமுடிக்க மனம் கொண்டார். அதனைப் பேசி முடிக்கப் பேரறிஞர் சிலருடன் நிதிபதி, நாகை நகர் நீங்கிக் காரைக்கால் வந்துற்றனர். வந்த முதியோர்களும் தனதத்தனாரும் மணமக்களின் குணம் பேசிக் குலம் பேசிக் குறித்த நாளில் திருமணம் இயற்ற முடிவும் செய்தனர். மண விழா, குறிப்பிட்ட மங்கல நல் வேளையில் புனிதவதியார்க்கும் பரமதத்தனுக்கும் தெளிதருநூல் விதி வழியே செய்து முடிக்கப்பட்டது. அம்மணவினையைக் கண்ட கேளிரும் கிளைஞரும் நனிமிக மகிழ்ந்தனர். இதனைச் சேக்கிழார் பெருமானார்,

" தளிரடிமென் னகைமயிலைத் தாதவிழ்தார்க் காளைக்குக்
களிமகிழ்சுற் றம்போற்றக் கல்யாணம் செய்தார்கள் "

என்று குறிப்பிடுகிறார். அம்மையார் மென்மைத் தன்மைக்கும் இளஞ்சாயலுக்கும் மயிலை உவமை கூறியது மிகமிகப் பொருத்தமுடையதே. அன்னணமே தோற்றப் பொலிவுக்கும் ஏற்ற உணர்ச்சிக்கும் பரமதத்தனுக்குக் காளையை உவமை காட்டியதும் சாலவும் தக்கதே. ஆனால், ஈண்டுச் சேக்கிழார் தாம் கூறிய உவமையில் இப்பொருத்தமே அன்றி ஏனையதொரு பொருட்பொருத்தமும் அமையப் பாடியுள்ளார். அருண்மொழித் தேவராம் சேக்கிழார்க்கும் புனிதவதியாரின் வரலாற்றுப் பகுதி நன்கனம் தெரியும். இருவேறியல்புடைய அம்மணமக்கள் பின்னாளில் எங்ஙனம் இணைந்து வாழப்போகிறார்கள் என்பதையும் அவர் நன்கு அறிந்தவர்; ஆதலின் இவ்வுவமையின் மூலம் பின்னர் நடக்க இருக்கும் நிகழ்ச்சியை முன்னர் நாம் அறிய அறிவுறுத்துகின்றார். மயிலானது பறவை இனத்தைச் சார்ந்தது. காளை விலங்கின் ஈட்டத்தைச் சேர்ந்தது. புள்ளும் (பறவையும்) விலங்கும் பொருந்துதல் இயலுமோ! அவை பொருந்தி வாழ்தல் என்பது முயற்கொம்பே அன்றோ? அது போலவே, பரமதத்தனுக்கும் புனிதவதியார்க்கும் நடந்த கடிமணம் பொருத்தமற்றது. இவர்கள் பின்னால் பொருந்தி வாழும் நிலையினைப் பெறுதவர் ஆவர் என்பதை உவமை முகத்தால் விளக்கி வைத்தார் உலகம் புகழும் உத்தமராகிய சேக்கிழார் பெருமானார். பொருந்தி வாழும் இயல்பு அவர்பால் இருப்பதைப் புலவர் அறிந்திருந்தால் பாற்பொருத்தம் அமையக் காளைக்

கும் இளமனை நாகிற்கும் (பசுவிற்கும்) என்றேனும், பெடை மயிலுக்கும், சேவல் மஞ்ஞைக்கும் என்றேனும் செய்யுள் செய்திருப்பர் என்பதை நாம் அறிகிரேம்.

தனதத்தர் பெருந்தனிகர். அவர் குடிக்கு ஒரே அரும்புதல்வியார் புனிதவதியார். ஆதலின், தனதத்தர் தம் அருமை மகளாரை அகன்றிருக்க மனங் கொண்டிலர்; என்ருலும், தம் அணிமாடத்தில் தம் பதிகள் வதிய எண்ணமுங்கொண்டிலர். எனவே, தம் மருகன் பொங்கொலிநீர் நாகைக்குப் போகா வண்ணம், தம் பதியிலேயே அணிமாடம் தனித்தமைத்துப் புது மனை புகு விழாவும் நடத்தி, அதில் மணமக்களை அமர்த்தினர். இதுவே அறிவுடைச் செல்வர் ஆற்றும் செயலாகும். இவ்வாறே கோவலன் கண்ணகியை மணந்த பின்பு தம்முடனின்றித் தனித்து வாழவே இருசார் இரு முதுகுரவர்களும்—கோவலன் தந்தையாம் மாசாத்துவானும், கண்ணகியின் தந்தையாம் மாநாய்கனும்—நேர்ந்து, அத்தம்பதிகளை மனையறம் இயற்ற ஏற்பாடு செய்ததாகச் சிலப்பதிகாரம் செப்புகின்றது.

புனிதவதியார் பரமதத்தன் உடன் கூடி இல்லறத்தை இனிது நடத்தலானர். துறந்தார்க்கும், துவ்வாதவர்க்கும், உணவின்றி வருந்துபவருக்கும், திக்கின்றி இறந்தார்க்கும் துணையாய் இருந்தனர். அவ்விருவரும் தென்புலத்தார் (பிதுர்க்கள்) தெய்வம், விருந்து, ஒக்கல் (உறவினர்) ஆதியோர்க்குத் தம் கடன்களை ஒழுங்காக நடத்தி வந்தனர்.

இம்முறையில் பாங்கில் வரும் மனையறத்தின் பண்பு வழாமையில் அவ்விருவரும் பயில்வார் ஆனார். ஆனால், புனிதவதியார் சிவபெருமான் திருவடிக்கீழ் உணர்வு மிக ஒழுகினார்.

'உத்தியோகம் புருட லட்சணம்' என்பது முதுமொழி. ஆகவே, பரமதத்தன் காரைக்காலில் அங்காடி ஒன்றை அழகு பெற அமைத்துப் பொருளீட்டி வந்தனன். ஒரு நாள் அவன் நண்பர் ஒருவர் அவனைக் காண அங்கு வந்து சேர்ந்தார். நண்பர், பெரியார், குழந்தைகள், தெய்வம் ஆகியவர்களைக் காணச் செல்பவர் வெறுங்கையுடன் செல்வது முறையன்று; ஏதேனும் ஒன்றைக் கையுறையாகக் கொண்டு செல்லுதல் மரபாகும். அம்முறையில் பரமதத்தனைக் காண வந்தவர் மாங்கனி இரண்டை மனங்கனிந்து கொணர்ந்து ஈந்தனர். கனி பெற்ற காளையாம் பரமதத்தன், அவற்றை இல்லத்துச் சேர்க்க ஏற்பாடு செய்து, தன் பணியின் மீது ஊக்கமாய் இருந்தான்.

இந்நிலையில் ஓர் அடியவர் பசிமிக உடையராய், உணவின் மிகு வேட்கையராய், புனிதவதியார் அகம் புகுந்தனர். வந்த விருந்தினரை அம்மையார் விருப்புடன் வரவேற்றனர்; பாதங்களை விளக்க நீரைப் பண்புடனே முன்னளித்தார் ;

'உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோர்'

ஆதலின், அழிபசி தீர்க்கப் பரிகலம் திருத்தி இன்னடிசில் படைத்திட்டார். விருந்தனர் வந்த வேளை திருவமுது செய்திருக்கக் கறியமுது மட்டும் செய்து

அமையாச் சமயமாய் இருந்தது. என்ருலும், அம்மையார் உள்ளம் தடுமாற்றம் அடையவில்லை. 'அறிவுடையார் எல்லாம் உடையார்' அல்லரோ? 'இல்லது என் இல்லவள் மாண்பாளுல்?' அவர் இல்லாளன் அனுப்பிய நல்ல மாங்கனிகள் இரண்டனுள் ஒன்றை அடியவர்க்கு இனிதாகப் படைத்தார். விருந்தினர் உண்டு மகிழ்ந்த இன்முகங் கண்டு அம்மையாரும் ஈத்துவக்கும் இன்பத்தில் திளைத்தார். வந்த விருந்தினரும் அம்மையாரை வாழ்த்திச் சென்றனர்.

பரமதத்தன் உற்ற பெரும்பகலின்கண் ஓங்கிய பேரில் புகுந்தனன்; பொற்புற நீராடினன் : அடிசில் அருந்தச் சென்றனன். இவையே பரமதத்தன் செயல்களென்று ஆசிரியர் சேக்கிழார் கூறுகிருர். ஈண்டுப் பரமதத்தன் பண்பாட்டைப் படம் பிடித்துக் காட்டுகிருர் பாவலர். பகற்போது நீராடினன் என்றதனுல் காலையில் குளிக்கும் கடமை அற்றவன் பரமதத்தன் என்பது அறிய வருகிறது. நீராடிய பின்பேனும் பூசுவன பூசிப் போற்றுவன போற்றும் பொற்பு அற்றவன் என்பது நீராடிய பின் நேரே சமையல் அறையுட்புக்கமையிலிருந்து ஆணித்தரமாக விளங்குகிறது. ஆகவே, அன்னுன் இயல்புக்கும் அம்மையார் பண்புக்கும் எத்துணை வேற்றுமை காணக் கிடக்கிறது என்பதை அறியலாம் அன்ருே? இங்ஙனம் அறிந்தால், அவனைக் காளைக்கு உவமையாகக் கூறியது பொருத்தமன்ருே?

பரமதத்தன் முன் பரிகலம் திருத்திப் புனிதவதியாரும் உணவு பரிமாறினர். முன்னனுப்பிய மாங்கனி

களுள் எஞ்சிய ஒன்றையும் முன் வைத்தார். கணவனும் மகிழ்வுடன் உண்டலைக் காண நுண்ணிதின் மகிழ்ந்தது புனிதவதியார் முகனும். பரமதத்தன் மனைவியார் படைத்த மதுரமிக வாய்த்த மாங்கனியைச் சுவைத்தான். சுவையைத் துய்த்த தார் வணிகன், 'மேலும் சுவைக்க இனியதொரு பழம் உளது. அதனையும் இடுக,' என இயம்பினுன். பழம் சுவையாய் இருந்தது. அச்சுவையைத் தன் வாழ்க்கைத் துணைவியும் துய்க்க வேண்டுமென்று எண்ணினுன் அல்லன் காளை வணிகன். புள்ளினமும், விலங்கினமும் தம் துணையிடத்து வைத்த அன்புதானும் இவன்பால் இல்லை போலும்!

'துடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்
பிடியூட்டிப் பின்னுண்ணுங் களிறு'

'அன்புகொள் மடப்பெடை அசைஇய வருத்தத்தை
மென்சிறக ரால்ஆற்றும் புறவு'

'இன்னிழல் இன்மையால் வருந்திய மடப்பிணைக்குத்
தன்னிழலைக் கொடுத்தளிக்குங் கலை'

என்னும் இவ்வடிகளின் திரண்ட பொருள், 'உடுக்கை போன்ற கால்களையுடைய யானைக் கன்று கலக்கிய சிறுநீரைத்தான் குடிக்க முயலாமல், முன்னர்த்தன் துணையாகிய பெண் யானை பருகும்படி செய்து பின் மிகுந்ததை ஆண் யானை குடித்தது,' என்பதும்; 'பாலைவனம் வழியே சென்றுகொண்டிருந்த ஆண் புறு, தனது பெண் புறு வெம்மையால் வருந்துவதைக் கண்டு தன் சிறகால் காற்றை எழுப்பி, அதன் வருத்தத்தைப் போக்கியது,' என்பதும்; 'ஆண் மான், பாலைவனம் வழியே சென்று

கொண்டிருந்த போது, தனது துணையாம் பெண் மான் வெம்மையால் நிழல் காணுது துன்புறுதலைக் கண்டு தன் நிழலில் அதனை நிறுத்தி அதன் வருத் தத்தை நீக்கியது,' என்பதும் ஆகும் என்று அன்றோ கற்ருர் ஏத்தும் கலித்தொகை என்னும் நூல் கூறு கிறது ?

'சுனைவாய்ச் சிறுநீரை எய்தாதென் றெண்ணிப்
பிணைமான் இனிதுண்ண வேண்டிக் – கலைமாத்தன்
கள்ளத்தின் ஊச்சும் சுரமென்பர் காதலர்
உள்ளம் படர்ந்த நெறி.'

என்று அன்ருே ஐந்திணை ஐம்பது என்னும் நூலும் அறைகிறது? இதன் பொருள் யாது? 'ஆணும் பெண்ணுமாக இரு மான்கள் பாலைவனத்திலே போய்க்கொண்டிருக்கின்றன. இரண்டிற்கும் நீர் வேட்கை மிக்கது. அங்கு ஒரு நீர்க்குழி இருந்தது. ஆனல், அதில் நீர் மிகுதியும் இல்லை. அந்த நிலையில் ஆண்மான், தான் நீரைக் குடிப்பதுபோல வாய்வைத்துப் பாவனை செய்து, பெண்மானைக் குடிக் கச் செய்தது,' என்பது. இஃதன்ருே அன்பின் மாட்சி! இப்பண்பாடு அவன் பெற்றிலன் என்பதை விளக்க அன்ருே அவனைக் காளை என்ருர் கவிஞர்?

புனிதவதியார் அது போது யாது செய்தார்? 'பெண்டிர்க்கழகு எதிர் பேசாதிருத்தல்,' என்னும் சீரிய கொள்கையராய் அணையதொரு மாங்கனியைக் கொண்டுவர அணைவார் போல உட்புக்கார்; துயர் உற்ற இடத்து உதவும் பரமனை உளத்துக்கொண்டு போற்றினர். ஏதோ தெய்வத் தவக் குறிப்பால் ஒரு மாங்கனி அவ்வம்மையார் அகங்கையில் வந்

தூற்றது. அவர் அதனைக் கொணர்ந்து அன்புடன் கணவனுக்குப் படைத்தனர். அதனையும் உண்ட பரமதத்தன், 'இது முன் தந்த மாங்கனி போல்வ தன்று. இதன் சுவை முன்னையதினும் விஞ்சி நிற்கிறது. இஃது ஏது? உண்மையினை ஒளியாமல் உரைக்க,' என்று உறுமினன்.

அம்மையார் இன்னது செய்வதென்றுணராராய், இடர்க்கடலில் இடர்ப்படுவாரானார்; 'அருளுடையார் அளித்தருளும் செவ்விய பேர் அருள்' என்று விளம்பவும் அஞ்சினார்; மறைத்துச் சொல்லவும் மயங்கினார். இவ்வாறு இருபாற்கவர்வுற்று இடையூசல் ஆடி ஒருபாற்படாமல் இருந்து, முடிவில் கற்பு நெறி கடவாத காரிகையார் ஆதலின், 'செய்த படி சொல்லுவதே கடன்,' என்று நடந்தவற்றை நவின்றார். இதனைக் கேட்ட வணிகன் தெய்வத் திருவருளில் ஐயம் கொண்டான். 'மாதே, நீ ஈசன் அருளால் மாங்கனி பெற்றது வாய்மையானால், மற்றொரு கனியையும் வரவழைப்பாய். இன்றேல், நின்னுரையை யான் ஏலேன்,' என்றனர்.

பரமதத்தனைப்போலப் புனிதவதியார் ஈசன் அருளில் ஐயம் கொள்ளும் நெஞ்சம் வாய்ந்தவர் அல்லர்; இறைவன் அருளில் என்றும் உறுதி உடையவர். அவர் உள்ளே சென்றார்; வேண்டுவார் வேண்டுவதே ஈயும் சிவ பெருமானை உளத்தமைத்து, 'உற்ற இடத்து உதவும் உத்தமரே, மற்றொரு மாங்கனியை ஈங்களித்து அருளீரேல், என்னுரை பொய்யாகும்,' என்று வேண்டி நின்றார். அல்லல் தீர்த்து ஆளவல்ல ஆண்டவர் அருளால், மற்றுமொரு

மாங்கனி அம்மையார் கையில் வந்துற்றது. அதனை அம்மையார் தம் கணவனுக்களித்தனர். அதனை வியப்புடன் பெற்ற வணிகன் நயப்புடன் நோக்க, அஃது அவன் கையினின்று மறைந்தது. கைக்கனி மறையவே, காளையாம் வணிகன், அச்சமும் துணுக்கமும் அகத்துக்கொண்டான். அக்கணமே அம்மையார் ஓர் அணங்கு (தெய்வப் பெண்) என்று அகத்து எண்ணினான்; தன் மனைவியார் என்பதை மறந்து போனான்; 'இனி இம்மாதுடன் வாழ்வு நடத்தேன்!' என்று உளத்தில் கொண்டவனாய், பிரியும் எண்ணமே ஓங்க இருந்தான்; நடந்த செயலை எவர்க்கும் நவின்றானும் அல்லன்.

திரைகடல் ஓடித் திரவியம் தேடும் வழக்குடைய மரபினைச் சார்ந்த வணிகன் ஆதலின், அதனையே காரணமாக அகத்துள் கொண்டு, 'பரவைமீது (கடலின்மீது) படர்கலம் செலுத்திப் பணத்தைத் தேடப் போகின்றேன்,' என்று புனிதவதியார்க்குப் பகர்ந்து, வங்கம் ஏறி வழிக்கொள்ளலானான். புனிதவதியாரும் கணவன் புகன்றது மெய்யுரையே என்று உளத்துக்கொண்டு, உத்தரம் கொடுத்தனர்.

'பொய்யுடை ஒருவன் சொல்வன் மையினால்
மெய்போ லும்மே மெய்போ லும்மே'

என்பது பொய்யாகுமா?

வேற்று நாட்டிற்கு விரைந்து சென்ற வணிகன், வாணிகம் செய்து செல்வம் பலவும் சேரத் திரட்டினான். செல்வம் திரட்டிய பரம தத்தன், காரைக்

காலுக்குள் கால் வைக்கவும் கூசினான்; அங்குச் சென்றால் அணங்கு அணங்கும் (வருத்தும்) என்று அச்சம் கொண்டான்; காசுடன் சென்று பாண்டி நாட்டினை அண்மினன்; திரட்டிய செல்வத்தை நிதி சேமிக்கும் இடத்தில் உய்த்தனன்.

'பொருள்தனைப் போற்றிவாழ்'

என்னும் பொன்னுரைக்கிணங்கத் தான் ஈட்டிய பொருள் வளர்ச்சியில் வாளா இருக்கப் பொருத னாய், அது வட்டி எனவே நிதி சேமிக்கும் இடத்தில் உய்த்தான் போலும்! அவ்வாறு செய்தான் என்பதை,

'ஒப்பில்மா நிதியம் எல்லாம் ஒருவழிப் பெருக உய்த்து'

என்னும் அடி விளக்குகின்றது. இதனால், இக் காலத்து நிதி சேமிப்பு முறை, அக்காலத்தும் இருந்த தென்பது தெளிவாகிறது. செல்வத்திற்கு வேண்டிய செயலைப் புரிந்த வணிகன், தன் வாழ்நாளை இன்புடன் கழிக்க ஆண்டே தன் குலத்தைச் சார்ந்த நலன் தரும் நங்கை ஒருத்தியை நன்மணம் புரிந்த னன்; மணம் புரிந்ததன் பயனாகப் பெண் மகவொன் றும் பெற்றெடுத்தான்; பெற்ற மகவுக்குப் புனிதவதி என்ற திருப்பெயரையே சூட்டினான்; பரமதத்தன் மகவும் மனைவியும் மனம் மகிழ்வு எய்தி நிற்க, மதுரை மாநகரில் இனிது வாழலுற்றான்.

புனிதவதியார் கணவன் வருகை நோக்கித் தம் கற்பு நெறி கடவாது வாழ்ந்து வந்தனர். கணவன் கன்னி நாடெய்திக் (பாண்டி நாடு) கன்னி ஒருத் தியை மணந்து களிப்புடன் வாழ்வதைச் சிறிதும்

அறியார் அம்மையார். பல நாள் சென்றேனும் உண்மை வெளியாதல் இயல்புதானே? பரமதத்தன் செயல் பரவலாயிற்று. அவனது செயலைக் கேள்வியுற்ற அம்மையாரின் கிளைஞர் சிறிதும் காலந் தாழ்த்தாது நேரே அவனைக் காணக் கன்னி நாடு அடைந்தனர்; உண்மையை உணர்ந்தனர்; எனினும் அவனுடன் உரையாடாது, அவன் இருந்த இடத்தில் நற்றிருவனைய நங்கையாரை நண்ணுவிப்பதுவே கடன் என்று முடிவு செய்தனர்; மடநடை மயில் அன்னாரை மாமணிச் சிவிகை ஏற்றி, மதுரை மாநகரம் நோக்கிப் புறப்படலாயினர். அம்மையார் இளமை மாறா இன்னழகுடையர் என்பதைச் சேக்கிழார்,

“ தாமரைத் தவிசில் வைகும் தனித்திரு ”

என்னும் தொடரால் குறிப்பது, இன்பம் துய்க்கும் இந்நிலையில் பரமதத்தன் நீங்கிச் சென்றது துன்பம் உறவேண்டிய செயல் என்பதை அறிவிக்கவே ஆகும். சுற்றமும் நட்பும் சூழ யாவரும் மதுரையை அண்மினர்; தம் வருகையைப் பரமதத்தனுக்கு ஆள் போக்கி அறிவித்தனர்.

புனிதவதியாரின் வருகை கேட்ட பரமதத்தன், இடியோசை கேட்ட அரவம் போல இடர் உற்றான்; “ இதற்கு என் செய்வது?” என்று ஏங்கினான்; “ மறுமணம் கொண்டது மாசாயிற்றே!” என்று மயங்கினான்; பிறகு ஒருவாறு தேறி, “ நேரே சென்று புனிதவதியார் பொன்னடி பணிந்து போற்றுதல் செய்வோம்,” என்று முடிவு கொண்டான். கோயில் வழிபாட்டிற்குப் போவான்போலக்

குளித்து, தூய ஆடையும் அணிந்துகொண்டான், மனைவியும் மகவும் அவ்வாறே செய்துகொள்ளவும் கட்டளை பிறப்பித்தான். பின்பு மூவரும் புனிதவதி யார் தங்கியிருந்த இடத்திற்கு நடந்து போந்தனர்.

சேய்மையில் தம் கணவனும், அவனோடு காரிகை ஒருத்தியும், காரிகையோடு அழகு மிக்க மகவும் வருவதைப் புனிதவதியார் கண்ணுற்றார். அம்மையார் பார்த்த பார்வை நேரிய பார்வையன்று; மருண்ட பார்வை; அச்சப் பார்வை; அவலப் (துன்பப்) பார்வை. "இஃது என்னே! என்னை விடுத்து வேறொரு மங்கையை மணந்து, மகவும் பெறுதற்கு யான் அத்துணைத் தீங்கு யாது செய் தேன்?" என்று எண்ணி, உள்ளம் துடிக்கப் பார்த் தார். அப்பார்வையோடிருந்த அவ்வம்மையாரை 'மானிளம் பிணைபோல் நின்ற மனைவியார்' என்று பாவாணர் இசைக்கின்றார்.

மான் மருண்டுதானே பார்க்கும்! மானிளம் பிணையாவது பெண்மான். இவ்வாறு மருட்சி கொண்ட நிலையில் மாதர்களுக்கு மானின் கண்களை உவமை கூறுவது மாபெரும்புலவர்க்கு வாய்த்த தொரு மரபாகும். திருஞான சம்பந்தர் இளைய கோலத்துடன் முதுமை நிறைந்த பலரோடு பாண்டி யன் அவைக்களத்து வீற்றிருக்கையில், அம்முதிய வரால் பாலருவாயரான திருஞானசம்பந்தருக்கு ஏதேனும் இடுக்கண் நிகழுமோ என்றெண்ணி இருந்தார் மங்கையர்க்கரசியார் என்பதை அகத்து எண்ணத்தை முகத்தால் அறிந்த தோணிபுரத்

தோன்றலார் திருஞானசம்பந்தர் அவ்வம்மையாரைப் பார்த்து,

' மானினேர்விழி மாதராய்வழு
திக்கு மாபெருந் தேவிகேள,
பானல் வாய்ஒரு பாலன் ஈங்கிவன்
என்று நீபரி வெய்திடேல் '

என்று பாடினார். அஃதாவது, ' மானின் கண் போன்ற கண்ணைப் பெற்ற அம்மையீர், பாண்டியனுடைய வாழ்க்கைத் துணைவியீர், நான் கூறுவதைக் கேளும். பால் மணம் மாறாத நல்ல வாயுடைய சிறுவன் என்று நீர் என்னை எண்ணி என்னைப் பற்றி இரங்க வேண்டா,' என்பது.

மருட்சியுற்ற பார்வையோடிருந்த மங்கையர் திலகத்தின் மலரடி முன்னே பரமதத்தன் தன் மனைவியுடனும் மகவுடனும் வீழ்ந்து, " அம்மையீர், யான் உமதருளால் வாழ்வேன். இவ்விளங்குழவி உமது நாமம் (பெயர்) தாங்கிய வாழ்வுடையதாகும்," என்று பணிமொழி பகர்ந்து எழுந்தான். கணவன் வணங்குவதை மனைவியார் ஏற்பாரா? இஃது அடாத செயல் அன்றோ?

ஈண்டுப் பரமதத்தன் செயல் புறக்கணித்தற்குரியதே. இவ்வணக்கத்தைப் புனிதவதியார் ஏற்றிலர் என்பதைச் சேக்கிழார் பெருமானார்,

' கணவன்தான் வணங்கக் கண்ட காமர்பூங் கொடியனாரும்
அணைவுறுஞ் சுற்றத் தார்பால் அச்சமோ டொதுங்கி நிற்க'

என்று பாடி அறிவிக்கின்றார். ஈண்டு,

" காமர்பூங் கொடியனார் "

என்று புனிதவதியாரைப் புகன்றதனால், காற்று மோதக் கலங்கும் கொடியே போலக் கணவன் வணங்கக் காரிகையார் கலங்கினார் என்பது சிந்தித் தற்குரிய உட்பொருளாகும்.

பரமதத்தனது செயலைக் கண்ட உறவினர் வெள்கினர் ஒருபால்; வியப்புற்றனர் மற்றொருபால்! "பரமதத்த, நீ மருள் ஏறப்பெற்றாயோ? உன் திருமனைவியை வணங்குவதென்?" என்று கேட்டனர்

"உறவின் முறை உத்தமர்களே, யான் மருள் உற்றேன் அல்லேன்; தெளிவே உற்றுளேன். இம் மாதரசியார் மானிடர் அல்லர். நற்பெருந்தெய்வம் என்பதை நான் அறிந்தேன். பெற்ற இம்மகவுக்கு யான் இவ்வம்மையார் பேரே இட்டுள்ளேன். ஆதலாலே, பொற்பதம் பணிந்தேன். நீவிரும் போற்றுதல் கடமையாகும்," என்று கழறினான். இவ்வாறு பரமதத்தன் கூறக் கேட்ட உறவினர்கள் உணர்த்துவதும் உணருவதும் இன்ன என அறியாராய் வாளா இருந்தனர்.

இவற்றை எல்லாம் ஆழ்ந்து நோக்குங்கால் பரமதத்தனும் புனிதவதியாரும் கொண்ட மணம் எத்துணைப் பொருத்தமுடையது என்பதைச் சிந்திக்க வேண்டாவா? அச்சிந்தனையின் முடிவு யாதாக முடியும்? இது பொருந்திய மணம் அன்று; பொருந்தா மணமே என்பது தானே தெரியவரும். அதனை முன்கூட்டி அன்றே தொண்டர் சீர் பரவும் தொழில் புலவராகிய சேக்கிழார்,

"தளிரடிமென் னகைமயிலைத் தாதவிழ்தார்க் காளைக்குக்
களிமகிழ்சுற் றம்போற்றக் கல்யாணம் செய்தார்கள்"

என்று உவமை முகத்தால் உணர்த்திக் காட்டினுர்?

கணவனின் சொல்லையும் செயலையும் கூர்ந்து நோக்கினுர் புனிதவதியார். புனிதவதியார் அகத்து அழகுடையார் போலப் புறத்தும் அழகுடையவர். அவரது அழகை எண்ணிப் பாடுகின்றுர் அருண் மொழித்தேவர். அம்மையாரைக் குறிக்கும்போதெல் லாம் கவின் (அழகு) பொலியவே கவியும் பாடுகிறுர்;

"திருமடந்தை அவதரித்தாள் எனவந்து
பொங்கியபே ரழகுமிகும் புனிதவதி யார்பிறந்தார்"

எனப் பிறப்பைப்பற்றி மொழிந்தார் முன்னே;

'அணிகிளர் மெல்அடி'

என்று திருவடியைப் புனைந்தனர்;

'அழகின் கொழுந்து எழுவதென வளர்வார்'

என்று வளர்ப்பை வரைந்தார்;

'நுசுப்பு (இடை) ஒதுங்கு பதம்'

என்று இடையின் அழகை இயம்பிப் போந்தார்;

'நல்லவென உறுப்புநூ லவர்உரைக்கும் நலம்நிரம்பி
மல்குபெரு வனப்புமீக் கூரவரு மாட்சி'

என உறுப்பழகு அனைத்தினையும் ஒருங்கே உரைத் திட்டார்;

'தளிரடிமென் னகைமயில்'

என்று சாயல் அழகைச் சாற்றி முடித்தார்.

'பூப்பயில்மென் குழல்மடவார்'

'மணமலியும் மலர்க்கூந்தல் மாதரார்'

'பூங்குழலார்'

என்று கூந்தல் சிறப்பைக் கூறிப் போந்தார். மற்றும் அம்மையாருக்கிருந்த செல்வ நிலையோ செப்பத்தரமன்று. அம்மையார் ஓங்கிய பேரில்லில் வாழ்ந்தனர். மேலும், தம்மை நாடி வந்தவர்க்கு நல்ல திருவமுதளித்தும் செம்பொன்னும் நவமணியும், செழுந்துகிலும் முதலான வேண்டுவ கொடுத்தும் வாழ்ந்தனர் என்பதையும் நன்கு அறிந்தோம். இவ்வாறு உருவும் திருவும் ஒருங்கே அமையப்பெற்ற அம்மையார் கணவனுக்கு உகந்தது ஆகாத வாழ்வை உடனே வெறுத்தார்; தமக்கு அமைந்த வனப்புப் பிறர் மகிழ இன்றிக் கணவனுக்கென அமைந்ததென்று எண்ணி,

'இவனுக்காகத் தாங்கிய வனப்பு'

என்று கூறி அதனை எள்ளினார்; எங்கும் நிறைந்த இறைவரை நோக்கினார்; 'இறைவா, இத்தசைப் பொதி (மாமிசப் பிண்டம்) கழித்துப் பேய் வடிவு அடியேனுக்குப் பாங்குற அளித்தல் வேண்டும்' என்று வேண்டி நின்றார்; எண்ணிய, எண்ணியாங்கு எய்தினார்; வானமும் மண்ணும் எல்லாம் வணங்கும் பேய் வடிவம் உற்றார். அம்மையார் நிலையைக் கண்ட உறவினரும், நண்பரும் பரமதத்தன் கூறியவை உண்மை என்று உணர்ந்தனர். அவர்களும் தொழுது அகன்று போனார்கள். அம்மையார் கருவிலே திருவுடையார் ஆதலின், அப்பொழுதே இறைவர்மீது பாடவும் தொடங்கினார்.

• பிறந்து மொழிபயின்ற பின்எல்லாம் காதற்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன்—நிறந்திகழும்
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே!
எஞ்ஞான்று தீர்ப்ப திடர்'

என்பது முதலாக நூறு பாடலைப் பாடினார். இதன் பொருள், 'விடம் பொருந்திய கழுத்தையுடைய தேவர்களின் தலைவனான சிவபெருமானே, நான் பிறந்து பேசத் தொடங்கிய நாள்முதல் உன் திருவடிகளில் அன்புகொண்டேன். ஆகவே, என் துயரை எப்போது தீர்க்கப்போகிறாய்?' என்பது. இந்நூல் அற்புதத் திருவந்தாதி என வழங்கப் பெறும். பின்னர் அம்மையார் இரட்டை மணிமாலை என்னும் இருபது பாடல் அடங்கிய நூலையும் பாடி, இறைவன் இருந்த கைலை நோக்கிக் கடுகிச் செல்வாராளுர். அவரது வருகையை இமயவல்லி (பார்வதி தேவியார்) இனிதுற நோக்கி, இறைவனைப் பார்த்து, "ஏற்பின் யாக்கை (எலும்பு வடிவமான இந்த உடல் பெற்ற உருவின்) அன்பு இருந்தவாறு என்னே?" என்று வினவ, பரமர், "உமையே, இவள் நம்மைப் போற்றும் அம்மை. இப்பெருமை சேர் வடிவும் நம்மை வேண்டியே பெற்றதாகும்," என்றருளிச் செய்யப் புனிதவதியாரும் அருகே சென்றனர். இறைவர், "அம்மையே, வருக!" என்றார். இறைவர் தாயும் இல்லாதவர்; தந்தையும் இல்லாதவர்; தாந்தோன்றித் தம்பிரான். ஆதலின், அவருக்கு "அம்மையே" என அழைக்கும் வாய்ப்பு இதுகாறும் அமைந்திலது. புனிதவதியார் கைலை புக்கபோதுதான் இப்பேறு அவருக்குக் கிடைத்தது. ஆகவே, அன்றே இறைவர் தனையர் என்னும்

தனிப்பெருமையுற்ருர். புனிதவதியார்; மணைந்தும் மகப்பெரு நிலையில் வாடிய வாட்டம் தீர, இறைவரே தம்மை அம்மை என்றழைக்கும் தாய்மைப் பண்பையும் தாங்கலாயினர்.

இறைவர் அம்மையாரை "எதுவேண்டுமோ, அது வேண்டுக," என்று விளம்பப் புனிதவதியாரும்,

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டு கின்ருர்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும் போதுன் அடியின்கீழ் இருக்க என்ருர்.'

இறைவரும் இவ்வரங்களை ஈந்ததோடு நில்லாது, "திருவாலங்காடென்னும் திருப்பதியில் நீ சென்று எம் ஆனந்தக் கூத்தினைக் கண்டு அகங் களிக்கப் பாடுவாய்," என்றும் பணித்திட்டார். அம்மையார் அப்பணி, தலைமேற்கொண்டு, தலையன்பால் நடந்து, திருவாலங்காடடைந்தார்; ஆனந்த நடனம் கண்டார்; அகத்தானந்தம் புறத்துப் பொழிவதுபோல, மூத்த திருப்பதிகம் மொழிந்திட்டார். இவ்வம்மையாரது திருப்பாடல்கள் சைவத் திருமுறை பன்னிரண்டனுள் பதிஞேராம் திருமுறையில் விளங்கும் பெருமையுடையன.

2. உண்மைத் துறவுடைய உத்தமியார்

துறவு என்றதும் ஒரு சிலருடைய உள்ளம் துணுக்குறுதல் கூடும். ஏன்? 'துறவு என்பது மனைவி மக்களையும், வீடு வாயில்களையும் விட்டுக் காட்டிற்குச் சென்று கடுந்தவம் செய்வதன்ரே? பனி நாளினும், மழைநாளினும், கோடை வெயிலி லும் முத்தி அடைவதற்காகத் தம்மைத் தாமே சாலவும் துன்பத்திற்குள்ளாக்க நேருமே!' என்னும் எண்ணந்தான் அத்துணுக்கத்திற்குக் காரணம். ஆனல், அவ்வாறு நெஞ்சம் அஞ்சவேண்டுவ தில்லை. நம் தமிழ் நூல்கள் தவத்தைக் கடுமையான தென்று கழறவுமில்லை. வள்ளுவருடைய வாய் மொழியைப் பாருங்கள்! அவர் தவத்தைப்பற்றி என்ன கூறுகிருர்?

> 'உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
> அற்றே தவத்திற் குரு'

என்று அன்ரே கூறுகிருர்? அவர் தவத்தின் இலக் கணத்தை இக்குறளில் தெளிவாக எடுத்துக் காட்டி ஞர். இதில் காவி உடை உடுத்த வேண்டு மென்ரே, காட்டிற்குச் செல்ல வேண்டுமென்ரே கழறக்காணேம். இதில் கூறியிருப்பவை எல்லாம், 'எவன் ஒருவன் தனக்கு வந்த துன்பத்தை ஏற்றுப் பொறுத்து வருகிருனே, எந்த உயிர்க்கும் தீங்கு செய்யாதனய் இருந்து வருகின்ருனே, அவனே தவ முடையன்,' என்பனவே. இத்தகைய உண்மைத்

துறவு மேற்கொண்டு விளங்கிய அம்மையார் ஒருவரைப்பற்றி இதிற்காண்போமாக.

தமிழ் நாடு நாற்பெரும்பிரிவுகளையுடையது. அவை பாண்டி நாடு. சோழநாடு, சேர நாடு, தொண்டை நாடு என்பன. இந்நாற்பகுப்புடன் ஐந்தாவது பகுப்பாக 'நடு நாடு' என்பதும் ஒன்று உண்டு. இது சோழநாட்டிற்கும் தொண்டை நாட்டிற்கும் இடையே இருத்தலின், இதனை நடு நாடு என்று நவின்றனர் போலும்!

இந்நாட்டிற்கு அழகு செய்யும் உள் நாடுகளுள் ஒன்று திருமுனைப்பாடி நாடு. எல்லாத் துறையிலும் இது முன்னிற்றலின் இப்பெயர் பெற்றதோ என்னவோ, அறியோம்.

திருமுனைப்பாடி நாடு மிகத் தொன்மையானது. இதிற்குடிவளம் சிறந்திருந்தது. அக்குடி மக்கள் ஒழுக்கத்தில் தலை சிறந்து விளங்கினார்கள். 'திருக்கோயில் இல்லாத்திருவில் ஊர்' என்று செப்ப இயலா நிலையில் கோயில்களையும் தன்னகத்தே கொண்டது இந்நாடு.

நாட்டுக்கு எல்லா நலன்களும் இருப்பினும், ஆற்று நலன் இன்றேல், அழகும் இராது; வளமும், இராது. இதனால் அன்றோ,

'ஆறில்லா வூருக் கழகுபாழ்'

என்று ஔவையாரும் அறிந்து கூறினர்? அந்தக் குறையும் இந்த நாட்டிற்கு இல்லை. இப்பதி பெண்ணை நதி பாயும் பெருமை பெற்றது. இது

பாய்ந்து வரும் வேகத்தால் வயல்களில் உள்ள முத்துக்களையும் காட்டு மலர்களையும் தன் அலைகளாகிய கைகளில் சுமந்து பாய்ந்துகொண்டிருக்கும்.

இங்ஙனம் வற்றுநீருடன் வளத்தோடு பெண்ணையாறு பாய்வதால், இப்பதிக்குச் செல்வச் சிறப்பில் எங்ஙனம் குறை ஏற்படும்? வெள்ளிய தகடு போன்று வரால் மீன்கள் வாய்க்கால்களில் துள்ளி விளையாடின. கமுகு அன்ன (பாக்கு மரம் போன்ற) கவினுடன் வளர்ந்த கரும்புகள் தேனைச் சிந்திக்கொண்டிருந்தன. கதிர்ச்சாலிகள் நென்மணிகளில் நிரம்பப் பாலினைப் பெற்று மிளிர்ந்தன. தோட்டங்களில் தென்னைபோலக் கமுகுகள் தோற்றமளித்தன. உழவர் உழுத சால் வழிகளில் முத்துக்கள் சிந்திக் கிடந்தன. நீர் வளத்தால் இப்பிகள் கருவுற்று ஈன்ற முத்துக்களே அங்குச் சிந்தி இடம் பெறுதற்குரியன ஆயின. வயல்களில் உழத்தியர் களையெடுப்பர். களைகளாகக் காணப்படுவன புல்லும் அல்ல; பூண்டும் அல்ல; செங்கழுநீரும் செந்தாமரையுமே ஆம். அவற்றையே மள்ளர் பிடுங்கி எறிய, அவை நிலங்களின் வரம்புகளில் மலிந்திருக்கும்.

மாடமாளிகைகளிலும் கூடகோபுரங்களிலும் வாழும் மயிலன்ன மங்கையர் குளித்துக் கூந்தலை ஆற்ற நிலா முற்றம் செல்வர். ஆண்டுத் தம் குழலுக்கு அகிற்புகையும், ஆரப் (சந்தனம்) புகையும் ஊட்டிக் கூந்தலை உலர்த்திக்கொண்டிருப்பர். இல்லங்களில் வாழும் நல்லெண்ணமுடையவர்கள் விருந்தளிக்கும் உள்ளம் படைத்திருந்தார்கள்.

இந்நாட்டின் இனியவளம் நாற்படையின் தோற்றத்தை நாட்டி நின்றது. வாழைக்குலைகள் நன்கு முற்றி நீண்டு தொங்கிக்கொண்டிருந்தன. செந்நெற்கதிர்கள் தம் கதிர்க்கொத்தினை அடர்த்தியாகக் கொண்டு தலை சாய்ந்து காற்றால் அசைப்புண்டு விளங்கின. பெருமித நடையுடன் பெரும்பாரங்களை ஏற்றிச்செல்லும் வண்டிகள் தெருத்தோறும் சிறக்கப் போய்க்கொண்டிருந்தன. சோம்பல் இன்றிச் சுறுசுறுப்புடன் பல்பணி புரியும் வினைஞர், அணியணியாய்ச் சென்றுகொண்டிருந்தனர். இந்நால்வகைத் தோற்றம் யானைப்படை, குதிரைப்படை, தேர்ப்படை, காலாட்படைகளின் நினைவினை எவர்க்கும் எழுப்பாமல் இராது.

குளங்களில் எருமைகள் படியும்; பின்னர் மலர் மேய்ந்து பசி தணிந்து மகிழ்வுடன் போவதும் உண்டு. அவை கருநிறத்துடன் பெரிய குளங்களில் படிவது, கடலில் கருமுகில்கள் நீர் பருகச் செல்வது போல இருந்தது. கருமேதிகள் குளத்தில் மலரை மேய்கையில் வரால் மீன்கள் அவற்றின் மடியை முட்டும். அதனால், அவற்றின்பால் பெருகும்.

இன்னோரன்ன எழிலும் பொழிலும் பொய்கையும் நிறைந்த திருமுனைப்பாடி நாட்டில் திருவாமூர் என்பது ஒரு சிற்றூர். இது சிறு பதியே ஆனாலும், சீரிய பதியே. இவ்வாறு பல்வளங்களும் பல்கப் பெற்ற இத்திருவாமூரில் தாளாளராகிய வேளாளர் குலத்தில் புகழனார் என்னும் புண்ணியனார் வாழ்ந்து வந்தார். அவர் விருந்தளிக்கும் விருப்பினராய் மனையறத்தை மேற்கொண்டார். அவ்வறத்தினை

ஆசின்றி ஆற்ற நற்குணவதியாராய நங்கையார் ஒருவரை மணந்து, இல்லற நெறியை நல்லறமாக நடத்திவந்தனர். அவ்வம்மையார் மாதர்க்கெல்லாம் இனியராய் இருந்த காரணத்தால், மாதினியார் என்னும் திருப்பெயருடன் திகழ்வாராயினர். புகழும் இனிமையும் ஒன்று சேர்ந்தே, புகழனராகவும் மாதினியார் ஆகவும் தோன்றின போலும்!

மனையறத்தை மாண்புற நடாத்திய அம் மாபெருந்தம்பதிகள் மனை மாட்சிக்குரிய நன்கல மாகும் நல்ல பிள்ளைப்பேறும் வாய்க்கப் பெற்றனர்.

பிள்ளைப்பேறு வாய்க்கப் பெருத பெண்ணை, மலடி என்று மாநிலம் பழிக்கும். ஒரு மகவை ஈன்ருலும், 'வாழை மலடி' என்று வையகம் தூற்றும். அக்குறை நேராவண்ணம் மாதினியார் நன்மக்கள் இருவரை நலம்பெற ஈன்றனர். இரு வரும் இரு கண்மணி அனையர். அவ்விரு குழவி களுள் முன்னது பெண் மகவு; பின்னது ஆண் மதலை. பெண் மகளார் கண் கொள்ளாக் கவினு டையவராய்ச் செங்கமலம் திகழவரும் திருவனைய வராய் விளங்கினர்; புகழனர் குலத்திற்கே திலக மெனத் திகழ்ந்த காரணத்தால், திலகவதியார் என்றே திருப்பெயர் சூட்டப்பெற்ருர். ஆண் மக வுக்கு மருள் நீக்கியார் என்னும் மாண்புறு பெயரைச் சூட்டினர்.

திலகவதியார் குழவிப்பருவம் கடந்து குமரிப் பருவம் குறுகினர். குமரிப் பருவம் உற்ற திலகவதி யாருக்குத் திருமணம் முடிக்கப் புகழனர் திருவுளம்

கொண்டார். அவரது திருவுளத்திற்கேற்பக் குலத்தாலும் நலத்தாலும் சிறந்த கலிப்பகையார் என்னும் கவினுடைய வீரருக்குக் கடிமணம் செய்விப்பதென முடிவு செய்தனர்.

கலிப்பகையார் அமரில் அரியேறு போன்று, தம் ஆற்றலை விளைப்பவர்; போர் என்ன வீங்கும் பொலங் கொள் தோளினர்; மறத்தில் (வீரத்தில்) சிறந்தார் ஆயினும், அறத்தினின்றும் சிறிதும் வழுவாதவர்; தாம் வழிபடும் புராரியினிடத்தும் (முப்புரங்களை அழித்த சிவபெருமான்) தொழில் புரியும் புரவலரிடத்தும் (அரசரிடத்தும்) பற்று மிக வாய்க்கப் பெற்றவர். இன்னோரன்ன பண்பு வாய்க்கப் பெற்றவரைத் திலகவதியார் மணப்பது சாலவும் பொருத்தமுடையதே.

திருமணம் நிச்சயமாகியது. இதற்கிடையில் ஒரு நிகழ்ச்சி நிகழ்ந்தது. கலிப்பகையார் எந்த அரசனிடம் படை வீரராய் இருந்தனரோ, அப்பார்த்திபனுக்கும் வடபுல வேந்தனுக்கும் பெரும் பகை மூண்டது. அவ்வடபுலவேந்தனைப் புறமுதுகு காணப் பெரும்படை திரட்டிக் கலிப்பகையாரே போக நேர்ந்தது. வேந்தற்கு உற்றுழி உதவலையே இவர் உயர்பணியாகக் கருதினதால் அன்றோ, தமக்கு உறவினர் ஏற்படுத்திய மணத்தையும் மதியாது மாற்றார் (பகைவர்) களம் புகுந்தனர்?

விரைவில் போர் முடித்து வீடு திரும்புவதாகச் சென்ற கலிப்பகையார், பலநாள் கடும்போர் செய்ய

நேர்ந்தது. கலிப்பகையார் சமர் புரியச் சென்றவர் விரைவில் வந்திலர்.

புகழனார் தொண்டு கிழவர் ஆயினர். மூப்பும் பிணியும் அவரை முடுகி நின்றன. ஆகவே, அவர் மண்ணுலகை விட்டு விண்ணுலகு எய்தினர். மாதினியார் தம் கணவனார் இறந்தமையால்,

" கொண்டானில் துன்னிய கேளிர் பிறர்இல்லை"

என்பதையும்,

" கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல்"

என்பதையும் அறிந்து, தம்முயிர் கொண்டு தம் கணவனார் உயிரைத் தேடுவார் போலத் தாமும் இறந்தனர். திரியின்றிச் சுடர் நிற்குமோ?

திலகவதியாரும் மருள் நீக்கியாரும் பெற்றோரை இழந்து பெரிதும் துன்புற்றனர். அவர்களது ஆருத் துயரினை அருங்கிளைஞர் சிறிது ஆற்றினர்; உலகின் நிலையாமையை எடுத்து உரைத்தனர்; இறப்பதும் பிறப்பதும், உறங்குதலும் விழித்தலும் போலும் என்று எடுத்து இயம்பினர். இவையனைத்தும் கேட்ட இருவரும் ஒருவாறு உளந்தேறி உற்ற துயர் நீங்கினர்.

இஃதிவ்வாறாக, கடும்போர் புரியக் களம் புகுந்த கலிப்பகையார், விழுப்புண் பட்டு, வீர சுவர்க்கம் எய்தினர். இச்செய்தி திலகவதியாரின்

திருச்செவியிலும் புகுந்தது. இது கேட்ட திலகவதியார்,

"உகிர்ச்சுற்றின்மீது உலக்கை விழுந்தது போல"

உளம் துடித்தார்.

அதுவரை திலகவதியார்க்கும் கலிப்பகையார்க்கும் திருமணம் நிகழ்ந்திலது. எனினும், உளங்கலந்த அன்பினர் ஆதலால், திலகவதியார் கலிப்பகையார் தம்மை மணந்த கணவரே எனக் கொண்டு, ஆவி நைந்தார்; இனித்தாம் உயிர் வாழ்ந்து பயனில்லை என்று உளங்கொண்டார். 'எவரையும் சிந்தையாலும் தொடேன்' என்னும் கொள்கையராய், "எந்தையும் எம் அன்னையும் அவர்க்கு என்னைக் கொடுக்க இசைந்துவிட்டனர். அந்த முறைப்படி நான் அவர்க்கே மனையாள் என்னும் உரிமையள் ஆனேன். ஆகவே, என் உயிர் அனைய அவர் போய பின், உடல் அனைய யான் உலகில் இருந்து பயனில்லை," என்று தாமும் உயிர் விட்டுப் புகழ் நிறுத்த முனைந்தார்.

இதனைக் கண்ட மருள் நீக்கியார் இடியேறுண்ட நாகம் போல உடல் பதைத்துத் "தமக்கையீர், நம் இருமுதுகுரவர் இறந்த நாள் தொட்டு உம்மையே அன்னாராக எண்ணி இருக்கின்ற என்னைத் தனியே தவிக்க விட்டு நீர் செல்லுதல் தகுமோ? உமக்கு முன் யானே செல்கின்றேன்!" என்று தம் உயிரை மாய்த்துக்கொள்ளத் துணிந்து நின்றார். திலகவதியார், 'இருதலைக் கொள்ளியுள் எறும்புபோல' ஆயினர்; தம்பியார் உயிர் விடாது

தரணியில் பலநாள் தழைத்திருக்க வேண்டும் என உளங்கொண்டார்; ஆதலின், தாம் உயிர் விடத் துணிந்ததை நிறுத்திக்கொண்டார்; அன்று முதல் அணி அலங்காரங்களை அறவே ஒழித்தார். கைம்மைக்கோலமே கடமையாகக் கொண்டார். இல்லத்தில் இருந்தே தவ ஒழுக்கத்தை மேற்கொண்டு எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகும் சீலத்தராய் விளங்கினர்.

இதனைச் சேக்கிழார் செந்தமிழ் செம்மையுறச் சித்திரித்திருப்பதைப் படித்துப் படித்துச் சுவைக்க வேண்டுவது நம் கடமை. அச்செந்தமிழ்ப் பாடல்,

‘ தம்பியார் உளராக வேண்டுமென வைத்ததயா
உம்பருலகணையவுறு நிலைவிலக்க உயிர்தாங்கி
அம்பொன்மணி நூல்தாங்கா தனைத்துயிர்க்கும் அருள்தாங்கி
இம்பர்மனைத் தவம்புரிந்து திலகவதி யார்இருந்தார்’

என்பது.

இதன் திரண்ட பொருள், ‘தம்பியார் உயிருடன் இருக்க வேண்டும் என்னும் கருணையால் விண்ணுலகு அடைய நினைத்த நினைப்பை ஒழித்து, அருட்பண்பைத் தாங்கி மங்கல அணியை (தாலி) நீக்கி, வீட்டிலேயே தவநெறியில் வாழ்வார் ஆனர்,’ என்பது. இச் செய்யுள் சொல்லழகும் பொருளழகும் தருவதோடு அம்மையாரது அருள் அழகையும் எத்துணையழகாக நமக்கு எடுத்துக் காட்டுகிறது, பாருங்கள்!

சின்னாள் சென்றபின் மருள் நீக்கியார் சைவ சமயம் விட்டுச் சமண சமயம் புகுந்தார். திலகவதி

யார் உண்மைத் துறவுடையராய் நடு நாட்டின் நாயகமாய் விளங்கும் திருவீரட்டானம் என்னும் திருப்பதியை அடைந்தார்.

அவர் கடுங்கதிர்ச் செல்வன் கடலிடைத் தோன்றுதற்கு முன் எழுந்திருப்பார்; திருவலகு கொண்டு திருத்தளியைக் (கோவில்) கூட்டித் தூசு போக்குவார்; ஆமயத்தால் ஆலயத்தை மெழுக்கிடு வார்; மலர் பறித்து மாலை தொடுத்து மாதொரு பாகரை (சிவபெருமானை) வழிபடுவார். இம்முறை யில் நாள் தவருது திருத்தொண்டு செய்து வந்தார். இதுவன்ரே உள்ளத்துறவு, உண்மைத் துறவு! இதனை எவரும் இயற்றலாம் அன்ரே? இதற்கு மழித்தலும் நீட்டலும் வேண்டுமோ? நாடு கடந்து காடு புகவேண்டுமோ? மனத்தின்கண் மாசிலராய்,

"என்க டன்பணி செய்து கிடப்பதே"

என்று தம் கடமையைச் செய்து வரின்,

'நின்க டன் அடி யேனையும் தாங்குதல்'

என்பது தானே பெறப்படும் அன்ரே? இவ்வாறு பன்னுளும் திலகவதியார் பரமரை வழிபட்டு வந்தனர்.

திலகவதியார் இறைவரிடம் தமக்காக எதுவும் வேண்டாது,

'கூடும் அன்பினில் கும்பிட லே அன்றி,
வீடும் வேண்டா விறலின் விளங்கினர்.'

ஆயினும், தம் இளவல் சைவ சமயம் விட்டுச் சமண சமயம் புகுந்தமைக்கு மட்டும் மனம் புழுங்கினர்;

இறைவர் மாட்டு இக்குறையை விண்ணப்பித்து வந்தார். அம்மையார் வேண்டுகோளை அரனும் தீர்த்து வைத்தார்.

மருள் நீக்கியாரும் தமக்கையாரது கருணையால் மீண்டும் சிவநெறிப்புக்குச் சிறப்பு எய்தினர். அவரே திருநாவுக்கரசர் என்னும் திருப்பெயர் பூண்ட பெரியார் ஆவர்.

திலகவதியார் தம் குறை நீங்கப் பெற்றவராய், தம் திருத்தொண்டை இடைவிடாது புரிந்து இறைவரது இன்னருளைப் பெற்று வாழ்வார் ஆயினர்.

3. கணவனார்க்கேற்ற காரிகையார்

மக்கள் மேற்கொள்ள வேண்டிய அறம் இரண்டு. ஒன்று, இல்லறம்; மற்றொன்று, துறவறம். முன்னையது எளிது; பின்னையது அரிது. நாயனார் துறவறத்தைப் பற்றிக் கூறும் போது,

> "அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை யஃதும்
> பிறன்பழிப்ப தில்லாயின் நன்று"

என்று கூறுகின்றனர். ஈண்டு 'அஃது' என்றது துறவறத்தை என்க. "அஃது பிறன் பழிப்பது இல்லையாயின் நன்று," என்று கூறுதலினின்று அதனை மேற்கொள்ளுதல் அருமையுடைத்தென்பது அறியக் கிடக்கிறது.

துறவற நெறியினை மேற்கொள்ளாமல் இல்லற நெறியினின்றே அழியா இன்பம் அடைந்தவர் உளரோ எனில், உளர் என்க. அவரே அப்பூதி அடிகளார் என்னும் அந்தணப் பெரியார் ஆவர். அவர் இல்லறத்தினின்றே திருநாவுக்கரசர் என்னும் திருப்பெயரை எழுதியும் சொல்லியுமே துன்பில் பதம் பெற்றார். அவர் பெற்ற நிலையினை அழகுறச் சிவப்பிரகாச சுவாமிகள்,

> 'சொற்றான் எழுதியும் கூறியு மேயென்றும் துன்பில்பதம்
> பெற்றான் ஒருநம்பி அப்பூதி என்னும் பெருந்தகையே''

என்று அறிவித்துள்ளார்.

அப்பூதி அடிகளார் திருவையாற்றினின்று கும்பகோணம் செல்லும் நெறியில் உள்ள திங்களூர் என்னும் பதியினர். இவ்வூரினுக்கு விளக்கம் தந்த பெரியார் அப்பூதியாரே என்னலாம். அவர் தாண்டவம் புரிய வல்ல தம்பிரானூர்க்கு அன்பர். இல்லற நெறியார்; உயிர்க்கு உறுகண் செய்யாத தவத்தின் மிக்கவர். புகழ் அவரை நாடியதன்றி, அப்புகழை அவர் நாடினாரில்லை. ஆகவே, அவரை,

"ஈண்டிய புகழினர்"

என்றே சேக்கிழார் செப்பினரே அன்றி, ஈட்டிய புகழினர் என்று இயம்பினர் அல்லர். அவர் எல்லையில் தவத்தின் மிக்கார் என்பதற்கிணங்கக் களவு, பொய், கோபம் முதலிய குற்றம் காய்ந்து விளங்கினர். தவத்தின் மிக்கவரே இக்குற்றங்களை ஒடுக்க வல்லுநர் என்பதை நன்கு உணர்ந்த வள்ளுவப் பெருந்தகையார், இக்குற்றங்களின் கொடுமைகளைத் துறவறத்தின் கண் பேசிக் கடிவா ராயினர்.

அப்பூதி அடிகளார் வளமிகும் மனையின் வாழ்க்கையினை மேற்கொண்டவராயினர் அப்பூதி யடிகளார்.

"செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே"

(அஃதாவது, இறைவனது திருவடியைப் போற்றும் செல்வந்தான் செல்வம் என்பது) என்னும் சீரிய கொள்கையினராய் இருந்தமையின் தம் பெயரையும், பூதியார் என்று கொண்டனர் போலும்! பூதி என்னும் சொல் செல்வம் என்னும் பொருளுடையது.

இச்செல்வர் உலகறிந்த உத்தமராய் உலவியா மையால், உலகறி சுட்டாகிய அகரம் சேர்ந்து அப்பூதியார் என்று குறிப்பிடப்பட்டனர் எனக் கூறினும் தவறில்லை என்க.

அப்பூதியடிகளார் ஒரு நாவுக்கு உரை செய்ய ஒண்ணாத திருநாவுக்கரசென்னும் சீரியர்பால் தம் சிந்தையைச் செலுத்தியவராய், அவரையே தம் குலக் கடவுளாகக் கொண்டு வந்தனை வழிபாடு ஆற்றி வருவாராயினர். அவ்வகைப் பண்பு புறத்தும் பொலிவதாயிற்று. திருநாவுக்கரசர் திருப்பெயரால் திருமடங்கள் தண்ணீர்ப் பந்தர் முதலான பல்வேறு அறங்கள் உலகில் திகழ நடத்தி,வந்தனர்; இவையே யன்றித் தம் மனைப்பால் உள்ள நிலையியற்பொருள் களும் இயங்கியற்பொருள்களுமான அளவைகள், நிறைகோல் (தராசு), மக்கள், ஆ, மேதி (எருமை) இவற்றிற்கும் திருநாவுக்கரசர் திருப்பெயரை இணைத்தே சுட்டி வந்தனர். என்னே அவர்க்கு அப்பர் பெருமானிடத்து அமைந்த அன்பின் மாட்சி! தம் மைந்தர் இருவரையும் மூத்த திருநாவுக்கரசு என்றும் இளைய திருநாவுக்கரசு என்றும் ஆர்வமுற வழங்கி வருவார் ஆயினர்.

இன்னணம் அன்பு காட்டிய அப்பூதியார், அப்பர் பெருமானாராம் திருநாவுக்கரசரைக் கண்டதுண்டா எனின், அதுவும் இன்று; ஆனால் வாக்கின் வேந்தர் அடிமையையும், தம்பிரானார் அருளையும் கேள்விப்பட்டிருந்தார்; கேள்வி மூலமே அவர்பால் ஆரா அன்பு அமையப் பெற்றனர்.

இப்பண்பாடு தமிழ் நாட்டுப் பெருமக்கட்கு அமைந்த தனித்ததொரு பண்பாடேயாகும். அப்பூதி யடிகளாரைப் போலவே வடிவு தாம் காணு நிலை யிலும் கலந்த அன்பினராய் இருந்தவர், கோப்பெருஞ் சோழர் என்னும் கோமகனுர். அவர் பிசிர் என்னும் ஊரினரான ஆதன் என்பவரின் தந்தை யாரிடத்தில் அளவு கடந்த அன்புடையவராய் இருந்தனர். ஆதன் தந்தையார் என்பவர் ஆந்தை யார் என்னும் புலவரேயாவர். 'பிசிர்' என்பது அவர் பெயருடன் இணைக்கப்பட்டுப் பிசிர் ஆந்தையார் என்று வழங்கப்படுவர். இப்பண்பு தமிழரிடையே தழைத்திருந்தமையான் அன்றே மாதானுபங்கி என்னும் மாபெரும்புலவராம் திருவள்ளுவர்,

> "புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
> நட்பாம் கிழமை தரும்"

என்று கூறிச் சென்ருர்? இதன் கருத்து, 'சேர்ந்து பழகி நட்புக் கொள்ள வேண்டுவதில்லை. உளம் கவர்ந்த உணர்ச்சியே நட்பு உரிமையைத் தந்து விடும்,' என்பது.

ஆகவே, அப்பூதியார் அப்பர் பெருமானுரின் ஆக்கைப் பொலிவைக் காணுவிடத்தும் அன்புப் பொலிவைச் கண்டு அவரிடம் அன்பு கொண்டு வாழ்ந்ததில் வியப்பில்லையன்றே?

அவ்வப்பூதியார் கொள்கை வழுவா வண்ணம் உடனிருந்து உதவி வந்தவர் அவர்தம் மனத்திற்கு இனிய மனைவியார் ஆவர் என்பதை நாம் மறத்தல் கூடாது. இன்றேல், அப்பூதியார் திருநாவுக்கரசர்

பால் கொண்ட அன்பின் திறத்தை அலத்திருப் பார். தம் கணவனுர்க்குப் பித்தம் தலைக் கொண் டது போலும் என, அதனைத் தீர்க்கப் பரிகாரம் தேடியும் இருப்பார். "மாபெருந்தெய்வங்களை வணங்கிச் சிறப்பிப்பதன்றி மானிடர் ஒருவரையா மனத்துக்கொண்டு வணங்குவது?" என்று அதனைக் கண்டித்துமிருப்பர். அவ்வாறு செய்யாமையினின்றே அம்மையார் கணவனுர்க்கேற்ற காரிகையார் என் பதைக் காண்கின்ருேம் அல்லமோ! இப்பண்பு அப் பூதியடிகளாரோடு வாழ்வு நடாத்திய அம்மையார் பால் ஆதி முதல் அந்தம்வரை அமைந்ததொன்ரும். இதனைத் தொடர்ந்து எழுதப் புகும் இவ்வரலாற்றில் காண்போமாக.

அப்பூதியடிகளார் இன்னணம் வாழும் நாளில் எந்தத் திருநாவுக்கரசரின் திருவடியிணைகளை மற வாது போற்றிச் சிந்தித்துக்கொண்டு அடிகளார் வாழ்ந்திருந்தனரோ, அப்பெரியார் திருப்பழனத் திருத்தலத்தைப் பணிந்துகொண்டு, திங்களூர் வழி வருவார் ஆயினர். அன்னணம் போதரும் திரு நாவுக்கரசர் வளமருவு நிழலுறு தண்ணீர்ப்பந்தல் வந்தணைந்தார்; அப்பந்தரில் திருநாவுக்கரசெனும் பேர் எப்பக்கமும் அழகுற வரைந்துள்ளதைக் கண்டு, சிந்தனையில் ஆழ்ந்தார்; 'நம் பெயரால் இத்தொண்டு இங்கு நிகழக் காரணம் யாதோ!' என்பதை அறிய அவர் உள்ளம் விரும்பியது. அவர் அங்கு இருந்த வர்களை நோக்கி, "இப்பந்தர்க்கு இப்பெயரிட்டு இங்கு அமைத்தார் யாரோ? உணர்வீரேல் உரை மின்," என, அவர்கள், "செப்பருஞ்சீர் அப்பூதி அடிகளார் செய்தமைத்தார்," என்று செப்பினுர்கள்.

ஈண்டுச் சேக்கிழாரின் சீரிய புலமையை நாம் போற்ருதிருக்க ஒண்ணுது. சேக்கிழார் பெருமானுர் திகழ்ந்த காலம் கி. பி. 12 ஆம் நூற்ருண்டு என்பது வரலாற்ருசிரியர் உறுதிப்படுத்திய உண்மை. ஆகவே, அவர் இற்றைக்கு ஏறக்குறைய எண்ணூறு ஆண்டுகட்கு முன்பிருந்த மூதறிஞர் என்பது தெளிவாம். அம்மூதறிஞர் இக்காலத்து நவீனம் எழுது முறைப்படி இவ்வரலாற்றினை எழுதியிருப்பாராயின், அவரது எழுத்துப் புலமையை என்னென்று இயம்புவது! இக்காலத்தில் நவீனம் எழுதுவோர் கையாளும் பல்வேறு கைத்திறன்களுள் ஒன்று, தாம் தொடங்கும் கதைக்குரிய நாயகன் பெயரை விரைவில் சுட்டிக்காட்டாமல், அவனுடைய செயல்களை மட்டும் பல பக்கங்களில் எழுதிச் சென்று திடுமெனஓர் இடத்தில் சுட்டிக் காட்டுவதாகும். அதனைப் படிப்போர், “ஆ! இதுவன்றே நவீனத்தின் நயம்! இப்படியன்றே எழுதுதல் வேண்டும்!” என்று வியப்புறுவர். இம்முறை பண்டையது; புதுவதன்று; காவிய உலகில் காணப்படுவது. சேக்கிழார் என்னும் நாவலாசிரியர் அப்பூதியடிகளாரைப் பற்றிப் பேசப் புகுந்து, முன் செய்யுள்களில் அவர் பெயரைப் பற்றி யாதும் கூருது ஏழாவது செய்யுளில் அறிவிப்பார் ஆயினர். இஃது ஒன்றே சேக்கிழாரின் சீரிய கூரிய மதி நுட்பத்திற்குச் சான்று அன்று. அவர் எழுதியுள்ள நூலை எப்பக்கம் புரட்டினும் எச்செய்யுளைப் படிப்பினும் இன்னோர் அன்ன நயங்கள் மலிந்து காணக்கிடக்கின்றன. அவற்றை அவர் நூலிற்கண்டு இன்புறுதல் நம்மனோர் கடமையாகும். இது நிற்க.

தாண்டகவேந்தராம் திருநாவுக்கரசர், அங் வறங்களை அமைத்தவர் அப்பூதியூரர் என்பதை அறிந்தார். அந்த அளவில் அவர் அமைந்தார் அல்லர். அப்பர் பெருமானுர் அவ்வன்புடையாரைக் காண விரும்பினுர்; அவர் கருத்தை அறிய அவா விஞர்; அவரை நாடித் தாமே செல்ல வேண்டு மெனச் சிந்தனையும் கொண்டார். இன்ஞேர் அன்ன எண்ணங்களை மனத்தகத்துக் கொண்ட திருநாவுக் கரசர், தமக்குப் பெயரைக் கூறியவர்களையே நோக்கி, "அவர் எவ்விடத்தார்?" என்று வின விஞர். அப்பர் வினவிய விஞு, "அவர் எவ்விடத் தார்?" என்பதே. முன்பு வினவிய விஞு "இப்பந்தர் இப்பெயர் இட்டு இங்கமைத்தார் யார்?" என்பது. அதற்குக் கிடைத்த விடை, "செப்பருஞ்சீர் அப்பூதி யடிகளார்," என்பது. அம்முறையில் இரண்டாங் கேள்விக்கு விடையிறுக்க வேண்டுவது, 'இவ் விடத்தார்' என்பதே ஆகும். அன்னணம் சுருங் கிய விடையை அவர்கள் கூறிஞர்கள் இல்லை. அப்பர் பெருமானின் உளப்பண்பை உணர்ந்து கொண்டார்கள். அவரது அகத்துக் கருத்தை முகத் துக் கண்டார்கள். உடனே காலக்கழிவு இன்றி அப்பூதியடிகளார் குலம், குடி இவற்றேடு அவரைக் காண்டற்குரிய வழிகளையும் கூறிஞர்கள். "நூல் மார்பர்" என்றனர்; "இத்தொல்பதியாகிய திங்களூர் வாசி" என்றனர்; இதன் வழி அவர் அந்தணர் என் பதை உணர்த்தினர். இதனுல், 'வேற்றூரினர் அல்லர்; இவ்வூரினர்,' என்பதையும் உணர்த்தினர். "தம் மனையின்கண் சென்றனர்," என்றனர்; "அம் மனைக்கு இதுபோதுதான் சென்ருர்," என்றனர்;

"அம்மனை சேய்மையில் உள்ளதன்று; அண்மை யில் உள்ளதே," என்றும் கூறினர். இவற்ருல் அவர் துறவறத்தார் அல்லர்; இல்லறத்தார்,' என் பதையும், 'இப்பொழுது சென்ருல் அவரைக் காண லாம்,' என்பதையும், 'அவர் வீடு தூரத்தில் இல்லை; அருகில்தான் உள்ளது,' என்பதையும் உணர்த்தி ஞர்கள். இப்பேச்சின் மூலம் உளநூற்பண்பை எவ் வளவு நுட்பமாக நம் முன்னேர் அறிந்திருந்தனர் என்பதை நாம் எண்ணி இறும்பூதும், இறுமாப்பும் எய்த வேண்டாவோ? இத்துணைக் கருத்தும் நிரம்ப ஈண்டுப் பாக்களைப் பெருக்கிப் பாழ்படுத்தல் அடாது என்று அறிந்து பாதிப் பாட்டிலேயே இப்பண்புகளை யடக்கிப் பேசிய சேக்கிழார் பெருமானுர் செப்பரும் புலமையை என்னென்று வியப்பது! இன்னணம் பாடும் வன்மை விரல் விட்டு எண்ண வல்ல சில ருக்கே வாய்ப்பதன்றி, ஏனையர்க்கு வாயாததாகும். இத்துணைப் பொருட்பொலிவுக்கும் காரணமாய் இருந்த அடிகள்,

> "துன்றியநூல் மார்பரும்இத் தொல்பதியார் மனையின்கண்
> சென்றனர்இப் பொழுததுவும் சேய்த்தன்று நணித்தென்ருர்"

என்பன.

திருநாவுக்கரசர் முகவரி முதலான குறிப்புக் களுடன் அப்பூதியார் இல்லத்தை நோக்கிப் புறப் பட்டனர். அப்பர் பெருமான் சிவவேடப் பொலி வோடு தம் இல்லம் நோக்கி வருதலைக் கண்ட அப்பூதியார், சிவபெருமான் அடியவருள் ஒருவர் என மகிழ்ந்து, வாகீசர் கழல் பணிந்தார். அவர் பணியும் முன் அரசும் எதிர் பணிந்தார். அப்பூதி

யார் அப்பரை நோக்கி, "கருணை புரி வடிவுடையீர் யான் முடிவில் தவம் செய்தேனோ ! இன்றெனில், நீர் என் இல்லம் வருவீரோ !" என்று பணிமொழி பகர்ந்து, பணிந்து நின்றார். திருநாவுக்கரசர், "அன்பரே, யாம் திருப்பழனம் இறைஞ்சி வருகின்றோம். வழிக்கரையில் நீர் அமைத்த தண்ணீர்ப் பந்தல் முதலான அறம் பலரும் கேட்டு இங்குப் போந்தோம். அவ்வறங்கள் நும் பெயரால் நடத்தல் இன்றி, வேறு ஒருவர் பெயரால் நடப்பதன் கருத்து என்னே ? யாம் அதனை அறியவே ஈண்டு நண்ணினோம்," என்றனர்.

இம்மொழிகளைக் கேட்ட அப்பூதியார் துணுக்குற்றார்; நிலையறிந்த சிந்தையர் ஆயினார். வேறு ஒன்றும் படுசொல் கூறத் துணிவு பெறாதவராய், "நன்றருளிச் செய்திலீர்," என்று மட்டும் கூறினார். "வேறொரு பேர் என்றீரே, தமக்கு நேர்ந்த இன்னல்களைத் திருத்தொண்டின் திறத்தாலே வென்றவர் தம் திருப்பேரோ வேறொரு பேர்? செம்மை புரி திருத்தொண்டே இம்மையில் உய்யும் வகைக்கோர் உறுதுணையென்று எம் போல்வாரும் தெளியச் செம்மை புரி திருநாவுக்கரசர் திருப்பெயரையன்றோ யான் வரைந்துள்ளேன் ? அதனை வேறொரு பேர் என்றீரே ! அவர் பெருமையை அறியாதார் உலகில் யார் உளர் ? மங்கலமாம் திருவேடத்துள் நின்று நீர் அறியாது இவ்வண்ணம் அறையலாமோ ? நீர் எங்குளீர் ? நீர் யார் ?" என்று அன்பும் சிறிது துன்பும் கலந்த மொழிகளில் வினவலானார்.

ஈண்டு ஓர் ஐயம் எழ இடம் உண்டு. அஃதாவது, அப்பூதியார் களவு, பொய், கோபம் முதலிய குற்றம் காய்ந்தவர் என்று முன் அவர் குண நலம் பேசிப் பின் சிறிது வன்மையாக ஈண்டுச் சில வார்த்தைகளை வழங்கில் அடுக்குமோ என்பது. அடுக்கும். எவ்வாறெனின், தமக்கோ தம் குடிக்கோ பிறர் இடுக்கண் புரியின் அதன் பொருட்டுச் சினவுவரேல், அவர் குணம் முன்னுக்குப்பின் முரண் என்று மொழிந்து, குற்றங்காணல் பொருத்தமுடையதாகும். அவ்வாறன்றி, உலகறிந்த ஒரு பெரும்பெரியார் திருப்பெயரைப் புறக்கணித்து வேறு ஒரு பெயர் என்று கூறியதே அவரைச் சீற்றம் கொள்ளச் செய்தது. அஃதன்றியும், மங்கலமாம் திருவேடத்துள் நின்று திருநாவுக்கரசர் திருப்பெயரைத் தம் வாயாலும் மொழியாது வேறு ஒரு பேர் என்று செப்பியதால்தான் சினம் எழுந்தது என்க. இது நிற்க.

அப்பூதியார் உள்ளப் பண்பை ஆளுடைய அரசர் (அப்பர்) அகத்துள் கொண்டார்; தாமே அந்தணர் பாராட்டும் அடியர் என்பதை அறிவித்துக்கொள்ள எண்ணினர். இந்நிலையில் செயற்கரிய செய்கலாத சிறியர் ஆயின், "ஐயா, நீர் யாரைப் பெரிதும் மதித்துப் போற்றி வருகின்றீரோ, அந்தப் பேர்வழியே யான். உம் அன்பை மெச்சினேன்!" என்று தற்பெருமையைப் பறை சாற்றியிருப்பர். அங்ஙனம் அன்றித் திருத்தொண்டின் நெறி நின்ற திருநாவுக்கரசர், தம்மை அறிவித்துக்கொண்ட நிலையை உன்னி உணர்தல் வேண்டும்.

திருநாவுக்கரசர் தம்மைச் சிறியர் என்றும் தெளிந்த அறிவும் உணர்வும் இல்லாதவர், என்றும் கூறிக்கொள்கின்ருர்; இவ்வாறு கூறியே தம்மை அறிமுகப்படுத்திக்கொள்கிருர். இதுவன்ருே சீரிய பண்பு?

"பணியுமாம் என்றும் பெருமை"

என்று வள்ளுவர் மொழிந்த வாய்மொழிக்கு ஓர் எடுத்துக்காட்டாக இவரையன்றி வேறு யாரைக் காட்ட இயலும்? திருநாவுக்கரசரது பணிவின் திறனைப் பாவலர் பெருந்தகையார் சேக்கிழார் பெருமானுர்.

"அருளுபெருஞ் சூலேயினுல் ஆட்கொள்ள அடைந்துய்ந்த
தெருளும்உணர் வும்இல்லாச் சிறுமையேன் யான்என்ருர்"

என்று பாவாற்பாடிப் போற்றுகின்ருர்.

அப்பூதியார் இந்நிலையில் எந்நிலை அடைந்திருப்பார் என்பதை எழுதவும் வேண்டுமோ? 'கும்பிடச் சென்ற தெய்வம் குறுக்கே வந்தது போல' அன்ருே எண்ணி அப்பூதியார் அகங்களித்தார்! அப்பூதியார் கரகமலம் தலைமீது குவிந்தது; கண்ணருவி பொழிந்தது; உரை குழறியது; உடம்பெலாம் உரோமப் புளகம் பொலிந்தது. அவர் தரையின் மிசை வீழ்ந்தார்; அப்பரது சரண கமலம் பூண்டார்; அற்றவர்கள் (எல்லாம் இழந்தவர்கள்) அருநிதியம் பெற்ருற்போல முற்ற உள்ளம் களிகூர்ந்தார்.

அப்பூதியார் மனைவியார் மக்கள், உறவினர் முதலானவர்களுடன் அப்பரை இறைஞ்சினுர். அப்பரை ஆசனத்திருத்திப் பூசைகள் புரிந்தார்;

அப்பரை உள் எழுந்தருளுவித்து அவர் தாளை விளக்கிய தூய நீரையும் தங்கள்மேல் தெளித்து உள்ளம் பூரித்தார்! உணவு கொண்டு செல்ல வேண்டி நின்றார். அவரும் அதற்கு இசைந்தார்.

அப்பூதியார் அடைந்த இன்பத்தைக் கண்ட ஆருயிர் மனைவியார் எந்நிலையில் இருந்தனர்? அம்மையாரும் அளவிலா ஆனந்தம் கொண்டார்.

"எய்திய பேறு நம்பால் இருந்தவா றென்னே என்றார்."

"இது மைதிகழ் மிடற்றினார் (விடம் பொருந்திய திருநீலகண்டரான சிவபெருமான்) அருளினால் வந்தது," என்று மனத்துட்கொண்டார்; விரைவுடன் சமைக்கச் சமையல் அறை புக்கார்; தூய நற்கறிகளை அறுவகைச் சுவையுடன் ஆக்கி ஆய இன் அமுதும் (சோறு) அமைத்து வைத்தார். இதனால் கணவனார்க்கேற்ற காரிகையார் அல்லரோ அப்பூதியார் வாழ்க்கைத் துணைவியார்?

அடியவரை உண்பிக்க வாழையிலை அறுத்துத் தரத் தம் மைந்தராம் மூத்த திருநாவுக்கரசைப் புறக்கடைக்குப் போக்கினர். மைந்தரும் மனமகிழ்ச்சி கொண்டு புறக்கடை சென்று வாழைக்குருத்தைக் கத்திகொண்டு அறுக்கும் போது, அரவு ஒன்று அம்மகனார் அங்கையில் தீண்டியது. என்றாலும், அதனை யாரும் அறிய வெளியிடாது கொய்த குருத்தைத் தம் தாயர்பால் வைத்துத் தரையில் மயங்கி வீழ்ந்தார்.

பாம்பு தீண்டியதை அறிவிப்பின் வந்த பெரியார் உணவுகொள்ள இயலாது போகுமே என்னும்

திருந்திய கருத்தே அதனை வெளியிடாது செய்தது. 'மனையறிவு தந்தையறிவு,' அன்றோ? விரை யொன்று இடச் சுரையொன்று காய்க்குமோ?

தரைமிசைத் தளர்ந்து வீழ்ந்த தனயரைப் பெற்றோர் கண்டனர்; மேனியில் விளங்கிய குறியைக் கண்டு விடத்தினால் மயங்கினார் என்பதை விளங்கிக்கொண்டனர்; உளம் பதைத்து நொந்தனர்; உடனே துன்பம் ஒழிந்து, தொண்டர் அமுது செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யலாயினர்.

ஈண்டுச் சேக்கிழார் பாடிய திறத்தையும் பார்க்க வேண்டும். தாயாரும் தந்தையாரும் உளம்பதைத்தனர் என்று சேக்கிழார் கூறி, உடனே 'துளங்குதல் இன்றி,' என்று கூறியது முறையோ எனில், இரண்டும் முறையேயாம்.

''கடந்துளோர்களும் கடப்பரோ மக்கள்மேற் காதல்?''

என்னும் உரைக்கிணங்க மகன் இறந்தான் என்றதும் மக்கள் பண்புக்கிணங்க இரங்கத்தான் வேண்டுமன்றோ? அதிலும் இருமுதுகுரவர் தாம் ஈன்ற மகனே இறந்தான் என்ற போது கலங்காதிருப்பரேல், அன்னார் உள்ளம் மக்கட்பண்புக்கியைந்து பக்குவப்பட்டதன்று என்ற பழிச்சொல்லை உலகம் பகரும். ஆகவே, அவர்கள் உள்ளம் பதைத்து உறுதுயர் உற்றது பொருத்தமே ஆகும். உடனே அவர்கள் துளங்குதல் இன்றித் தொண்டர் அமுது செய்யச் சூழ்வுற்றது, அவர்களது தொண்டின் வன்மையை வற்புறுத்திக் காட்டுகிறது.

பாம்பு கடிக்க மயங்கிய மைந்தரைப் பாயினுள் மூடிப் புறமனை முன்றிலில் மறைத்து வைத்தனர்; அப்படி வைத்த செயலை அப்பர் அறவே அறியா திருக்கவும் முயன்று, அவர்க்கு அமுது செய்விக்க அவாவி நின்றனர்; கடிது வந்து வாகீசர் கழல் பணிந்து, "காலம் தாழ்க்கின்றது. அமுது செய்து, எம்குடி முழுதும் வாழச் செய்வீர்," என்று வேண்டி நின்றார். ஈண்டும் அப்பூதியார் வாக்கில் மங்கலச் சொல் பயிலுமாறு சேக்கிழார் அமைத்த திறனை நோக்கலாம்.

அப்பூதியார் அறிந்தோ அறியாமலோ "எம்குடி முழுதும் வாழச் செய்வீர்," என்று கூறி யுள்ளார். குடி முழுதும் வாழும் நெறி எப்போது கூடும்? மூத்த மகனார் உயிருடன் இருந்து அவர் வழி குடி தழைத்தால் அன்றோ வாழ இயலும்? அவரோ, இது போது மயங்கிக் கிடக்கின்றார். ஆகவே, அப்பூதியடிகளார் அவரை எழுப்பியருள வும் வேண்டினார் என்னும் உள்ளுறை பொருளும் இருத்தலைக் காண்க. இவ்வாறு பாடும் பழக்கம் பெரும்புலவர்க்கு அமைவது என்பதைச் கம்பர் பாடலாலும் காணலாம்.

தயரதன் தன் மகனை இராமனை விசுவாமித் திரருடன் அனுப்ப உறுதி கொண்டு, 'அவனை அழையுங்கள்,' என்று கூறுகையில்,

"திருவின் கேள்வனைக் கொணர்மின் சென்று"

என்று கூறியதாகக் கம்பர் தம் நூலில் பாடுகிறார். இது பின்னால் இராமன் சீதையை மணத்தற்கு ஒரு நற்குறி வாக்காக உள்ள பொருள் தொடர் அன்றோ!

ஆகவே, அப்பூதியார் அப்பரை இங்ஙனம் வேண்டத் தாண்டகவேந்தராம் அப்பரும் தடையின்றி எழுந்து கைகால்களை விளக்கித் திருந்துமோர் ஆதனத்தில் அமர்ந்தார்; அமர்ந்த பின்பு எவர்க்கும் திருநீறு அளிக்கையில், "மூத்த மகனையும் காட்டுவீர்," என்றனர்,

ஆ! என்னே சேக்கிழாரின் பாநயம்! "மூத்த திருநாவுக்கரசு யாண்டுளன்? அவனைக் காணப் பெற்றிலோமே! அழைமின்," என்று கழறுது காட்டும்' என்று கூறியது தெய்வத்திருவருளால் எழுந்த மொழியன்றோ! 'காட்டும்' என்னும் சொல் ஒளித்து வைக்கப்பட்டதைக் காட்டுமாறு ஆணையிடுவது போன்றதன்றோ? இதற்கு அப்பூதியார் யாது விடை கூற வல்லார்? பொய்ம்மை கூறவும் அவர் உள்ளம் பொருந்தவும் இல்லை; வாய்மை கூறவும் அவர் வாய் வரவும் இல்லை; இரண்டிற்கும் இடையே, "இப்போது இங்கு அவன் உதவான்," என்றே விடை தந்தார். "இப்போது இங்கு அவன் உதவான்," என்றதனால், பின்பு திருவருள் துணை புரியுமேல், அவன் உதவக்கூடும் என்னும் குறிப்புத் தோன்றுதல் காண்க.. 'இங்கு உதவான்' என்பதால் 'அங்கு—அதாவது இன்பநிலை துய்க்கும் மோட்ச உலகமாகிய அங்கு—அவன் உதவுவான்' என்னும் குறிப்பும் தோன்றுகின்றது அன்றோ?

இந்நிலையில் அப்பர் உள்ளத்தில் ஏதோ தடுமாற்றம் நிகழ, அவர் அந்தணர் பெருமானை அன்புடன் நோக்கி, "ஐயரே, 'இப்போது இங்கு உதவான்?' என்னும் மொழியை என் உள்ளம் ஏற்காது.

மெய் விரித்து உரையும்,'' என்று வற்புறுத்தி வேண்டினுர். இந்நிலையில் பெற்ருேர் மனம் தளர்வுற்றனர். இத்தளர்வு மைந்தர் இறந்ததன் பொருட்டு அன்று; பெரியவர் அமுது செய்யும் பேறு இழக்க நேர்ந்ததே என்பதற்கே ஆகும். 'மெய் விரித்து உரையும்,' என்னும் தொடர் அப்பூதியார் இன்னமும் மறைத்துப் பேசுதற்கு இடந்தந்திலது. அவர் வாய்மை தெளிவுற உரைக்க வேண்டும் என்னும் சீலத்தராய் மைந்தர்க்கு உற்றது பகர்ந்தார். உற்றது என்னும் சொல்லின் பொருளை நாமே உணரப் புலவர் புகன்று சென்ருர். உற்றது என்பது நடந்தது என்னும் பொருளது. நடந்தது யாது? பாம்பு கடிக்க மைந்தர் இறந்தது ஆகும். இதனை ஏன் சேக்கிழார் விளக்கமாகக் கூறிருரல்லர்? சொல்லின்றிச் சோர்வு கொண்டனரோ? அன்றி அறிவு சோர்ந்து இவ்வாறு அறைந்து சென்றனரோ? இரண்டும் அல்ல. வேறு என்னை? இன்னேரன்ன நிகழ்ச்சிகளை அடியவர்கட்கு நேர்ந்த அல்லல்களைச் சேக்கிழார் தம் வாயால் கூறக் கூசுவர். இஃது இவரது இயற்கைப் பண்பு. மெய்ப்பொருள் நாயஞர் வரலாற்றில் கைதவன் (வஞ்சகனை முத்தநாதன்) தன் உண்மை வடிவை மறைத்துச் சென்று அரசரைக் கத்திகொண்டு குத்திக் கொன்றதைக் கூறுகையில்,

"தான்முன் நினைந்த அப் பரிசே செய்ய''

என்று பாடி முடிக்கின்ருர். 'தான் முன் நினைந்த அப்பரிசு' என்பது மெய்ப்பொருளாரைக் கொல்ல வேண்டும் என்னும் எண்ணம் அன்றி வேறன்று.

இன்னணமே ஏனாதி நாயனார் வரலாற்றுள்ளும் புலவர் பெருந்தகையார் ஏனாதி நாயனாரைப் பகைவன் கொன்றான் என்றது,

'முன்னின்ற பாதகனும் தன்கருத்தே முற்றுவித்தான்'

என்று மொழிந்து போந்தார். இவ்வாறு பாடும் ஆற்றல் இவர் பெற்றதால் அன்றோ, இவர்க்குப் பின் போந்த வடநூற்கடலும் தென்னூற்கடலும் நிலைகண்டுணர்ந்த சிவஞான முனிவர்,

'தூக்கு சீர் திருத் தொண்டர் சிறப்பினை
வாக்கி னால்சொல்ல வல்ல பிரான்'

சேக்கிழாரை அன்றி, வேறு யாரே உள்ளார் என்று கூறுவாராயினர்? ஆகவே, சேக்கிழார் கவியின் கவினை அளத்தல் இயலாது.

உற்றது பகரக் கேட்ட உத்தமர் வாகீசர், உடனே எழுந்து சென்று, உயிர் அற்ற பிணத்தைநோக்கினார்; அண்ணலார் அருளும் வண்ணம் இசைப்பதிகம் பாடினார்; பாடிப் பாம்பின் விடத்தை நீக்கினார்.

பாம்பு கடியுண்டவரை எழுப்புதல் இயற்கை. இஃது இக்காலத்தும் நிகழும் நிகழ்ச்சி. எழுப்புதற்கு மணி, மந்திரம், ஔடதம் என்னும் முத்துறையாலும் முயல்வர். அத்துறைகளில் அப்பர் ஈண்டு மேற்கொண்ட முறை மந்திர முறை. மூத்த திருநாவுக்கரசு மேவிய உறக்கம் நீங்கி விரைந்து எழுவாரைப் போன்று எழுந்தார். எழுந்ததும் திருநாவுக்கரசர் திருவடிகளை வணங்கினார். அவரும் நீறு அளித்து வாழ்த்தினார்.

மைந்தர் உயிர் பெற்றமைக்குப் பெற்ருேர் எவ்வளவு பெருமகிழ்ச்சி கொள்ள வேண்டும்! அவர் இன்பம் அடைந்திலர்; துன்பம் கொண்டனர். ஏன்? 'அறிவரும்பெருமை அன்பர் அமுது செய்தருளு தற்குச் சிறிது இடையூறு செய்தான்' இச்சிறுவன், என்றுதான் சிந்தை நொந்தனர். பின்பு அப்பர் உணவு அருந்த அனைவரும் உணவு கொண்டனர். அப்பூதியார் இல்லத்தில் அப்பர் சின்ஞள் தங்கினர். அப்பர் என்றும் அழியாப் புகழை அப்பூதியாருக்கு அளிக்க எண்ணினர். அதன்பொருட்டுத் தாம் பாடிய திருப்பழனப் பதிகத்தில்,

'அஞ்சிப்போய்க் கலிமெலிய அழலோம்பும் அப்பூதி'

என்று ஈற்றுப் பாடலில் இயைத்துப் பாடினுர். (இவ்வடியின் திரண்ட பொருள், 'உலகில் வறுமை நீங்க யாகங்களைச் செய்யும் அப்பூதியார்' என்பது.) அப்பூதியாரும் திருநாவுக்கரசர் திருவடிகளைப் போற்றுதலையே பெருஞ்செல்வமாகக் கொண்டவர்.

துன்றிய நூல் மார்பராம் அப்பூதியடிகளார் என்றும் நிலவும் புகழ் பெற்றது எதனுல்? அன்னூர் அப்பர் அடியிணை அகத்துக்கொண்ட அருள் தொண்டினுல் எனில், அஃது ஒன்றுமட்டும் அன்று. அவரது அருள் தொண்டிற்கு அருந்துணையாய் நின்ற அவர் இல்லக்கிழத்தியாரது இணைந்த அன்புமே காரணமாகும். அவ்வம்மையார் கணவனுர்க்கேற்ற காரிகையாராய்க் குலவியதே பெருங்காரணமாகும். இத்தகைய அம்மையாரைக் கணவனுர்க்கேற்ற காரிகையார் என்று கூறுதல் சாலவும் பொருத்தமன்ருே?

4. தென்னர் குலப் பழி தீர்த்த தெய்வ மாதரார்

செந்தமிழ் நாட்டு அரசர்தம் குடிகளுள் மூவேந்தர் குடியே மூத்த குடி என்பது மூதறிஞர் கருத்து. இதனைப் பொய்யா மொழியாம் திருக்குறள்,

'பழங்குடி பண்பில் தலைப்பிரிதல் இல்'

என்னும் தொடரில் வரும் 'பழங்குடி' என்பதற்குப் பரிமேல் அழகர் வரைந்த பேருரையானும் அறியலாம். அவர் பழங்குடி என்னும் தொடரை விளக்குங்கால் 'தொன்று தொட்டு வருகின்ற குடி' என்பதோடு நில்லாது, 'சேர சோழ பாண்டியர் என்றாற் போலப் படைப்புக் காலந்தொடங்கி வந்த குடி' என விளக்கம் தந்து உரை எழுதியுள்ளார். இம்மூவேந்தர் குடியே சீரிய குடி; இமயம் சென்று தன் இலச்சினையை நிலை நிறுத்தி மீண்ட குடி; புலவர்கள் செந்நாவால் புகழும் குடி. இவற்றுள் பாண்டியர் குடி பழமையினும் பழமையது. பாண்டியர் என்னும் சொல் பண்டையர் என்னும் சொற்றிரிபே என்றும் மொழி நூல் வல்லுநரும் மொழிவர். ஆளுடைய அடிகளாரும் (மாணிக்கவாசகர்),

'பாண்டி நாடே பழம்பதி யாகவும்'

என்று கூறியுள்ளார். ஆண்டுத் திருக்கோவில் கொண்டு திகழும் பெருமானைத் திருநாவுக்கரசர்,

'முளைத்தானை எல்லார்க்கும் முன்னே தோன்றி'

என்று பழமையைப் பாராட்டியே பதிகமும் செய்தனர். நீதி நெறியினின்றும் பிறழாத நேர்மையுடைய குடி பாண்டியர் குடி எனில், அஃது உபசார மொழியாகாது; உண்மை மொழியேயாகும். தீமை செய்தான்போல் செங்கை குறைத்த செழியன் (பொற்கைப் பாண்டியன்) வரலாறே இதற்குத் தகுந்த சான்றாகும்.

இத்தகைய செழுங்குடிக்குச் சிற்சில காலங்களில் அக்காலக் கொடுமையால் பழிப்பும் வந்ததுண்டு.

'நெல்லுக் குமியுண்டு நீர்க்கு நுரையுண்டு
புல்லிதழ் பூவிற்கும் உண்டு'

அன்றோ? பேரொளியோடு பெருமிதத்துடன் ஒளிரும் பெருமதிக்கும் களங்கம் உண்டென்பதைக் காண்கிறோம் அன்றோ? அவ்வாறே இப்பண்டைய பெருங்குடியும் சிறிது மாசுற்றது. அம்மாசு தொடர்ந்து நில்லாது. அவ்வப்போது அகற்றவும் பட்டது.

பாண்டியன் நெடுஞ்செழியன் பொன் செய் கொல்லன் தன் சொல் கேட்டுக் கோவலனைக் கொலை செய்வித்தான். அதனால், அவன் செங்கோல் வளைந்தது. பின்பு கண்ணகி காட்டிய காரணங்கண்டு, கோவலன் கள்வன் அல்லன் என்பதை அறிந்து, தான் செய்த செயல் தவறு என்பதை உணர்ந்தவனாய், வாய் விட்டு,

'பொன்செய் கொல்லன் தன்சொல் கேட்ட
யானோ அரசன் யானே கள்வன்
மன்பதை காக்கும் தென்புலம் காவல்
என்முதல் பிழைத்தது கெடுகவென் னாயுள்'

என்று கூறித் தன் உயிரையும் போக்கிக்கொண்டான். நெடுஞ்செழியனது கோல் வல்வினையால் வளைந்தது. அஃதாவது, கொடுங்கோல் ஆயது. அவ்வளைந்த கோலை மன்னன் விடுத்த உயிர் தான் செல்லும் விரைவில் நிமிர்த்திச் செங்கோல் ஆக்கியே சென்றது. இதனை இளங்கோ அடிகள் இயம்பித் தென்னர் குலத்துக்கு நேர்ந்த பழியைப் போக்கப் பாடினர்.

'வல்வினை வளைத்த கோலை மன்னன்
செல்லுயிர் சென்று செங்கோல் ஆக்கியது'

என்பனவே அவ்வடிகளார் அமைத்த அடிகள்.

மற்றுமொரு சமயம் பாண்டியர் குடிக்குப் பழி வந்து சேர்ந்தது. அப்பழி அரசியல் துறையில் அன்றிச் சமயத் துறையில் நேர்ந்ததொன்றுகும். பாண்டியர் குடி சிவநெறி பிறழாச் செழுங்குடியாகவே சிறந்து விளங்கியது. இச்சிறப்பு, செழியன் நெடுமாறன் காலத்துச் சிறிது சீர்குறையல் ஆயிற்று. அச்சீர்க்குறையை அகற்றவே அம்மையார் ஒருவர் அரும்பாடு பட்டனர். அத்தெய்வ மாதரார் யாவர் என்பதை உணர்த்தவே இக்கட்டுரை எழுந்தது. இனி அதனைச் சிறிது ஆராய்வோமாக.

வையை என்னும் பொய்யாக் குலக்கொடி பொங்கிப் பாயும் மதுரை என்னும் மாநகர்க்

கண்ணே, கூன்பாண்டியன் என்பான் அரசு செய்து வந்தான். கூன் மாறன் உடற்குறையுடையனே; ஆனாலும், உள்ளக்குறை எள்ளளவும் இல்லாதவன்; தன் தோள் வலியால் பகைவரைப் புறங்கண்டவன். அவன் காலத்து வானவரையும் வளவரையும் வென்று, கன்னி நாட்டைக் (பாண்டி நாடு) காத்து வந்தான்.

நாடிழந்த பொறையனும் (சேரனும்) பொன்னித் துறையனும் (சோழனும்) மறத்தை மறந்து அறத்தைக் கைக்கொள்ள ஆவல் கொண்டனர். பனந்தார் மார்பன், கூடற்கோமான் குளிரடி பணிந்து வெறுக்கையையும் (செல்வத்தையும்) வேழத்தையும், காசையும் தூசையும் (ஆடையையும்) கலந்து ஈந்து பணிந்து சேர நாட்டை அடைந்தான். வளவனும் தன்னுடைய வளநாட்டைப் பெறத் தான் ஈன்ற மங்கையர்க்கரசியார் என்னும் மாதர் திலகத்தை மாறனுக்கு மணம் முடித்து மகிழ்வு கொண்டான்.

நெடுமாறன் மங்கையர்க்கரசியாரை மனைவியாராகப் பெற்றது, அவன் முற்பிறவியில் செய்த அருந்தவப் பேறே என்று அறையலாம். இவ்வம்மையாரைச் சிரபுரக்கோன் சிறப்பித்துப் பாடுங்கால்,

'மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக் கைமட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி'

என்றும்,

'சிவன்திரு நீற்றினை வளர்த்த
பந்தணை விரலி பாண்டிமா தேவி'

'மண்ணெலாம் நிகழ மன்னனாய் மன்னும்
மணிமுடிச் சோழன் தன் மகளாம் பாண்டிமா தேவி'

என்றும் பாடி இவ்வம்மையாரின் குலப்பெருமை குணப்பெருமை ஆகியவற்றைப் பலபடப் பாராட்டியுள்ளார்.

இத்தகைய எழிலும் ஏற்றமும் நிறைந்த ஏந்திழையாராம் மங்கையர்க்கரசியாரோடு மாறன் வாழும் நாளில்,

'நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்
கினத்தியல்ப தாகும் அறிவு'

என்பது போல, வல்வினை வலியால் சிவ நெறி நீத்துச் சமண் நெறி மேற்கொண்டு ஒழுகினான்.

'அரசன் எவ்வழி அவ்வழிக் குடிகள்'

ஆதலின், குடி மக்களும் அந்நெறியினைச் சார்ந்து இருந்தார்கள். இவர்கட்கிடையே சேற்றில் மலர்ந்த செந்தாமரை போல மந்திரியார் குலச்சிறையாரும், நங்கையார் மங்கையர்க்கரசியாரும் மட்டும், மறந்தும் புறந்தொழாதவராய்த் திருநெறியாம் சிவ நெறியே மேற்கொண்டொழுகினர்.

தம் கணவனார் சமய மாற்றம் உற்றதனால் மனம் வருந்தினார் மங்கையர்க்கரசியார்; 'பண்டு போல மீண்டும் என்று சிவநெறி பேணும் நிலையினர் ஆவாரோ!' என்று மதுரைச் சொக்கலிங்கப் பெருமானை நாடோறும் போற்றுவார் ஆனார்; 'என் கணவர் மீண்டும் திருநெறியிற் புகுங்காலம் எக்காலம் ஆமோ!' என்று ஏங்கியிருந்தார். இந்நிலையில் திருஞானசம்பந்தர் செந்தமிழ்ப் பாண்டி-

நாடு வந்துற்றுர். அவரைக் காண மங்கையர்க் கரசியார் மன்னன்பால் விடை கொண்டு மதிமுடிச் சொக்கன் கோயில் சென்றுற்றுர். மந்திரியார் குலச் சிறையாரும் ஆண்டு வந்து புகலி காவலரின் (திருஞானசம்பந்தரின்) பொன்மலர் அடியிணை முடி மிசைச் சூடினுர்.

திருஞானசம்பந்தர் ஆலயத்தையடையப் பாண்டிமாதேவியாரும் பாலருவாயரது (சம்பந்தரது) பாதமலர் சூடி வணங்கினுர்;

'பானலங் கண்கள் நீர்மல்கப் பவளவாய் குழறி'

'யானும் என் பதியும் செய்த தவம்' என்று நன் மொழி கூறி உபசரித்தார்; தாம் பெற்ற இன்பம் தம் கணவரும் பெறவேண்டும் என்னும் தயவால் தம்மொடு கணவரையும் இணைத்து, 'யானும் என் பதியும் செய்த தவம்' என்றே இசைத்தார். இன்பமும் துன்பமும் இருவர்க்கும் ஒன்றுதானே? சேக்கிழார் அரசினை மட்டும் குறிப்பிடும் மொழியால் கூருமல் அரசர்க்கும் நாட்டுக்கும் பொதுவாய் அமைந்த சொல்லாகிய பதியும் என்னும் சொல்லால் சிலேடைப் பொருளில் 'யானும் என் அரசனும்' என்றும், 'யானும் என் நாடும் (மதுரையும்)' என்றும் பொருள்படும்படி கூறியதும் சேக்கிழார் திறனைச் செப்ப வல்லதாகும்.

ஞானசம்பந்தர் ஒரு திருமடத்தில் வந்துற்றுர். அவரை அவணின்று அகற்ற வேண்டிச் சமணர் தீக்கொளுவினர். இதனை அறிந்த அருமறை அந்த

ஞளராம் சம்பந்தர், 'இத்தீ எம்மைச் சாராமல் பையவே சென்று பாண்டியற்காக,' எனப் பணித்தார்.

'பையவே' என்னும் சொல், ஞானசம்பந்தர் பதிகத்தில் பெய்யப்பட்ட சொல். அச்சொல்லின் பொருளினைச் சேக்கிழார் ஆழ நினைந்தார்; நினைந்து நினைந்து அதன்பால் செறிந்த அரும்பொருளை உணர்ந்தார்; அகங்களித்துக் கீழ் வரும் பாடலைப் பாடினார் :

'பாண்டிமா தேவியார் தமது பொற்பிற்
பயிலும்நெடு மங்கலநாண் பாது காத்தும்
ஆண்டகையார் குலச்சிறையார் அன்பி னாலும்
அரசன்பால் அபராதம் உறுத லானும்
மீண்டுசிவ நெறியடையும் விதியி னாலும்
வெண்ணீறு வெப்பகலப் புகலி வேந்தர்
தீண்டியிடப் பேறுடையன் ஆத லானும்
தீப்பிணியைப் பையவே செல்க என்றார்.'

'பையவே' என்னும் சொல்லின் பொருளை விளக்க எழுந்த பாடல் இது. அச்சொல்லின் விரிவுரை உரைக்கப் பாடப்பட்ட செய்யுள் இது. ஆளுடைய பிள்ளையாரின் அகத்தையுணர்ந்து ஆக்கப்பட்ட பாட்டு இது. தீப்பிணியைப் பற்றாது விரையப் பற்றின், பாண்டியன் இறக்கவும் நேரும். இறந்தால் பாண்டிமாதேவியார் மங்கல நாண் இழந்து அமங்கல நங்கையராய் வாழ நேரும். ஆதலால், இது நேரா வண்ணம் இருக்கவே அன்புடைய அகத்தால் 'பையவே' என்றார் என்றும், குலச்சிறையார் அரசன் பிழைக்க வேண்டுமென்று ஆசை கொண்ட அன்பர் என்பதை அறிந்து அதன்

பொருட்டும் 'பையவே' என்று பகர்ந்தார் என்றும், தீவைக்க உடன்பட்டது அரசன் குற்றம் ஆதலின், அவனும் அபராதம் உற்ருன் என்பதால் அத்தீப் பிணி அவனைச் சார அவன்பால் செலுத்தி அவன் பின்ஞல் உய்யவேண்டிப் 'பையவே' என்று பண்புடன் பகர்ந்தார் என்றும், அரசன் அழிவையுருது சிவநெறி அடையும் பேறும், தாமே தீண்டும் பேறும் பெறும் வாய்ப்புடையன் ஆதலின், அவன் உடல் ஊறு உருதிருக்கவே 'பையவே' என்ருர் என்றும், இன்னேரன்ன நயங்கள் பல பொருந்தப் 'பையவே' எனப் பாடிஞர் என்றும் சேக்கிழார் தெரிவிப்பது எத்துணை நயமுடையதாகக் காண்கிறது பாருங்கள்!.

வெப்பு நோய் செழியனைச் சேர்ந்தது. மருத்துவ நூல் வல்லவர் தம் பல்கலை அறிவால் நோய் தணியும் வகை தேடினர். இஃது இயற்கையால் அன்றிச் செயற்கையால் எழுந்த நோயாதலின், எரியிடை இழுது (வெண்ணெய்) உகுத்தாற்போல வளர்தல் ஆயிற்று. மன்னன் நோயால் வருந்திஞன். அருகு இருந்த அமைச்சரும் அருமனைக்கிழத்தியாரும், 'பிள்ளையார் அருளால் இது பெயரும்,' என்றனர். 'ஆற்றேல், அழைமின்,' என்று அரையன் அறைய, அது போது அரசனுக்கு ஆக்கந்தேடும் பேரறிஞர் இருவர் (மங்கையர்க்கரசியாரும், குலச்சிறையாரும்) வறிஞன் பொற்கிழி வாய்க்கப் பெறின், எத்துணைக் கழிபேருவகை எய்துவாஞே, அத்துணை இன்பம் கொண்டனர்.

ஞான போனகர் (திருஞானசம்பந்தர்), அரசனே ஆயினும் ஆண்டியே ஆயினும் வேற்றுமை கருதாது, ஒரு படியாகவே எண்ணும் ஒருமைப் பாடுடையர் ஆதலின், அரசன் அழைப்புக்கு இணங்கி வருவர் என்பதறிந்த அமைச்சரும் அன்புடைச் செல்வியாரும் சென்று அழைக்க மடத்திற்கு ஊர்தியிற்சென்றனர்.

கௌணியர் குலாதிபர் (சம்பந்தர்) அங்கயற் கண்ணியின் மணாளரை (மீனாட்சி சுந்தரேசரை) அகத்துட்கொண்டு அரண்மனை வந்துற்றார்.

பாண்டிய மன்னன் தன் வெப்பு நோயினைப் பொறுக்கலாற்றாது தீர்க்குமாறு வேண்டத் திருக்கழுமலத் திலகனார் (சம்பந்தர்) நீறு பூசி நோயை நீக்கினார். (பின்பு அனலும் புனலும் கரியாகத் திருநெறியின் சீர்மையினை விளக்கிக் காட்டப்) பாண்டியன் சம்பந்தர் பாதங்களைப் போற்றிச் சமண் நீங்கிச் சைவனானான்.

'வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே'

என்னும் திருப்பதிகம் ஓதி, 'வேந்தனும் ஓங்குக' என்னும் வாக்கால் பாண்டியன் கூனையும் நிமிரச் செய்து, நெடுமாறன் என்னும் வாழ்வையும் ஞான போனகர் ஈந்தார். இப்பாட்டின் திரண்ட பொருள், 'அந்தணர்களும், தேவர்களும், பசுக்களும் வாழ்க! மழை பொழிக! அரசனும் உயர்க! தீமை ஒழிக!

எங்கும் சிவனது திருப்பெயரே பரவுக! உலகே துன்பம் நீங்கி இன்பத்தில் ஆழ்க!' என்பது.

ஈண்டு நாம் பெரியதோர் உண்மை காணுதல் வேண்டும். அஃதாவது, மக்கள் தாம் பிறந்த சமய நெறியினின்றும் மாறுதல் கூடாது என்பது. அவ்வாறு செய்தல் ஆண்டவன் எண்ணத்திற்கும் ஆகாதது என்பது சிறந்த சித்தர் யோகர் துணிபாகும்.

சமயம் மாறினோரை என்னணமேனும் மீட்டுப் பண்டைய நெறியினர் ஆகச் செய்தல் நெறியுடையார் கடனாகும். வேற்றுச் சமயம் புகுந்தார் என்று விடவும் கூடாது. புகுந்தவர் மீண்டும் வர விருப்பம் கொள்ளின், அதனை வெறுத்தல் இன்றி ஏற்றல் வேண்டும். ஏற்கலாம் என்பதை விளக்குவனவே சமண் புகுந்த அப்பரும், கூன் பாண்டியனும் மீண்டும் சிவநெறி புக்கனர் என்று கூறும் வரலாறுகள். ஆகவே, இக்காலத்தவர் மதமாற்றம் உற்று மீண்டு வர விரும்பின் அவர்கட்கு இடம் தந்து ஏற்க வேண்டுவது கடனாகும்.

நெடுமாறன் சிவநெறி மேற்கொண்டான். மறையவர் வேள்விகள் (யாகங்கள்) மாறாது நடந்தன.

இகத்தினில் இன்பம் எழுந்தது. யாவரும் அங்கயற்கண்ணிதன்னோடு (மீனாட்சி) ஆலவாய் (மதுரையில்) அமர்ந்த அமலரை அன்புடன் வணங்கினர்.

பாண்டி மாதேவியார் தம் வரம் பலித்ததென்று பரவசம் உற்ருர். இவ்வம்மையாரால் அன்ருே தென்னர் குலம் உற்ற பழி தீர்ந்தது? தமிழ் நாடு தான் உற்ற இடர் நீங்கியது? இத்தகைய அம்மையாரைத் தென்னர் குலப் பழி தீர்த்த தெய்வமாதரார் என்று கூறுவது சாலப் பொருந்துமன்ருே? தெய்வச் சேக்கிழார் இம்மங்கையாரை மாதரசியாராகக் கருதிஞரல்லர்; மாதெய்வமாகவே கருதிஞர்; இம் மங்கையார் திருவடிகளைப் போற்றுவாரைத் தாமும் போற்றுவதாகக் கூறுகிருர்.

‘ மங்கையர்க்குத் தனி அரசி எங்கள் தெய்வம்
தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப் பாவை ’
பொங்கொளிவெண் திருநீறு பரப்பி ஞரைப்
போற்றுவார் கழலெம்மால் போற்ற லாமே ’

என்னும் அடிகளைக் காண்க. சேக்கிழார் பெண்கள் இனத்திற்குப் பேறு தந்து பேசியதைச் சிந்திப்போமாக!

5. மங்கலநாண் ஈந்த மாதரார்

கணவர் நல்வழி ஒழுகி அதனால் பொருளை இழந்தாரானாலும், அன்றி அல்வழி (தீயவழி) ஒழுகிச் செல்வத்தைச் சிதறச் செய்தாரானாலும், தம்மால் ஈயவல்லது எதுவாயினும் அதை ஈந்தே வந்தனர் தமிழ் நாட்டுக் கற்புடை மங்கையர்.

கோவலன் கண்ணகியை நோக்கி, "வஞ்சங் கொண்ட நெஞ்சமுடைய மாதவி என்னும் மங்கையைச் சார்ந்து, குலந்தரு பொருட்குன்றம் தொலைத்தேன். இச்செயல் எனக்கு நாணுத் தருகின்றது," என்று நவின்றான். அந்நிலையிலும் தன் கணவன் கையில் காசின்மையால் கவல்கின்றான் போலும் என்று எண்ணியவளாய் நலங்கொள் முறுவல் நகைமுகமே காட்டினள் கண்ணகி. "இன்னம் என் பால் பொன்னஞ்சிலம்பு உள்ளது. அதனையும் கொள்க," என்று ஈந்தனள். இங்கு எடுத்துக் காட்டிய இவ்வரலாறு அல்லவை செய்த கணவனுக்குக் காற்சிலம்பை ஈந்ததாகும்.

இனி நல்லவை செய்து நல்குரவு (வறுமை) எய்திய நன்மணாளனுக்குத் தாலியை ஈந்த தகவுடைய அம்மையாரின் தன்மையைச் சற்று உணர்வோமாக. இவ்வம்மையார் செயல் முன்னர்க் கூறிய கண்ணகி செயலினும் சிறிது கண்ணியமுடையதே. சிலம்பு ஈதலில் பெருமையில்லை; தாலியையே ஈதல் தனிப்பெருமையன்றோ?

பொன்னி நாடு (சோழ நாடு) 'எல்லாப்படியாலும் பொலிவுடையதே. இது நீர் வளத்தால் ஓங்கி விளங்கியது. இந்நாட்டிற்கு அழகு செய்யும் நகரங்களில் திருக்கடவூர் என்னும் திருப்பதியும் ஒன்று. இறைவருடைய எட்டு வீரத்தானங்களுள் காலனைக் காய்ந்த பதியும் இதுவேயாகும். நீர் வளம் நிரம்பப்பெற்ற கடவூர் நிலவளத்தில் சாலச் சிறந்தது என்பதைச் சாற்ற வேண்டுவதில்லை. வயல் எல்லாம் விளைசெஞ்சாலியும், வரம்பெல்லாம் வளையின் (சங்கின்) முத்தமும், அயல் எங்கும் கேள்விக் கூடமும் பெருகியிருந்தன. கமுகந்தோட்டம் ஆகாயம் அளாவிக் கணமுகிலைத் தொட்டு நிற்கும். இன்னணமாய செழுமைக்கோர் இருப்பிடமாய் இருந்தமையின், செய்தொழில்கள் சிறந்தோங்கி நின்றன. கடைசியரும் உழத்தியரும் பண்ணையில் பாடல் பாடிக் களிப்பர். கன்றுள்ளிக் கனைத்த மேதி (எருமை) பால் சொரிய, வாவியும் குளனும் பால் மணம் கமழும்.

இத்தகைய சீரிய திருக்கடவூர், பல்கு குடி மக்கட்குப் பதியே ஆயினும், அந்தணர் அருங்குடிக்கும் அகமாய் இலங்கியது. ஆண்டு வாழ்ந்த அந்தண உத்தமர்கள் வள்ளுவர் கூறிய,

> "அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
> செந்தண்மை பூண்டொழுக லான்"

என்னும் சீரிய இலக்கணத்திற்கு இலக்கியமாய் இலங்கினார்கள். அவர்கள் வதிந்த இடந்தோறும் சாமவேதம் சந்தமாய்ப் பாடப்பட்டது. அவர்கள் முத்தீ ஓம்பிக் கலியை வாராமே வேதத்தில்

விதித்தபடி செய்து வறுமை வாராதபடி தடுத்து வந்தார்கள். ஓதல், ஓதுவித்தல், ஈதல், ஏற்றல், வேட்டல், வேட்பித்தல் என்னும் அறுதொழில்களை யும் சிறிதும் வழுவல் இன்றி ஆற்றி வந்தார்கள்.

இவ்வந்தணர் குடியில் கலயர் என்னும் கவினுர் பெரியார் வாழ்ந்து வந்தனர். அவர் குங்கிலியக் கலயம்கொண்டு சிவத்தொண்டு புரிந்தமையால், கலயர் என்று வழங்கப்பட்டு வந்தார். அவர் அறிவு நிரம்பப் பெற்ற அந்தணர் சிகாமணியாய் இருந் தமையாலேதான் வேணிப்பிரான் (சிவபெருமான்) கழல் பேணி வாழும் பெற்றி பெற்றனர்.

"கற்றதனுல் ஆய'பயன்என்கொல் வாலறிவன்
நற்ருள் தொழாஅர் எனின்"

என்னும் குறட்பொருளை உணர்ந்து இறைவரிடத்து உருகிய அன்பும் கூர்த்த சிந்தையும் வாய்ந்து ஒழுக் கம் வழுக்கா ஒண்மையும் உடையராய்த் திகழ்ந்தார்.

சேக்கிழார் கலயனுர் குண நலங்களைக் குறிப்பிடு கையில் ஈறில் ஒழுக்கம் மிக்கார் என்று நினைவுடன் கூறியதைச் சிறிது சிந்தித்தல் வேண்டும். மக்கள் குடிப்பிறப்பால் தம்மை உயர்வாகக் கருதுதல் வழக்கமாய் இருந்து வருகிறது. அது முறையன்று. ஒழுக்கமே உயர்வுக்குக் காரணம் என்பது வள்ளு வர் போன்ற தெள்ளறிவுடையார் துணிபாகும். இத் துணிவு பொய்யில் புலவராம் திருவள்ளுவர்க்கு இன்று எனில்,

"ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்"

என்னும் குறள் எழுந்திருக்குமா ?

கலயனார்க்கு இழுக்கம் எய்தக்கூடாது என்று எண்ணிய அருண்மொழித்தேவர் வள்ளுவர் கருத்தை உட்கொண்டு 'ஒழுக்கம் மிக்கார்' என்று எடுத்துக் கூறுவார் ஆனார்.

கலை வல்ல கலயனார் கடவூர்க் கடவுளுக்குக் குங்கிலியத் தூபம் சாலவே நிறைந்து விம்மும் பணி தலை மேற்கொண்டிருந்தார். குங்கிலியம் என்பது இக்காலத்துச் சாம்பிராணி போன்று நன்மணம் கமழப் புகைக்கப்படும் பொருளாகும். இறை பணி செய்வோர் இயற்றும் தொண்டுகளுள் இதுவும் ஒன்று. நாவுக்கரசரும்,

"சலம் பூவொடு தூபம் மறந்தறியேன்"

என்று கூறியதையும் காண்க. இறை வழிபாட்டிற்கு இவை போன்றவை கருவிகளே அன்றி, இக்காலத்துக் கற்பூரம் கொளுத்திக் கவினுறு தளிகளைக் (கோவில்களை) கருமையாக்கும் வழக்கம் அக்காலத்து ஆலயங்களில் இல்லை.

கலயனார் இத்திருப்பணியை இடையறாது செய்து வருங்கால், வறுமை வந்து சிறுமை செய்தது. அவ்வறுமை அவர்பால் வர அஞ்சுமேனும், இறைவர் எண்ணம், அவரை வறுமை வந்து அணுக வேண்டும் என்பது. இதனை ஆசிரியர்,

'அங்கவர் அருளி னாலே வறுமைவந் தடைந்த பின்னும்'

என்னும் சொற்களால் சொற்றனர். இவ்வறுமை இவரை வாழவைக்க வந்ததே அன்றித் தாழவைக்க

வந்ததன்று. பொன்னை நெருப்பில் இட்டுச் சுடினும் அதன் ஒளி விஞ்சும். அது கருமை உறாது. இது போன்ற தன்மையதே ஆன்றோர்க்கு வரும் வறுமையும்.

"சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு"

என்று அன்றோ தமிழ் மறையும் முழங்குகின்றது? ஆகவே, கலயனார் வறுமையுற்றும் தாம் செய்பணியைத் தவறாது நடத்தி வந்தார். கலயனார் தம் தொண்டு முட்டுப்படாதிருக்க நிலத்தை விற்றார்; தனத்தை இழந்தார். இதனால் சுற்றமும் மக்களும் துன்புறலானார்கள். அந்த அரும்பொருள்களையும் இழந்து அவர் இப்பணிதலை மேற்கொண்டார் என்பதால் அவரது தலையாய அன்பின் திறம் புலனாகின்றது.

இல்லத்தில் உணவுக்குரியது ஒன்றும் இல்லை. இரு பகல் உணவு இன்றி மைந்தரும் நைந்து வாடினர். இந்நிலை கலயனார் மனைவியார் உள்ளத்தை உருக்கியது. அவர் மைந்தர் பசித்திருத்தலைப் பார்த்துச் சகித்திலர்; தம்பால் தாலியன்றி வேறு தரத்தக்க பொருள் இன்மையால் தம் கணவனார் கையில் தாலியை ஈந்து, "ஐய, நெற்சில கொண்மின்," என்றனர். இச்செய்கையால் அவ்வம்மையாரைத் தாலியை ஈந்த தையலார் எனக் கூறலாம் அன்றோ?

அம்மையார் அருங்குணம் தோன்றும் இடத்திற்குத் தோற்றுவாய் இதுவே. அவர் கணவனார்

மூந்தையோர் செல்வம் எல்லாம் முக்கணன் பணிக்கே ஈந்து வறியராயினர் என்பதை அறிந்தும், தம் மக்களும் உணவின்றி உறுகண் உற்றார் என்பதையும் உணர்ந்திருந்தும், தம் கணவனாரைக் கருத்தாலும் கழறாது (இடித்து உரைக்காமல்) காதல் செய் மனைவியார் என்ற நிலையில் இருந்ததை என்னென்று இயம்புவது!

கலயனார் கோதில் மங்கல நூலாம் தாலியைக் கொண்டு வெளியே போந்தார்; எதிரே குங்கிலியப் பொதியோடுற்ற வணிகனைக் கண்டார்; "இது நல்ல குங்கிலியம்; எம்பிராற்கு ஏற்றது," என்று வணிகன் கூறத் தாம் கொணர்ந்த தாலியை ஈந்து குங்கிலியம் பெற்றார்; பெற்றதை இறைவர்தம் கோவிலில் கொண்டு போய்ச் சேர்த்தார். அப்போது அவர் உற்ற உவகைக்கு அளவில்லை.

கலயனார் அன்பின் திறத்தையும் காரிகையார் அருளின் திறத்தையும் கண்ட காலனைக் காய்ந்த கண்ணுதலார், கலயனார் இல்லம் செல்வத்தில் சிறக்கச் செம்மனங்கொண்டார். இல்லம் எங்கும் பொற்குவையும் நெல்லும் பல்வளனும் பொங்கின.

'முன்னவனே முன்னின்றால் முடியாத பொருளுண்டோ ?'

இவற்றைக் கலயர் மனைவியார் கண் களிக்கக் கண்டார். "இதுவும் எம்பிரான் அருளாம்!" என்று தம் பெருங்கணவனார் கடும்பசி ஒழிக்கத் திருவமுதாக்கலுற்றார்.

இல்லம் செல்லாது இறைவன் தளியில் (கோவில்) இன்புடன் இருந்த கலயனார்க்கு, 'அகத்

துச் சென்று அடிசில் (உணவு) அயர்க,' என்ற கட்டளை இறைவர் அருளால் ஏற்பட்டது. அன்பர் ஆண்டவர் ஆணையைத் தலைமேற் கொண்டு அகத்தை அடைந்தார். வீடு மாடு (பொன்) பொங்க வீறிட்ட நிலை கண்டும் விருப்பும் வெறுப்பும் கொண்டிலர். இஃதன்றோ உள்ளத் துறவுடையார் இயல்பு! 'இஃது ஈசன் அருள்' என்று இனிது இருந்தார். செல்வத்தின் பயன் ஈதல். ஆதலின், கண்ணுதல் அன்பருக்கு இன்னடிசில் ஈந்து இன்பமுற்றார்.

இவ்வரலாற்றினின்று நாம் அறிவது யாது? 'என் கடன் பணி செய்து கிடப்பதே,' என்பதும், 'தன்கடன் (இறைவன் கடன்) அடியேனையும் தாங்குதல்,' என்பதும், அன்றோ? நம் கடமையில் நாம் முனைந்து உறைந்து நின்றால், ஒரு துயரும் உறாது என்பதை உன்னி உணர்வோமாக. வேண்டற்பாலது தன்னம்பிக்கையே.

" கொண்டானில் துன்னிய கேளிர் பிறர்இல்லை "

என்பதனால், தன்பால் உள்ள எதையும் அவனுக்கு ஈந்து இன்புற வேண்டுவது ஏந்திழையார் (பெண்கள்) இயல்பு என்பதையும் உணர்தல் வேண்டும்.

6. கணவனாரைத் திருத்திய காரிகையார்

திருத்துதல் என்பது ஒருவர்பால் தீமைகண்டும் அது மேலும் மேலும் பரவ ஒட்டாமல் அவர் நல் வழிப்படுவதற்கு முன்னின்று நன்மையின் நன்மை யையும் தீமையின் தீமையையும் எடுத்துக் காட்டித் திருத்துதல் நல்லது ஆகும். இப்பண்பை ஆடவர் முன்னின்று திருத்தினும் திருத்தலாம்; பெண்டிர் முன்னின்று திருத்தினும் திருத்தலாம். ஈண்டு அம்மையார் ஒருவர் தம் கணவரது தீய ஒழுகலாற் றைக் கண்டு தாம் பொறுக்க இயலாது திருத்திய செயலைச் செவ்விதின் ஆராய்வோமாக.

"ஆடவர், 'எதையும் செய்யலாம்; எவ்வாறே னும் நடக்கலாம்,' என்னும் உள்ளம் கொண்டவர். நாம் அதில் தலையிடுதல் ஒண்ணாது. கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருடன்," என்று எண்ணி இல்லக் கிழத்தி இருப்பாளாயின், அவளை வாழ்க் கைத் துணைவி என்று கூறுதல் இயலாது. அவ் வாறு எண்ணுதல் மாதரார்க்குத் தனிப்பெரும் பண்பு என்று கொண்டாலும், கணவனார் நல்வழிப்பட நடத்திவைத்தலும் அவர்கள் பண்பெனக் கொள்ளு தலும் அறிவுடைமையாகும்.

சிதம்பரம் என்பது சீரிய பதி. அப்பதியின் மாண்பைக் கூறப்புகுந்த ஆளுடைய பிள்ளையார்,

"கற்றுங்குளரி ஓம்பிக் கலியை வாராமே
செற்றூர்வாழ் தில்லை"

என்றே சிறப்பித்துப் பேசினர். அங்குக் கலி, (வறுமை) இல்லையானல், வளம் மிகுதியும் உண்டு என்பது புலனுகிறதன்றே? வளத்தினல் ஆண்டு வாழும் மக்கள் மாடமாளிகைகளிலும் கூடகோபுரங்களிலும் வாழ்ந்தார்கள் என்பதும் புலனுகும். இதனையே தெள்ளத்தெளியச் சண்பையர் கோன் சம்பந்தர்,

"செல்வநெடு மாடம் சென்றுசேண் ஓங்கிச்
செல்வமதி தோயச் செல்வம்உயர் கின்ற
செல்வர்வாழ் தில்லை"

என்று பாடினர்.

தென்னட்டின் திலகமெனத் திகழும் தில்லைமா நகரில் குலாலனர் ஒருவர் வாழ்ந்துவந்தனர். அவர் இல்லற நெறியை மேற்கொண்டொழுகிய இளைஞர். இறையன்பு நிறையப் பெற்ற இன்குணர்; கூத்தப் பெருமான் திருவடிகளைக் கும்பிடும் நலத்தின் மிக்கவர்; தம்மாலான அறச்செயல்களையும் ஆற்றி வந்தவர்;

"ஒல்லும் வகையால் அறவினை ஓவாதே
செல்லும்வா யெல்லாம் செயல்"

என்னும் சீரிய கொள்கையினர். 'உன்னல் அறச் செயல்களைக் கூடிய அளவுக்குச் செய்யக் கூடுமானல், அதனைச் செய்; பின் வாங்காது எவ்வெப்போது எல்லாம் செய்ய இயலுமோ, அவ்வப்போதெல்லாம் செய்,' என்பதே இதன்

கருத்து. உலகில் சிலர் செல்வம் இருந்தால் மட்டுமே சீரிய அறத்தைச் செய்ய இயலும் என்று எண்ணித் தம்மால் இயல்வதையும் இயற்றாது வாளா நாளைக் கழித்து வருவர். அக்குலாலனார், அத்தகையவர் களின் கூட்டத்தைச் சார்ந்தவர் அல்லர்; 'என் கடன் பணி செய்து கிடப்பதே,' என்னும் கொள்கையுடன், மெய்யன்புடையவர்க்குத் தம்மாலான தொண்டு புரிந்து வந்தனர். தம் குலத்தொழிலாகிய மட்பாண்டம் செய்யும் பணியில் ஈடுபட்டுப் பிச்சை ஏற்றுப் பிராணைப் போற்றும் அடியவர்கட்கு மண் ஓடு கொடுத்து மகிழ்ந்து வந்தார். இதுவன்றோ நல்லறத்தின் தன்மை? அறுவை (ஆடை) வணிகர் வறுமையாளர்க்கு ஆடையளித்தும், அவ்வாறே ஏனையோர் அகதிகளுக்கு அன்னம் அளித்தும் அறங்களை ஆற்றி வருதல், ஏழை எளியவர்களும் உயிரும் உடலும் வளர்க்க உறுதுணையாகும் அன்றோ? இன்னோரன்ன பண்பு நிறைந்தவர் சோழநாட்டுக் குடியினர் என்பதை எண்ணியன்றோ தெய்வச் சேக்கிழார்,

'சாதிகள் நெறியில் தப்பார்'

என்று செப்பியுள்ளார்?

குலாலனார் இன்குணம் படைத்தவர் என்பதைச் சேக்கிழார் பெருமான்,

'வேதியர் தில்லை மூதூர் வேட்கோவர் குலத்து வந்தார்'

என்றும்,

'நாதனார் கழல்கள் வாழ்த்தி வழிபடும் நலத்தின் மிக்கார்'

என்றும்,

'பொய்கடிந் தறத்தின் வாழ்வார்'

என்றும்,

'மெய்யடி யார்கட்கான பணிசெயும் விருப்பின் நின்றார்'

என்றும்,

'மனையறம் புரிந்து வாழ்வார்'

என்றும் கூறிப் போந்தார். இவ்வாறு அவ்வன்பரைப்பற்றிப் பேசிய சிறப்புக்களுள் பல அரிய பொருட்குறிப்புக்கள் அமைந்திருப்பனவேனும், ஈண்டுச் சேக்கிழார் பெருமானார் அவ்வன்பரின் குலத்தைச் சிறப்பு முறையில் பேசியதை மட்டும் விரித்துக் கூற வேண்டியுள்ளது. குலாலனார் என்பார் மண்ணைக் கையால் பிசைந்தும், காலால் மிதித்தும், மரக்கருவியால் தட்டியும், தகடுகொண்டு அறுத்தும் மற்றும் பல்லாற்றானும் செய்யும் செயல்களைக் கற்பனை உலகில் வாழும் கவிஞர்கள் எண்ணி, 'மண்ணிடத்து இவர்கள் பெருங்கோபம் கொண்டு இங்ஙனம் செய்கின்றார்கள் போலும்!' என்று கருதி இவர்களை 'வேட்கோவர்' என்று குறிப்பிட்டுப் பேசுவர். 'வேள்' என்னும் சொல் 'மண்' என்னும் பொருளைத் தருவது. இப்பொருளிலேதான் உழவர்கட்கு வேளாளர் (வேள்+ஆளர்) என்ற பெயரும் வழங்கப்பட்டு வருகின்றது. ஆகவே, குலாலர் குலத்தவரைக் குறிக்க வேட்கோவர் குலம் என்று கூறுதல் சாலவும் பொருத்தமானதே. ஆனால்,

அருண்மொழித்தேவர் இக்காரணம் கருதி மட்டும் 'வேட்கோவர் குலத்து வந்தார்,' என அவ்வன்பரைக் குறிப்பிட்டிருப்பதாக நாம் கருதுவதற்கு இல்லை. அவ்வன்பர் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்பினை நம் தொண்டர் சீர் பரவுவார் முன்னரே நன்கு அறிந்திருந்தார் ஆதலின், அவ்வாழ்க்கைக் குறிப்பின் கருத்தினைக் கொண்டே 'வேட்கோவர் குலத்து வந்தார்' என்று கூறினர். அஃதாவது, மன்மதனையும் கோபிக்கும் குலத்தவர் என்பதே அக்குறிப்பினை உணர்த்தும் கருத்து. வேள் என்னும் சொல் மன்மதன் என்றும் பொருள் தரும். இவ்வாறு இவ்வன்பர் மன்மதனைக் கோபித்த குறிப்புப் பின்வரும் நிகழ்ச்சியைக்கொண்டு உணரப்படும்.

நீருக்கு நுரையும், பூவுக்குப் புல்லிதழும், நெல்லுக்கு உமியும் இருப்பது இயற்கை. அது போல, அக்குலாலர் அன்பர் பணியும் அரன் பூசை நேசமும் ஒருங்கே உடையவரேனும், இன்பத்துறையிலும் சிறிது எளியவராய் விளங்கினர். இதற்குக் காரணம் அவரது இளமைக்கூறேயாகும்.

'இளமைமீ தூர இன்பத் துறையினில் எளிய ராஞர்'

என்றே சேக்கிழார் செப்பினர். இதஞல், தம் கற்பிற்குரிய மனைவியாருடன் வாழ்க்கையை நடத்தும் போதும், மற்றொரு மாதரார்மீதும் தம் உள்ளத்தை அவர் வைத்திருந்தனர் என்பது பெறப்படுகிறது.

குலாலர்க்கு அமைந்த இல்லக் கிழத்தியார் எழிலால் இழிந்தவர் அல்லர். அவ்வம்மையார் தேனலர் கமலப் போதின் திருவினும் உருவின்

மிக்கவர்; பூண் தயங்கு இளமென் சாயல் பொற் கொடியனையவர்; கற்புக்கோர் உறைவிடம்; வடமீன் (அருந்ததி) அன்ன கற்புடையவர். இன்னோரன்ன உடற்பண்பும் உளப்பண்பும் ஒருங்கே வாய்க்கப் பெற்றவராய் இருந்தும், அக்குலாலப் பெருந்தகை யார் சிற்சில சமயங்களில் வேறு ஓர் மாதுடன் உறைவாராயினர். தம் கணவனாரது செய்கையை அக்காரிகையார் அறிந்தார். தம் கணவனார் செய்கை தவறு என்பது அவர்தம் கண்ணிலும் கருத்திலும் பட்டது. இதனால், தம் வாழ்வு குறைந்தது என்பதற் காக அவர் வருந்தினார் அல்லர். இதனால் தம் கணவனாரது மானம் ஈனமாமே என்று தம் கருத்திற்கொண்டார்; தம் கணவனாரை எவ்வாறே னும் இப்பழக்கத்தினின்று விலக்க உள்ளங்கொண் டார்; இது செய்ய இயலவில்லை எனில்,

> ‘ தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
> சொற்காத்துச் சோர்விலாள் பெண் ’

என்று வள்ளுவர் கூறும் வாய்மொழிக்குத் தாம் இலக்கியமாய் அமைய இயலாதென்று எண்ணினார். இக்குறட்பாவின் பொருள், ‘ தன்னைக் கற்பினின்று வழுவாது காத்துத் தன் கணவனையும் தீய வழியில் போக ஒட்டாமல் அவனுக்கு வேண்டுவதைச் செய்து பழிச்சொல் வாராமல் காப்பவளே பெண் ஆவாள்,’ என்பது.

அம்மாதரார் இல்லற நெறிகளில் சிறிதும் வழுவி னார் அல்லர். உணவு சமைப்பர்; படைப்பர்; ஆனால், தம் கணவனாருடன் இணைந்து இன்முகம் காட்டி இன்புறு நிலையை அறவே ஒழித்தார். கண

வனார் அவ்வம்மையாரது பிணக்கத்தை நீக்கவேண்டிப் பணி மொழி பலவும் கூறி, இரந்தும் பார்த்தனர். அம்மையார் இணங்கினார் அல்லர். கணவனார் ஒருமுறை வலிந்து தம் மனைவியாரைப் பற்ற முயன்றனர். உடனே அக்காரிகையார் சிறிதும் தயங்காது, 'எம்மைத் தீண்டாதீர்! தீண்டுவீரேல், திருநீல கண்டத்தின் மீது ஆணை,' என்றனர்.

திருநீலகண்டத்தின்மீது ஆணை என்றதும் திகைத்தனர் அவ்வன்பராம் குலாலனார்; அல்லும் பகலும், 'திருநீலகண்டர், திருநீலகண்டம்' என்றே அத்திருநாமத்தை இடையறாது எண்ணுபவரானார். அதனால் அவர்க்குத் திருநீலகண்டத்தின் மீது தணியாா வேட்கை உண்டாயிற்று.

திருநீலகண்டம் என்பது அரனாருக்கு அழகு செய்யும் மிடறு. அது தேவர்களும் அசுரர்களும் திருப்பாற்கடலைக் கடைந்தபோது ஆன்று எழுந்த ஆலத்தை விழுங்கி அடக்கிக்கொண்ட குறியாகும். அன்று அவ்வாலத்தை அவ்விறைவர் தம் கழுத்தில் அடக்கிக் காத்திலராயின், தேவர் பலரும் மறைந்தே இருப்பர். அக்கருத்தினைக் கவிஞர் கருதிக் கவியும் புனைந்தனர். நஞ்சின் கொடுமையையும் நாதரின் அருளையும் திருநாவுக்கரசர்,

"அருள்கொடு மாவி டத்தை
எரியாமல் உண்ட அவன் அண்டர் அண்டர் அரசே"

என்று அன்பு கனியப் பாடிய தேவாரத்தால் அறியலாம். இவ்வாறு இறைவர் நஞ்சையுண்டிலை அருளிச் செய்திலர் ஆயின், தேவ மாதர் தம்

கணவன்மாரை இழந்து வருந்த நேரிட்டிருக்கும். அவர்கள் மங்கல மாதர்களாக மாண்புடன் இருக்க மாதொருபாகர் அந்நஞ்சையுண்டு அவர்கள் காதோலை கழலாதிருக்க அருள் செய்தார். இக் கருத்தினைக் குமரகுரபரர்,

" தம்பாவை யர்க்கன்று காதோலை பாலித்த தயவாளர் "

என்று கற்பனை செய்து கவி புனைந்த கவினை நோக்குங்கள்! இன்னோரன்ன மாண்பு அத்திருநீலகண்டத்திற்கு இருப்பதாலேதான் சங்கச் செய்யுள்களும் அதனைச் சிறப்பித்துப் பாடுகின்றன. அது செந்தண்மை பூணும் அந்தணர் பெருமக்களால் போற்றப்படுவது என்பதைப் புறநானூற்றுக் கடவுள் வாழ்த்துப் புகழ்ந்து பேசுகையில்,

" மறைநவில் அந்தணர் நுவலவும் படுமே "

என்று பாராட்டிப் பேசுகிறது.

குலாலனார் திருநீலகண்டப் பற்றுடையராய்த் திகழ்ந்ததனால், அவரைத் திருநீலகண்டர் என்றே இருநிலம் அழைக்கும் திருநாமமும் பெற்றார். அன்புக்குரிய அம்மையார் 'என்னைத் தீண்டுவீராகில்' என்னாது, 'எம்மைத் தீண்டுவீராகில்' என்று பன்மையில் கூறிய பான்மையால், பெண் இனத்தையே கூறியதாக எண்ணிய குலாலனார்,

" ஏதிலார் போல நோக்கி
எம்மையென் றதனால் மற்றை
மாதரார் தம்மை என்றன்
மனத்தினும் தீண்டேன் என்றார் "

இதனையன்றோ புலன் அடக்கம், பொறியடக்கம் என்று புகலுதல் வேண்டும்?

" ஊறு ஞானத் துயர்ந்தவ ரேனும்
வீறுசேர் மாதரை வெல்வரோ "

என்று கம்பர் கழறிய அருமைப்பாட்டைத் திருநீலகண்ட நாயனார் எளிமையாக்கினார்.

இவ்வமயத்துக் கல்வியில் பெரியராம் கம்பர் கழறியுள்ள மற்றொரு கருத்தும் நம் நினைவிற்கு வருகின்றது. அதுவே, சிறையிருந்த செல்வியராம் சீதா தேவியார் அனுமனுக்கு இராமனிடம் கூறுமாறு கூறிய அடையாள மொழியாகும்.

" இந்த விப்பிற விக்கிரு மாதரைச்
சிந்தை யாலுந்தொ டேன்என்ற செவ்வரம் "

என்பது அம்மொழி. இராமன் இங்ஙனம் தமக்கு வரக்களித்ததாகச் சீதாபிராட்டியார் நினைவுறுத்தக் கூறியனுப்பினர்.

கற்புறு மனைவியாரும் கணவர்க்கு வேண்டுவன எல்லாம் போற்றிச் செய்து வந்தனர். இருவரும் வேறு வேறு வைகினர் என்றாலும், அயலார் அறியாமை வாழ்ந்தனர். இதுவே இல்லறம் நடத்துவார் நற்பண்பாகும். குடும்பக் குழப்பம் எதுவாயினும், அதனை எவரும் அறியாவாறு நடந்துகொள்வதே சால்புடையதாகும்.

'கிருக சித்திரம், வெளியிடுதல் கூடாதது,' என்பது நீதி நூல் கருத்தும் ஆகும். ஆகவே, அயலறியாமை வாழ்ந்தார் என்பதும் அருமையினும்

அருமையாகும். அம்மையார் மெய்யுறு வாழ்வு நடத்திலராயினும், கணவனாரைப் போற்றும் கருத்தில் மட்டும் தவறுதவராய் நடந்து,

' தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண் '

என்பதற்குத் தாம் ஓர் எடுத்துக்காட்டாய் இலங்கி வந்தனர்.

கணவன் மனைவியருக்குப் பிணக்கு வருதல் உண்டு. இதனைத் தமிழ் இலக்கணம் 'ஊடல்' என்று உரைக்கும்.

ஆனால், திருநீலகண்டனார்க்கும் அன்னார் திருந்திழையார்க்கும் உற்ற பிணக்கு, நாள் கடந்து, வாரம் பல சென்று, திங்களும் எண்ணில தீர்ந்து, ஆண்டுகளும் பலவாகத் தொடர்ந்து இருந்தது. இதனால் அவர்கள் உடன் உறை வாழ்வின்றி ஒழுகலானார்கள். அவ்விருவரும் எது முதல் எது வரை இன்னணம் இருந்து வந்தனர் என்பதைக் கற்பனைக்கு ஊற்றும் துறைமங்கலத் துறவியார் சிவப்பிரகாசர்,

' புணரியுண் டெழுந்த புயல்நிகர் வளர்குழல்
அஃதுண் முகில்போன் றழகுறுங் காறும் '

என்று அழகுறத் தெளிவித்துள்ளார். அஃதாவது, அம்மையாரது கருங்குழல் சூல் கொண்ட மேகம் போன்று இருந்த இளமைக்காலந் தொட்டுக் கருவுற்ற வெண்முகில்போல முடிதுலங்கும் காலமாகிய முதுமைப்பருவங்காறும் இந்நோன்பினை மேற்கொண்டனர் என்பதாம்.

இவ்வாறு பல்லாண்டுகள் கழிந்தும் கருத்துக்கு உகந்த காரிகையார் தமக்கு இட்ட கட்டளையைத் தட்டினாரில்லை திருநீலகண்டர்; மாதரார் பிறரை மனத்தாலும் எண்ணினார் அல்லர். இத்தகைய சீரிய செயலை அவ்வம்மையார் செய்தமையின், அம் மாதராரைக் கணவனாரைத் திருத்திய காரிகையார் என்று கருதிக் கூறியது சாலவும் பொருத்தமே அன்றோ?

திருநீலகண்டனார் செயல் அரிய செயல்; பெரிய செயல். இளமை மீதூர இன்பச் செயலில் எளியராய் அவர் அணங்கனார் இட்ட ஆணைக்கு அடங்கி நடந்தார் எனில், அவர் பண்பாட்டை என்னென்று இயம்புவது! இந்த அருமைப்பாட்டை எண்ணி இறும்பூதெய்திய முற்றும் துறந்த முனிவராம் பட்டினத்தடிகளார்,

‘மாதுசொன்ன சூளான் இளமை துறக்கவல் லேன் அல்லன்’

என்று பாராட்டிப் பேசினார். சூள் என்பது ஆணை.

7. உத்தி கூறிய உத்தமியார்

மாதரார் தாம் மணந்த காதலர்க்கு அன்னை யாகவும், அடியார் ஆகவும், அமைச்சராகவும் அமைகின்றனர். அறுசுவை உண்டியை அட்டு (சமைத்து) அருமைக் கணவனை அருந்துதலின் அன்னையர் ஆகின்றனர்; அகமுடையாருக்கு ஆவன செய்யும் தொண்டினை உளம் கோணாது இயற்றலின், அடியார் ஆகின்றனர்; உறுங்கவல் ஒன்று உற்றுழி, உத்தி கூறித் தம் கணவருக்கு ஊக்கம் அளித்தலின் அமைச்சர் என்னும் அருநிலை பெறுகின்றனர். இவையனைய அருங்குணங்கள் ஒருங்கே மங்கையரிடம் மண்டிக் கிடத்தலின், இவரை இழந்தால் எல்லா நலனும் இழக்க நேரிடும் என்பதை உளங்கொண்ட நம் முன்னோர்,

'பொற்றொலி யோடெவையும் போம்'

என்னும் பொன்னுரையையும் புகன்று சென்றனர். இந்தப் பண்பு அமைந்த அம்மையார் ஒருவரின் வாழ்க்கைக் குறிப்பை வரைவதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

தமிழகத்தின் சிற்றூர்களில் 'இளையான் குடி' என்பது ஓர் இனிய பதியாகும். அச்சிற்றூர், குடி மக்கட்செறிவு (நெருக்கம்) குறைவறப் பெற்றது. அங்குள்ள குடிகள் எதற்கும் இளையாத ஈர நெஞ்சி னர். அக்குடிமக்களுள் மாறனார் என்னும் மாண்

பெயருடைய வேளாளர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் உழுதுண்டு வாழும் உத்தமத் தொழிலால் ஊதியம் பெருக்கிச் சிறக்க வாழ்ந்தனர். அவர் நாள்தோறும் தம் இல்லம் நோக்கி வரும் வறியர்க்கும், எளியர்க்கும், இறைவரின் திருநாமம் கூறும் திருக்கூட்டத்தினர்க்கும், மங்கள வேடம் பூண்ட மாட்சியையுடையவர்க்கும் சோறும் கூறையும் சோராது அளித்து வந்தார். அவர்க்கு அடியார் பத்தி அதிகம். எவரையேனும் அவர் காண நேரிடின், அவரை வீட்டிற்கு அழைத்து வருவார் ;

‘ கொண்டு வந்து மனைப்பு குந்து
குலாவு பாதம் விளக்கியே
மண்டு காதலின் ஆத னத்திடை
வைத்த ருச்சனை செய்தபின்
உண்டி நாலு விதத்தில் ஆறு
சுவைத்தி றத்தினில் ஒபபிலா
அண்டர் நாயகர் தொண்டர் இச்சையின்
அமுது செய்ய அளித்துளார்.’

அவர் இம்முறையில் தம் கடமையை ஆற்றி வருவார் ஆயினர். அவர் தம் நன்செய் நிலங்கள் நல்ல பலனை அளிக்க அவர் அளகேசன் நிகராக வாழ்ந்து இல்லறத்தை இனிது நடத்தி வந்தார்.

மக்கள் இயல்பு, தமக்கு மாண்பொருள் உள்ள காலத்தில் அறச்செயல்களைச் செய்வதாகும். அது குறைவுற்றபோது தருமம் செய்யச் சிறிது தளருவர். அடுத்துக் கேட்டாலும், ‘ தனக்கு மிஞ்சித்தானே தருமம் ?’ என்று பழமொழி கூறிப் பரிகசிப்பர். ஆனல், வறுமையிலும் செம்மையுடையவராய்த்

தாம் மேற்கொண்ட விரதம் எவ்வகையிலும் கெடாதவாறு, தம்மால் ஆன உதவியைச் செய்து இசை (புகழை) நிறுவுபவரே மாந்தர் என்னும் பண்புக்குரியவர் ஆவார்; அன்றேல், பெரியர் என்றோ, சீரியர் என்றோ செப்ப இடம் பெறாதவராய்ப் பொது மக்கள் என்னும் பெயர் அளவில் நிற்பர். ஒருவர் பெரியர் ஆதற்கும் சிறியர் ஆதற்கும், அவர் செயல்களே சிறந்த காரணங்கள் ஆகும்.

'தன்னைத் தலையாகச் செய்வானும் தான்'

என்று தமிழ் நூல் சாற்றுவதும் இக்கருத்தைப் பற்றியதே ஆகும். அரிய செயலை மக்கள் ஆற்ற முற்படுகையில் அரிய சோதனைகளும் ஏற்படும். அக்காலத்திலும் மனம் தளரல் அடாது. தளர்ச்சியைக் கொடுக்க இயற்கைச் சூழலும் இடங்கொடுக்கும். அக்காலங்களில் நெறி தவறாத மாந்தர் அதனையும் எதிர்த்துத் தங்கள் கொள்கையை நிலை நிறுத்துவரேல் நிலவுலகில் நீடு பயன் எய்துவர்.

இத்தகைய சோதனைக்காலம் மாறனார்க்கும் நேர்ந்தது. அவரது செல்வம் மெல்ல மறைந்து, அவர்க்கு நல்குரவை (வறுமையை)த் தந்தது. இதனைக் கவிஞர் கூறுகையில்,

'செல்வம் மேவிய நாளில் இச்செயல்
செய்வ தன்றியும் மெய்யினால்
அல்லல் நல்குர வான போதிலும்
வல்லர் என்றறி விக்கவே
ஒல்லை யில்வறு மைப்பதம்'

வந்ததாகக் கூறுகிறார். அறிஞர்பால் அமைந்த வறுமையாதலின், சேக்கிழார் அதனையும் ஒரு பதவி

போல அவர்கள் கருதுவார்கள் என்பதைக் காட்டு வார்போல 'வறுமைப் பதம்' என்று கூறியதை நாம் ஆழ நினைந்து அதன் பொருளை நன்கு அறிந்து உணர வேண்டுபவராய் உள்ளோம். மாறனார் வளஞ்சுருங்கினும் மனஞ்சுருங்குதல் இலராய் ஏழை எளியவர்களின் அழிபசியைத் தம்மால் கூடிய முறையில் தீர்த்து வந்தார்.

வறுமை நோய் உழந்த வள்ளலாம் மாறனார் தாம் இருக்க வீடும், விதைக்கச் சிறு நிலனும் தவிர்த்து ஏனைய செல்வங்கள் யாவும் இழந்து நின்ற வாழ்நாளில் இறைவனார் முதுமைக்கோலத்தோடு மாறனார் வீடு தேடி வருவாராயினார். அவர் வருகின்ற நேரமோ, இருள் அடர்ந்த கங்குல் காலமாம் கார்காலம். மேகம் 'உள்ளி உள்ளவெலாம் உவந்தீயும் வள்ளியோரின் வழங்கிச்' சிறிது சலித்து நின்ற நேரம். வரும் முதியவரின் கோலமோ, தள்ளாடித் தளர்ந்து வரும் கோலம். முதியவர் பசிப் பிணி விஞ்சியவராய்ச் சோறு கருதி மாறனார் இல்லத்திற்கே சோர்ந்து வந்து சேர்ந்தார்.

மாறனார் அம்முதியவரைக் கண்ணுற்றதும் முதலில் உதவி செய்ய முனைந்து நின்றார்; அவரது ஈரமேனியை ஈர அன்புடன் தூய ஆடை ஈந்து துவட்டச் செய்தார்; வீட்டினுள் ஆசனத்தில் அமர்த்தினார். வந்த முதியவர் பசியைப் போக்க வழி தேடலாயினர். மாறனார் தம் வீட்டில் உணவு இன்மையை நன்கு அறிவர்; என்றாலும், வந்த விருந்தினருக்கு எந்தவிதத்திலும் உண்டி கொடுத்து உதவ வேண்டும் என்று உளங்கொண்டார்.

'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்' என்னும் பண்டைத் தண்டமிழ்த் தொடர், அன்று இல்லத்திற்கு வந்த முதியவர் நிலைக்கு மிக ஏற்றது என்பதையும் நன்கு அறிந்தார்; ஆகவே, தம் வாழ்க்கைத் துணைவியாராகிய தம் இல்லக்கிழத்தியாரோடு இது பற்றி யாது செய்வதெனச் சிந்திப்பார் ஆயினர்.

அவ்வம்மையார் பொருந்து கல்வியும் அறிவும் பூத்திருந்த காரணத்தால், வருந்தி வந்தவர்க்கு விருந்தளிக்க வேண்டுவது தம் தலையாய கடன் என்று கணவனார் கருத்துக்கிணங்க இசைந்தார். ஆனால், அவ்வம்மையார்க்கு மட்டும் ஒரு கவலை ஏற்பட்டது. அது, 'நாம் பரம ஏழைகளாகிவிட்டதால், அக்கம் பக்கத்தவரும் ஆதரித்து எதுவும் தர முன் வாராரே! மேலும் இரவு வேளையாய் இருந்தலின், எங்குச் சென்று மன்றாடி உதவி பெறுவோம்?' என்பதே. என்றாலும், அறிவு மீதூரப் பெற்ற அவ்வம்மையாருக்கு இறைவரது அருட்டிறத்தால் திடுமென ஒரு சிந்தனை எழுந்தது. அவர் தம் கணவனாரை நோக்கினர்; "காதலரே, நம் வறுமை நீங்க இன்று நம் செய்யில் (வயலில்) நெல் விதைத்தனம். அவை இதுபோது மழை பெய்த காரணத்தால் வெள்ளத்தில் மிதந்து கிடக்கும். அவற்றை நீர் வாரிக் கொணரின், வல்லவாறு சோறு சமைத்து விருந்தினரை உபசரிக்கலாம்,' என்றனர். இதைக் கேட்ட மாறனார்க்கு என்றும் இல்லா இன்பம் உண்டாயிற்று, அவர் நடுக்கடலில் திசை கெட்டு மயங்கும் ஒரு மாலுமிக்குக் கரை ஒன்று காணப்பட்டாற்

போலக் கழிபேருவகை பூத்தார்; இருளென்றும் மழையென்றும் பாராதவராய் இடாவிணைக் (இறை கூடை) கையிற்கொண்டே வெளிக் கிளம்பினுர்.

மாறனுர் வந்து கண்ட போது அலகையும் (பேயும்) அஞ்சும் அத்துணை இருள் அடர்ந்திருந் தது. மைக்குழம்பை வாரியிறைத்ததுபோல இருள் காணப்பட்டது. புள்ளும் விலங்கும் உறங்கும் அப் பேரிருளில் அவர் குறி வழியே நெறி தேடித் தம் நிலத்தையடைந்தார்; தம் மனத்துக்கினிய மணைக் கிழத்தியார் கூறியாங்கு விதை நெற்கள் மழை மிகுதியால் மேலே மிதந்துகொண்டிருந்தன. அவற் றுள் தாம் எவ்வளவு திரட்ட இயலுமோ, அவ் வளவையும் திரட்டிக் கூடையில் சேர்த்துக் கொண்டு அவ்விருளிலேயே வீடு திரும்பினுர்.

உத்தி கூறிய உத்தம மாதரார் கணவனுர் வருகை நோக்கிக் கடையகத்துக் காத்து நின்றிருந் தார். இருளையும் எழிலியின் குமுறலையும் (மேகத் தில் எழும் இடியையும்) கண்டும் கேட்டும் நெஞ்சம் துணுக்குற்ருரேனும், தம் கணவர் கொண்ட விரதம் பழுதுருமல் வீடு நோக்கி வந்த விருந்தினரை உண் பித்து உபசரித்தலே தமக்குப் பெரும்பேருகும் என்று கருதினுர்; கணவனுர் கொண்டு தந்த சேற்று டன் கலந்த செந்நெல்லை ஒரு பாத்திரத்தில் பெய்து அலம்பினுர். நெல் ஈரம் செறிந்து மெத்தென்றி ருந்தது. அப்படியே சமைப்பின் சோறு குழம்பி விடும் என்று எண்ணியவராய் அவற்றை முதலில் சூடேற்றி வன்மையாக்கச் சமையல் அறைக்குட் புக்கார். அந்தோ! அவர்களின் வறுமைக்

கொடுமைதான் இருந்தவாறு என்னே! அவர், 'அடுப்பில் தீமூட்ட விறகில்லையே!' என்று கணவனார் முகத்தை நோக்கினார். அக்குறிப்புணர்ந்த மாறனார் தம் வீட்டுக் கூரையிலிருந்து சில மரத் துண்டங்களை அறுத்துக் கொடுத்தனர்; மனையின் அலக்கு அறுத்துத் தள்ளப்பட்டால் தம் அகத்தின் அந்தம் குறையுமே என்றுகூடக் கருதினார் அல்லர்; அருமைத் தொண்டரின் பசியைப் போக்கின், அதுவே தமக்கு அழகு என்று அகத்துள் கொண்டார்.

மாறனார் மனைவியார் அடுப்பில் தீ மூட்டினார்; ஈர நெல்லின் தண்ணீமையைப் போக்கி, வெம்மையை ஊட்டினார்; அரிசியாக்கி உலையிற்பெய்து நல்லமுது ஆக்கி அமைத்தார். நல்ல அமுது செய்ததன்பின் கறியமுதுக்குக் கருதுவார் ஆயினர். மாறனார் பால் மாதரசியார் கறியமுதுக்கென் செய்வதென்று விண்ணப்பித்தபோது மாறனார் ஞெரேலெனப் புறக் கடை சென்று, கீரைப் பாத்தியிலிருந்து சிறிது கீரையைப் பறித்து வந்தனர்.

கீரையைப் பெற்ற ஏந்திழையார் வறிஞனுக்குப் பொற்கிழி கிடைத்தாற்போல மனம் மகிழ்ந்தவராய் அதை ஒரு பாண்டத்தில் இட்டு முன்னர் நன்கு அலம்பினர்.

இங்கு நாம் சிந்தனை செய்ய வேண்டுவன பல உள்ளன. மாறனார் மனைவியார் அட்டில் (சமையல்) தொழில் ஆற்றுவதிலும் எத்துணையோ கைதேர்ந்தவராய் உள்ளார் என்பது தெரிகின்றது.

ஈரம் மிக்க நெல் இனிய சோறு சமைக்க இடந் தாராதே என்று எண்ணித் தீமூட்டி அதனைச் சிறிது வறுத்தெடுத்தார்; பின்பு கீரைக்கறி கொணர்ந்த போது அது நிலத்தில் படரும் பயிர் ஆதலின், மண் மிகுதியாகக் கலந்திருப்பின் உண்ணுவதற்கு ஒண்ணுதே என்று அதனைப் போக்க அலம்பி எடுத்தார். இன்னோன்ன பண்புகள் மாதர்கட்கு இன்றியமையாத அட்டிற்பண்புகளாக இருக்கவேண்டும் என்பதற்கு அவ்வம்மையாரைப் போன்றவர்கள் வழி காட்டிகளாய் இருக்கின்றூர்கள். இன்ன பண்பு வள்ளுவனாரின் வாழ்க்கைத் துணைவியார் வாசுகி அம்மையாரிடத்தும் அமைந்திருந்தது. அதனுலே தான் அந்த அம்மையாரின் அட்டில் தொழிலை வியந்த வள்ளுவனார் 'அடிசிற்கினியாளே!' என்று பாடுவாராயினர். அவ்வருந்தொடரை இவ்வம்மையார்க்கும் சார்த்தி வழங்கலாம் அன்றோ!

மாறனார் மனைவியார் அட்டில் திறம் இத்துடன் நிற்கவில்லை. மாறனார் கொணர்ந்த கறி உணவு கீரை ஒன்றே. அவ்வொன்றைப் பலவாகச் சமைத்துப் பாகம் செய்ததுதான் நாம் பாராட்டுவதற்குரியதாகும். அக்கீரைக் கறி ஒன்றே கூட்டலாகவும், துவட்டலாகவும் தம் கைவன்மையோடு அறிவு வன்மையையும் கூட்டி ஆக்கி அமைத்தார் எனில், நாம் அவ்வம்மையாரை எவ்வாறு புகழ்வது! அவ்வம்மையாரின் கைவன்மையை வியந்த புலவர்

'கைவினைமை யினில்வேறு வேறுகறி யமுதாக்கி'

என்று பாடிப் பரவசமுறுவார் ஆயினர். 'இல்லது

என் இல்லவள் மாண்பானல்?' என்பது உண்மை யன்றோ?

அம்மையார் உணவு சமைத்துக் கறியமுதாக்கி முடித்த பின், 'வந்த விருந்தினர் நாம் வளத்துடன் வாழும் காலத்தில் வந்திலரே! இவர்க்கு இவ் வெளிய உணவு ஈயும் காலம் நேர்ந்ததே!' என்று உளம் நொந்தார்; பிறகு பசிக்களைப்பால் பாயில் துயின்ற பெரியாரை எழுப்பி அன்புடன் உணவு அருந்த அழைத்தனர். இவ் விரு பேரன்பின் உடலங்கள் உள்ளன்பால் உழைத்துச் செய்த அனைத்தையும் அறிதுயில் கொண்டு அறிந்தவராய் ஆண்டு வந்திருந்த இறைவனார், கரந்து அவ்விரு வர்க்கும் அம்மையப்பராய்க் காட்சி தந்து ஆசி கூறினர்.

அன்று முதல் மாறனாரும் மாதராரும் நாளுக்கு நாள் வறுமை நீங்கிப் பெருமை பெற்றுப் பின்பு நீடுவானில் நித்தராய் விளங்கினர்.

மாறனார் நித்தராய் நீடூழி வாழ்வதற்குப் பெருந் துணை புரிந்த பெருமை யாரைச் சாரும்? நெல் கொணர உத்தி கூறி, கொணர்ந்த நெல்லை வறுத்து அரிசியாக்கிச் சமைத்து, கொணர்ந்த கீரையை நீரில் அலம்பிப் பல வகைக் கறியமுதாகச் சமைத்த அம் மையாரை அன்றோ சாரும்? அவ்வம்மையார் இவ் வாறு செய்திலர் எனில், மாறனார் மாண்பு பெற இயலுமோ? இயம்புமின்!

8. மனையை மங்கலம் ஆக்கிய மாதரார்

மாதரார் பூங்கொடியனையார் என்று புலவர்கள் புனைந்து கூறுதல் உண்டு. கொடி கொழுகொம்பு இன்றிப் படராது. அது போல, மாதராம் பூங்கொடியும் ஒரு கொழுகொம்பு பற்றியே படர்தல் வேண்டும். அவர்க்குக் கொழுகொம்பாகிக் குலவி வருவோர் அவர் அவர் மணந்த கணவன்மார் அன்றி, வேறு அல்லர். ஆகவே, பூவையர்க்குக் கணவர் பெருந் துணைவர் என்பது அறியக் கிடக்கின்றது. அவர் இன்றேல், வாழ்வு இல்லை; சீர் இல்லை; சிறப்பு இல்லை; கேளும் (நண்பர்கள்) இல்லை; கிளையும் (உறவினரும்) இல்லை; ஒருகால் இருப்பினும், உபசாரம் ஆகுமே அன்றி உரிமையுடையவர் ஆகார். இதனாலேதான்

"கொண்டானின் துன்னிய கேளிர் பிறர்இல்லை"

என்றும்,

"கணவனை இழந்தோர்க்குக் காட்டுவதில்"

என்றும் தமிழ் நூல்கள் சாற்றுகின்றன. இது கருதியே தலையன்புடைய பெண்டிர் கணவர் இறந்ததும் உடன்கட்டை ஏறும் வழக்கமும் கொண்டனர். உடன்கட்டை ஏற வந்துநின்ற கோமகளைத் தடுத்த பெரியவர்களைப் பழித்தும் உரைத்துள்ளார் நம் நாட்டுக் கற்புடைய காரிகையர்.

இப்பண்புகள் வாய்க்கப் பெற்ற பெண்கள் சமூகத்தைச் சார்ந்தவர் கலிக்காமர் என்பாரின் தேவியார். அவ்வம்மையார் எங்ஙனம் நடந்துகொண்டனர் என்பதை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

வண்புகழ் கொண்ட சோழ வளநாட்டில், திருப் பெருமங்கலம் என்னும் பெயரிய பெரும்பதி சிறப் புடன் விளங்கியது. இது பொன்னி (காவிரியாறு) பொன் கொழிக்கும் வடகரைக்குக் கீழ்ப்பால் உள்ளது; கொடிமாட நெருக்கத்திற்கொரு குறையும் இல்லாதது; மஞ்சு சூடும் இஞ்சியும் (மதிலும்) வரை மருளும் வளமார் மாடியும் உடையது. ஆண்டுள வீதிதோறும் விழாக்கள் நடந்து வந்தன. முழவின் ஓசைகள் அரங்கெலாம் ஒலித்தன. இன்னோரன்ன வளமுடைய எழிற்பதிக்கண் ஏயர்கோக்குடி ஒன்று ஏற்றமுற்றிருந்தது. அக்குடி உழவுருத உத்தமக் குடி; வளவர் தானையை (சோழர் சேனையை) வள முற நடாத்தும் சேனாதிபதி குடியென்று செப்பும் நலனும் சிறக்கப்பெற்றது. அக்குடிக்கொரு விளக் கம் போலவும் பன்மீன் (நட்சத்திரம்) நடுவண் பான் மதி போலவும் கலிக்காமர் என்னும் கண்ணியர் தோன்றினார்.

கலிக்காமர் அரனார் அடியை மறவா அன்பினர். அவர் வாழ்பதிக்கு அண்மையதான திருப்புன்கூர்த் திருப்பதியிடம் தீராக் காதல் உடையவர்; அதற்கு ஆய திருப்பணி பலவும் ஆற்றும் விருப்பு மிக்கவர். அவர்க்கு வாய்த்த மனைவியாரோ, பதி சொல் தவறாப் பான்மையராய்க் கற்புக் கடம் பூண்ட

காரிகையாராய் இலங்கினர். ஆகவே, அக்காதல் மனைவியாரும் காதலரும் மாறின்றித் தீதில் கருமங்கள் இயற்றி இனிது வாழ்ந்து வருவாராயினர்; இறைவரின் கழல்களையே துணை எனப் பேணி வந்தனர். இது நிற்க.

வன்தொண்டப் பெருந்தகையாராம் சுந்தரருக்கும் பரவையார் என்னும் பாவையர்க்கும் ஊடல் சிறிது உளதாயிற்று. அதனைத் தீர்க்கப் பரவையார் கணவனுர், பரமரையே தூது போக்கிப் பரவையார் பிணக்கைத் தீர்த்துக்கொண்டார். இதனைக் கேட்டனர் கலிக்காமர். 'வேதமும் காணு விமலரைப் பாதம் நோவத் தூது செல்ல விடுத்தது பாவம்!' என்று கொண்டு, தம்பிரான் தோழரை (சுந்தரரை) அகத்தும் புறத்தும் அறவே வெறுத்திட்டார்; வெம்பினுர்; அதிசயித்தார்; வெருவினுர். "எம்பிரான் இசைந்தாரேனும் ஏவப்பெறுவதோ! இதனை எண்ணி உள்ளம் கம்பியாதவனை யான் என்முன் காணும் நாள் எந்நாள்?" என்று சுந்தரரைக் காணும் நாளை எதிர் நோக்கி நின்ருர்; "வரவெதிர் காண்பேனுகில் வருவது என்னுங்கொல்?" என்றும் கறுவினுர்.

கலிக்காமர்க்குக் கடுஞ்சினம் எழுகின்றது; ஆனுல், கடுஞ்சொல் எழுந்திலது. இன்னது செய்வேன் என்று இயம்ப எண்ணுகிருர். ஆனுல், மனத்துக்கண் மாசிலர் ஆதலின், கடுஞ்சொற்கூற உள்ளம் கூசுகிறது. இதுவன்றோ சான்ருேர் இயல்பு? சீற்றத்தினும் செம்மை காணும் சீரியர் அல்லரோ அன்னுர்?

இந்நிலையில் இறைவனார் இவ்விருவரையும் ஒன்று சேர்க்க உளம் கொண்டார். எல்லாம் வல்ல இறைவர் ஆதலின், ஏயர்கோனார்க்கு வாடுறு சூலைநோய் வந்து அணுகவே எண்ணங்கொண்டார். அடியரை ஆட்கொள்ளும் முறையில் அங்கணர் மேற்கொள்ளும் வழிவகைகட்கு ஓர் அளவு இல்லை. ஒருவற்கு ஞான அமுது உதவுவர்; ஒருவர்க்கு நாட்டிற்கிலாத குடர் நோய் நல்குவர். அஃது அவர் செய்யும் ஆடல் ஆகும். இதனால் அன்றோ, அவரை அலகிலா விளையாட்டுடையான் என்று அறிஞர் அறிந்து கூறினர் ?

கலிக்காமரைச் சூலை நோய் பற்றியது. சூலை மிகக் கொடியநோய். அந்நோய் வடவனலும், கொடுவிடமும், வச்சிரமும் போல வாதனையைச் செய்ய வல்லது. அது கொடிய எலாம் ஒன்றுகும் கொடுமையைக் கொண்டது. அந்நோயின் கொடுமையை யார் கூற இயலும்? அதனைத் துய்த்த பொறுமையாளர் அல்லரோ கூற இயலும்? அது தம்மை வாட்டிய விதத்தை அப்பர் பெருமானார் அகம் உருகித்

> ‘ தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
> குடரோடு தொடக்கி முடக்கியிட ஆற்றேன் !’

என்றும்,

> ‘ நஞ்சாகி வந்தென்னை நலிவது ’

என்றும்,

> ‘ வேர்த்தும் புரண்டும் விழுந்தும் எழுந்தால்
> என்வேதனை யான விலக்கியிடாய் ’

என்றும் கசிந்து பாடியுள்ளார்.

கலிக்காமர் இத்தகைய சூலைநோய்க் கொடுமை நீங்கச் சிவபெருமானைப் போற்றி நின்றார். அது போது அவர் உணருமாறு இறைவர், 'வன்றொண்டன் தீர்க்கின் அன்றி வன்சூலை தீராது,' என்றார். அதனைக் கேட்ட கலிக்காமர், 'உகிர்ச் சுற்றின் மீது உலக்கை வீழ்ந்தாற்போல' உளம் வாடி 'அன்னான் தீர்த்து ஒழிப்பதினும், சூலைதன்னால் வருந்துவதே கடன்,' என்று திடம் கொண்டார்.

சிவபெருமானார் அதனுடன் அமையாது, வன்றொண்டர்க்குக் கலிக்காமர் கொள்கையெலாம் கழறி அவர்க்குற்ற சூலையினை நேரே சென்று தீர்க்குமாறு பணித்திட்டார். 'இதுவும் நம்பால் இறைவர் கொண்ட அருளாம்,' என்று உவகைகொண்டு நம்பி ஆரூரர் பரமரைப் பாடிப் பரவிக் கலிக்காமர் இல்லம் நோக்கிப் புறப்படலானார். நாவலூர் வள்ளல் தம் வருகையை முன் கூட்டி ஏயர்கோனார்க்கு இயம்பியும்விட்டார். வைத்த உள்ளம் மாற்றாத கலிக்காமர், வன்றொண்டர் வரவு கேட்டு, உடல் வேதனையுடன், உணர்வு வேதனையுமுடையவராய், 'எம்பிரானைத் தூதாக ஏவினவனோ என் சூலையைத் தீர்க்கற்பாலன்? அவன் ஈங்கு வந்து தீர்ப்பதன் முன்னர்ச் சூலைதன்னை யானே பற்றறத் தீர்ப்பேன்!' என்று துணிந்தவராய், உடைவாள் கொண்டு தம் உதரம் கிழித்தார்.

அந்தோ! அவர் தம் அன்பை எங்ஙனம் போற்றுவது! பிறர் செய்த குற்றத்திற்குத் தம்மையே ஒறுக்கும் தகவுடைமை அன்றோ அவர்பால் அமைந்த செயற்கரிய செயல்? இதுவன்றோ அவரைப் பெரியர்

ஆக்கியது? வென்றெண்டரைக் காணுவிடத்து, அவனை என்முன் காணும் நாள் எந்நாள்?' என்று கழறியவர்,

'வரவெதிர் காண்பேன் ஆகில் வருவதென் னுங்கொல்?'

என்று கறுவியவர், காணும் வாய்ப்புப் பெற இருந்தும் தம்மையே அன்றோ தாக்கிக்கொண்டார்? இதுவே சாத்துவிகப் போர். இவ்வுணர்வு இற்றைக்கு ஆயிரம் ஆண்டுகட்கு முன்னரேயிருந்ததை நோக்க நாம் இறும்பூது கொள்ள வேண்டும் அன்றோ?

கணவனார்க்கு அருகே இருந்து ஆவன செய்து வந்தார் கலிக்காமர் மனைவியார்; அல்லும் பகலும் அவரை விட்டு அகலாதிருந்தார்;

'தோன்றற்கும் தோகைக்கும் ஒன்றாய் வரும்
இன்பத் துன்பங்கள்'

என்னும் இலக்கணத்திற்கோர் இலக்கியமாய்க் கலிக்காமர் சூலையால் பட்ட துன்பம் எல்லாம் தமக்கு வந்தாற்போலத் தாமும் உணவு இன்றி, உறக்கம் இன்றி, உபசாரம் செய்து வந்தார். இந்நிலையில் ஆசிரியர், சேக்கிழார்,

'கருதரும் பெருமை நீர்மைக் கலிக்காமர்'

என்றும், அவர்,

'தேவியார்க்குப் பொருவருங் கணவர்'

என்றும் போற்றுகின்றார். அன்ன பண்பினர் மறைந்தார் என்றால் மாதரார் மண்ணில் வாழ்வரோ? உடன் போகத் துணிந்தது உசிதமே.

இந்நிலையில் நம்பியார் அனுப்பியவர் சிலர் ஓடி வந்து, 'நம்பியார் வந்தணைகின்றார்,' என்று நவின்று நின்றனர். இத்தருணம் எவர்வரின் என்? எவர் போயினும் என்? இல்லம் தலைவரை இழந்து தத்தளிக்கும் நேரம்; காரிகையார் கணவரை இழந்து கலங்கும் காலம்; அவலச் சுவையே அகத்து நிகழும் அமயம். இத்தருணத்திலும் இவை யனைத்தையும் புறத்தே காட்டிலர் கலிக்காமர் தேவி யார்; வருபவர் தம்பிரான் தோழர் என்பதை அறிவர்; அவர் இறையருளும் கல்வியும் வாய்க்கப் பெற்றவர் என்பதையும் உணர்வர்; பரமனார் விரும்பும் பத்தர் என்பதையும் அறிவர். 'இன்னோரன்ன பண்புடை யார் இல்லம் நோக்கி வருங்கால் இழவு கொண்டா டல் இனிதாமோ?' என்று எண்ணியவராய் உடனே, 'யாரும் அழுதல் செய்யாதீர்,' என்று ஆணையிட் டார். 'மங்கலம் என்ப மனைமாட்சி' என்றது உண்மையன்றோ? கணவர் உடலை மறைத்து வைத் தார்; ஏவலர்தம்மை இல்லம் பொற்புறச் செய்யு மாறு ஏவினார்; இதற்கிடையில் சுந்தரரும் வந்துறவே தூபதீபமும், பூரண கும்பமும் வைத்துத் தொழு தெதிர் கொள்ளச் சென்றார். இவ்வாறெல்லாம் இனிதுற இயற்றிய இவ்வம்மையாரை மனையை மங்கலம் ஆக்கியமாதரார் என்று வழங்காமல் வேறு எவ்வாறு வழங்குவது? என்னே அம்மையாரன்பு!

> அன்பர்பணி செய்யவென்னை ஆளாக்கி விட்டுவிட்டால்
> இன்பநிலை தானேவந் தெய்தும் '

என்னும் உறுதியுடையவர் ஆதலின், இங்ஙனம் செய்தார்போலும்!

ஆரூரர் அகத்துள் புக்கார்; ஆசனத்தமர்ந்தார். "ஏயர் கோனார் எங்கே? அவர்க்கு ஏய வன்சூலை தீர்க்க வந்துற்றோம்," என்று எழுந்தார். அம்மையார் அவ்வினாவிற்குத் தாமே விடை இறுக்க இயலாதவராய் மனைத்தொழில் மாக்கள் மூலம், 'அவர் யாதோர் ஏதுவும் இன்றி, உள்ளே பள்ளி கொள்கின்றார்,' என்று பகரச் செய்தார்.

"அம்மையார் கூறிய கூற்று ஆடாத கூற்று. அவர் சால்புக்கு இஃது ஓர் இழுக்கு," என்னலாம் அன்றோ? அற்றன்று.

"பொய்ம்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்"

என்னும் சட்டமும் தமிழில் உண்டு. இதனால் பொய் புகலக்கூடாது. "புரைதீர்ந்த நன்மை பயக்குமெனின்," என்னும் தொடருக்குரிய ஆழ்ந்த பொருளை அறிந்த பின் வேண்டுமேல் புகல்க.

"வாய்மை எனப்படுவ தியாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல்"

என்னும் குறளினைக். கருதும் போது அம்மையார் அறிவித்தது அமைவுடையதே என்பதை நன்கு அறியலாம்.

வீட்டுப்பணியாள் அறிவித்தும் மேலும் ஆரூரர் வினவ, 'இனியும் மறைத்தல் குற்றமாகும்,' என்பதை உணர்ந்து உதிரம் சோர் வடிவைக்காட்டினர். உண்மை உணர்ந்த வன்றொண்டர் தாமும் இறக்கத் துணிந்திட்டார். அது போது இறைவர் அருளால்

கலிக்காமர் உயிர் பெற்றெழுந்து, நம்பியாரூரர் மாயா வண்ணம் வாளும் கையுமாய்ப் பிடித்துத் தடுத்திட்டார்.

அங்கிருந்தார் அனைவரும் இவ்வதிசயம் கண்டு இன்புற்றனர். ஏயர்கோனும் எழிலார் கோனும் (சுந்தரர்) அன்பு கொண்டு, ஒருவரை ஒருவர் வணங்கி உயிர் ஒன்றுறுற்போலப் புல்லி நின்றனர்.

> " நீர்கிழிய வெய்த வடுப்போல மாறுமே
> சீரொழுகு சான்றோர் சினம் "

என்பது போல, ஏயர்கோன் சீற்றமும் தணிந்தது.

கலிக்காமர் தேவியார் அவல நிலையினும் கவலை காட்டாது கண்ணுதல் அடியாரை அன்புடன் போற்றிய பயனன்றோ வன்பும் அன்பாக மாறியது? மருளும் தீர்ந்து அருளும் நிகழ்ந்தது. ஏயர் கோனர் ஏந்திழையார்பால் நற்பண்புகள் பலவும் இலகியதால் அன்றோ நல்லார் என்னும் நல்ல பெயர் மாதரார் இனத்திற்கே உரியதாயிற்று? அவ்வம்மையாரை அவலநிலையினும் கவலை காட்டாதவர் என்றும் மனையை மங்கலம் ஆக்கிய மாதரார் என்றும் பன்முறை கூறிப் பாராட்டுவோமாக!

9. ஆரூர் அம்மையார்

கள்ளி வயிற்றில் அகில் பிறக்கும். மான் வயிற்றில் ஒள்ளரிதாரம் பிறக்கும். கடலில் நன்முத்துப் பிறக்கும். சேற்றில் செந்தாமரை பிறக்கும். அங்ஙனமே பரத்தையர் குடியிலும் பண்புடைப் பாவையர் பிறத்தல் இயல்பு. மாதவி என்னும் மாபெருந்தேவியால் மாட்சிமையுற்றது அப்பரத்தையர் குடியன்றோ? அங்ஙனமே மற்றொரு பாவையாரும் அத்தகைய குடியில் பிறப்பாராயினர்.

'குலத்தளவே யாகும் குணம்'

என்பது, பொது மொழி. அப்பொது மொழி இன்னோரன்ன இன்குணவதிகளால் பயன்படுதலின்றிப் பாழ்படுதலும் உண்டு. இனி அப்பரத்தையர் குடியின் பாவையர் ஒருவரின் பண்பு நலன்களைப் பகர்வோமாக.

கங்கையிற்புனிதமாய காவிரி பாயும் கவினுடை நாடு சோழ வளநாடு அன்றோ? அந்நாட்டு மன்னரே சோழர்; பனி வரைக் குன்றினில் புலிக் கொடி பொறித்த பெருமையர். காவிரியின் சிறப்புக் கவிஞரின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. அதனைப் பூமகள் தன் செவிலி என்று செப்பினர்; அண்ணல் பாகத்தை ஆளும் நாயகியின் உள்ள நெகிழ் கருணையின் ஒழுக்கம் போன்றது என்று உரைத்தனர். இவ்வளத்ததான ஆறு பாயும் நாட்

டின் வளத்தை நவிலல் வேண்டுமோ? கன்னலின் (கரும்பின்) வளர்ச்சி கமுகினைப் (பாக்கு மரத்தை) போன்றது. செந்நெல் வளர்ச்சி செழுங்கரும்பினை நிகர்த்தது. காடெல்லாம் கழைக் கரும்புகளும் மாடெல்லாம் கருங்குவளைகளும், வயல் எல்லாம் வளைகளும் மலிந்திருந்தன. ஆண்டு விளையும் நெல்லின் வளர்ச்சி இம்மைப் பயனுடன் அம்மைப் பயனும் அறிவிப்பன போல வளர்ந்திருந்தது. இதனைச் சேக்கிழார்,

'பத்தியின் பால ராகிப் பரமனுக் காளாம் அன்பர்
தத்தமில் கூடி னார்கள் தலையினால் வணங்கு மாபோல்
மொய்த்தநீள் பத்தி யின்பால் முதிர்தலை வணங்கி மற்றை
வித்தகர் தன்மை போல விளைந்தன சாலி எல்லாம்'

என்று வியந்து பாடுகிறார்.

இம்மாண்புடைப் பதியில் வாழும் மக்கள் பண்பும் மாட்சியுற்றிருந்தது. பழியஞ்சிப் பாத்துண்ணும் பழக்கமே உடையராய் வாழ்ந்தனர். பகடு நடந்த கூழினை அரசு கொள் கடன் அளிப்பார்; மிகுதிகொண்டு அறங்கள் பேணுவார்; பரமனாங் கடவுள் போற்றுவார்; குரவர்க்கும், விருந்தினர்க்கும், கேளிர்க்கும் விரும்பிக் கொடுப்பார்.

இக்காலத்தில் ஆங்காங்குப் பூங்கா அமைத்துப் பொது-மக்களின் சுகாதாரப் பொறுப்பைக் கண்ணும் கருத்துமாய் நகராண்மைக் கழகம் போற்றி வருவதைக் கண்டு நாம் நனி வியக்கின்றோம். இச் செயலைச் சோழ நாடு அக்காலத்திலேயே சோர்வின்றிச் செய்து வந்தது; கா வளர்த்தும், செய்

குன்றும் செய்குளமும் செழிக்கச் செய்தும் வளப் படுத்தியது. இத்தகைய பல சிறப்புக்களைப் பெற்றது சோழ நாடு.

இந்நாட்டிற்குத் திலகமெனத் திகழ்வது திரு வாரூர்த் திருப்பதியாகும். இது சோழர் குல மன்னர்கள் தலை நகரம் ஐந்தனுள் ஒன்று; பிறக்க முத்தி தரும் தலமுமாகும். இச்சிறப்புப் பற்றியே

'திருவாரூர் பிறந்தார்கள் எல்லோர்க்கும் அடியேன்'

என்றார் முனைப்பாடி நாதனார் சுந்தரர். இது தொன்மை மிக்க தொல்பதியுள் ஒன்றாய் ஒளிர்வது. இதனை, மாமலராள் வழிபட்டனள். இது 'திரு வாரூர்த் தேர் அழகு' என்னும் முதுமொழி பெற்றுத் திகழ்வது; திருமுறை ஓசை என்றும் இருத்தலின், கிள்ளை பாட அதனைப் பூவைகள் கேட்டின்புறும் இயல்பினது. மலர் மகட்கு வெண்டாமரை போல மலர்ந்த உலகில் சீருடை அழகுடைப்பதி இஃது எனில், இதற்குமேல் என்ன அறைதல் வேண்டும்?

இத்தகைய எழிலுடைப் பதியில் பிறந்தவரே, பரவையார் என்னும் பாவையார். அவ்வம்மையார் குடியை உருத்திரக் கணிகையர் குடி என வழங்குவர். பரவையார், 'விளையும் பயிர் முளையிலே தெரியும்,' என்பதற்கேற்ப, அழகு செய்தவத்தால் அவனியில் வந்த அணங்கெனவே (தெய்வமகள்) வளர்வாரா யினர். அவ்வம்மையார்பால் பொற்பும் கற்பும் நாளும் நாளும் வளர்ந்து பொங்கின. ஆதலின், அவரைக் காண்பார் அனைவரும் கண்ணிணைக் கண்டு, 'மானிளம்பிணையோ !' என்று மருண்டனர்.

பல்லினைக் காண்பார் பலரும் 'முல்லை அரும்போ!' என்று வருணித்தனர். மொழியைக் கேட்டவர் 'தேனிளம்பதமோ!' என்று மோகங்கொண்டு மொழிந்தனர். அழகைப் பார்த்தவர் 'பவழமோ!' என்று துதித்தனர். நுதலினைக் கண்ட நுண்ணறிஞர் பலரும் 'திங்கட்கொழுந்தோ!' என்று கூறித் திளைத்தனர். புருவங்கண்டு புதுமையடைந்தோர் 'கருவேள் கையகத்துக் கொண்ட கார்முக வில்லோ!' என்று போற்றினர்.

இவ்வாறு பரவையார் எழிலே உருவாய் இலங்கி வளர்ந்து மங்கைப் பருவமுற்று மாண்புடன் வாழ்ந்தனர்; இசையில் வல்ல வசையில் வனிதையராய்ப் பனிமலை வல்லி (பார்வதி) பாதம் அன்புருகப் பாடும் பணியை மேற்கொண்டனர்; பிறந்து மொழி பயின்ற பின் எல்லாம் பூங்கோயிற் புனிதரை மறவாது ஆலயஞ்சென்று சாலவும் தொழுது வந்தார்; ஒரு நாள் பாங்கியர் சூழத் திருக்கோயிலைச் சேர்ந்தார்.

நம்பியாரூரர் தில்லைப்பதியினின்றும் நீங்கி இடைப்பட்ட நல்ல பதிகள் பலவும் போற்றித் திருவாரூர்த் திருநகரையடைந்தார். வழுக்கி வீழினும் இறைவன் பெயரை அல்லாது எதையும் கூறு உரமுடையவர் ஆதலின், அவரும் பெருமான் கண்ணுதல் கழலிணைப் பரவிப் பணிய வந்திருந்தார்.

நற்பெரும்பான்மைதன்னால் பரவையாரைப் பாவலர் பெருந்தகையார் பார்த்ததும் அவரை மணக்கக் காதல் கொண்டனர்.

சுந்தரர் பரவையாரைப் பார்த்துப் பரவசமுற்று மணக்க விரும்பியதற்கேற்பப் பரவையார் உள்ளமும் ஆரூரர் அன்பில் அழுந்தலாயிற்று. இருவரும் ஒத்த கருத்துடையராய் விளங்கினர். சுந்தரர்தம் கண்கொள்ளாக் கவின் பொழிந்த திருமேனி கதிர் விரிப்ப, விண் கொள்ளாப் பேரொளியுடன் நின்றதைப் பரவையார் எதிர் நோக்கினர். அவ்வம்மையார்க்கு வேட்கை எழுந்தது.

நாவலூர்ப் பெருந்தகையார் பக்கத்தே நின்றுரை அம்மங்கையார் யாவரென்று உசாவ, அவர்கள் 'உம்பரார்க்கும் சேர்வரிய உத்தமியாம் நங்கை பரவையார்' என்று நவின்றனர். சுந்தரர், 'உம்பர்க்கும் சேர்வரியார்' என்றதனால், 'உம்பர் பிரான் (சிவபெருமான்) ஒருவனையே உவந்து நாம் வேண்டுவம்' என்று உளங்கொண்டார்; மெல்லியலாரை மணக்க வேண்டி இறைவரை வணங்கி நின்றார். பரவையாரும் நம்பியை (சுந்தரரை)த் தந்தருளப் பரமரை நயந்து வேண்டினர்.

அன்பர் குறையை அகற்றி ஆளும் இறைவர் நம்பிக்கும் நங்கைக்கும் தகுநீர்மையில் திருமணத்தை முடித்திட்டார். இருவரும் மணியும் ஒளியும் மானவும், மணமும் மலரும் நிகர்க்கவும், உடலும் உயிரும் ஒப்பவும் ஒற்றுமை உணர்ச்சியுடன் இல்லற இன்பத்தினை இனிது நுகர்ந்து ஆளுடைய பிரான் (சிவபெருமான்) சரணாரவிந்தங்களைச் சென்னியிலும் சிந்தையிலும் அலர்வித்து இன்புற்று வாழ்ந்து வந்தனர்.

இல்லத்திற்கு வேண்டிய காசும் தூசும் (ஆடையும்) சால அமைத்து எங்குமுள திருப்பதி தொழும் அன்பால் சுந்தரர் புறப்பட்டார்.

முனைப்பாடி நாதனார் (சுந்தரர்) பல பதிகளைப் பணிந்துகொண்டு ஒற்றியூர் வந்து அடைந்தார்; ஆங்கு ஓர் அணங்கின் அழகில் ஈடுபட்டவராய் அவ்வம்மையாரையும் மணந்தார். இம்மணத்தின் வரலாறு பின்பு சங்கிலியார் வரலாற்றில் கூறப்படும் விரிவை ஆண்டுக் காண்க.

ஆரூரர் திருவொற்றியூரில் பன்னாள் பயின் றிருந்த பின் திருவாரூர் வந்துற்றார். வந்தவர், பூங்கோயில் புனிதர் தாள் போற்றிப் பரவையார் இல்லம் வரும் போது அம்மாதரார் அவரை வர வேற்க மறுத்திட்டார் காரணம், நம்பியார் வேறொரு பூங்கோதையைத் திருவொற்றி மாநகர்க் கண் மணந்ததேயாகும். சுந்தரர் பெருந்தகையார் மேலோர் சிலரை இப்பிணக்குத்தீரப் பேச விட்டனர். அவர் போய் உரைப்பினும் ஏந்திழையார் ஏற்றிலர்.

எதை இழக்க எண்ணினும் நற்பண்புடைய மாதர்கள் தங்கள் வாழ்வைப் பிறர் கொள்ள என்றும் இசையார். இஃது அவர்கட்கு இயல்பு. அன்னார் கற்பின் திறத்தைத் தமிழ் நூல்கள் பலவாறு கழறு கின்றன. கற்புடை மாதரின் பொற்புடைச் செயலைப் புலவர் ஒருவர் புகலுங்காலை நன்கனம் நவின்றுள் ளார். அதுவே பின் வரும் செய்தியாகும்.

நண்பர் ஒருவர்க்குப் புதிதாகக் கட்டப்பட்ட சித்திரமனை புகும் அழைப்பு இதழ் அன்புடன்

அனுப்பப்பட்டது. அவ்விழாவிற்குச் செல்ல அன்பரும் விழைந்தார். அதற்குத் தம் அன்புடை மனைவியையும் உடன்வர அழைத்தனர். அதுபோது அவர்தம் மனைவியார் தாம் வர இயலாது என்று கூறியதால் தாம் மட்டும் போவதாகப் புறப்படுகையில் 'நீரும் போதல் ஒண்ணாது,' என்றனர் மனைவியார். அதனால் சினம் உற்ற கணவர் 'நீதான் வர நினைத்திலையேல் நான் ஏனோ போதல் அடாது?' என்று வினவ, அக்காலை அக்கற்புடைக் காரிகையார் கழறியதுதான் கற்பு மேம்பாட்டிற்குப் பொறுப்புடைய சான்றாகும்.

'அன்புக்குரிய ஆருயிர்க் கணவரே, சித்திரங்கள் நிறைந்த புது மனையாதலின், ஆண்பாலர் உருவம் பல சுவரினை அலங்கரித்து நிற்கும். அவற்றைப் பார்க்க யான் மனங்கொள்ளேன். இதுவே நான் வாராமைக்குக் காரணம்,' என்றனர். அது கேட்ட கணவனார் தம் இல்லக்கிழத்தியாரின் கற்பின் மேம்பாட்டை எண்ணி இறும்பூதுற்றார். 'நீ கூறியது முற்றும் நேரியதே. ஆனால், யான் சென்று மீள என்னை ஏன் தடுக்கின்றனை? இதற்கும் ஏதேனும் ஏது உண்டோ? அதனையும் இயம்பின் ஏற்கலாம்,' என்றனர்.

அவ்வம்மையார், 'ஆடவர் உருவினை அழகுறத் தீட்டிய ஓவியர், பெண்டிர் வடிவையும் எழுதியிராரோ? அவ்வடிவழகில் நீர் ஈடுபட என் உள்ளம் விழைந்திலது. ஆதலின், நீரும் செல்லல் இயலாது என்றேன். இதுவே காரணம்,' என்று

எடுத்து இயம்பினர். இக்கருத்தினைச் செவ்வன் அமைத்துத் திரு. மாயூரம் வேதநாயகம் பிள்ளை,

'ஓவியர்நீள் சுவர்எழுதும் ஓவியத்தைக் கண்ணுறுவான்
தேவியையாம் அழைத்திடஆண் சித்திரமேல் யான்பாரேன்
பாவையர்தம் உருவெனில்நீர் பார்க்கமனம் பொறேன்என்றாள்
காவியிழி மங்கையிவள் கற்புவெற்பின் வற்புளதால்'

என்று பாடியுள்ளார். இச்சீரிய கற்பின் திறத்தை என்னென்று இயம்புவது!

இவ்வாறு இருக்கையில் தம்மை மணந்த கணவரைப் பிறர் மணக்க எங்ஙனம் தமிழ் நாட்டு மங்கையர் சகிப்பர்? ஆதலின், பரவையார் ஊடல் கொண்டு, நம்பியாரூரர் இல்லம் புக இடம் கொடுத்திலர். ஆரூரர் உற்ற இடத்து உதவும் ஒருவரையன்றி இக்குறை முடிப்பார் எவரும் இலர் என்று நேரே இறைவர் திருமுன் நின்று,

'நாயன் நீரே நானுமக்கிங் கடியேன் ஆகில் நீரெனக்குத்
தாயின் நல்ல தோழருமாம் தம்பி ரானு ரேயாகில்
ஆய வறிவு மிழந்தழிவேன் அயர்வு நோக்கி அவ்வளவும்
போயில் இரவே பரவைஉறு புலவி தீர்ந்த தாகும்'

எனப் பணிந்தார்.

இப்பாடல் இறைவர் எவ்வாறேனும் குறை முடிக்க வேண்டும் என்பதைத் தூண்டும் முறையில் அமைந்துள்ளது. 'நாயன் நீரே' என்பதனால், 'உம்மிலும் வேறு தலைவர் இல்லாத நீர், இதற்கு முற்படின் எதிர் மாற்றம் தருவார் எவரும் இலர்,'

என்பதும், ' நான் உமக்கு அடியேன்,' என்பதால், 'நீரே விரும்பி ஆட்கொண்டு அடிமைகொண்டதால் அடிமையின் வேண்டுகோளை ஆண்டான் முடித்தல் கடன்,' என்பதும், 'தாயின் நல்ல தோழருமாம் தம்பிராளுரேயாகில்' என்பது, 'என்னைத் தோழன் முறைமையில் ஏற்றுக்கொண்டதனுல், உண்மை நட்புடையார்,

' உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு '

என்பதற்கேற்ப, யான் உற்ற இடுக்கண் நீக்கல் இயல்பு,' என்பதும், 'தாயின் நல்ல' என்னும் அடை, 'தனயர் வேண்டுவஃது முடித்தல் தாயர் கடனுகும்' என்பதும், ' அறிவு இழந்து அழிவேன்,' என்றதால், குற்றம் தெரிந்து செய்த பிழையைப் பொறுத்தருள வேண்டும் என்பதும் முதலான திரண்ட கருத்துக்களைக் கொண்டு இது திகழப் பெற்றுள்ளது. அன்பு வேண்டும் தம் பெருமான் அடியார் வேண்டிற்றே ஆற்றி வைக்க எண்ணிஞர். முப்போதும் தம் திருமேனியைத் தீண்டுவார் (கோயில் குருக்கள்) வடிவோடு பரவையார் மாளிகைக்குச் சென்றனர்.

குருக்களைப் பரவையார் குறுகி வரவேற்ருர்; வந்தவாறு உரைத்தருள வேண்டினுர். 'மங்கை நீ மறுது செய்யின் நான் வந்தவாறு உரை செய்வேன்,' என்று வந்த முனிவர் வகுத்துரைத்தார். இம்மறை சொற்கெல்லாம் பரவையார் மயங்கி மொழியும் திறத்தினரோ ? 'அதனை நீர் அருளிச் செய்யின், எனக்கு இசையும் ஆகில் இசையலாம்,'

என்றார். வந்தவர், 'நம்பி ஈங்கு நின்னை நம்பி வர ஏற்பாய்,' என்றார். பரவையார் சீற்றம் நிறைந்த மாற்றம் உடையராய், 'இங்கு எனைப் பிரிந்து போகி ஒற்றியூர் எய்தி, அங்கே சங்கிலியால் தொடக்குண்டார்க்கு இங்கு ஒரு சார்பு உண்டோ? நீர் இக் கடைத்தலை வருகை மற்று உம் பெருமைக்குத் தகுவது அன்று. நீர் போம்,' என்று செப்பிவிட்டார்.

பரவையார் இங்ஙனம் சிறிதும் சிந்தித்துப் பாராமல் மறுத்திட்டது நம்பிபால் தமக்கு நன்மனம் இல்லை என்பதை அறிவித்தற்கன்று. அறிஞர் உரையை அரட்டை ஆக்குவது என்பதும் அன்று. ஆண்கள் சமூகம், இன்மணம் பூண்ட ஏந்திழை ஒருத்தி இல்லத்தில் இருக்க, மற்றும் ஒரு மாதினை மணத்தல் அடாத செயல். அதனை அறவே கடிந்து ஒழித்தல் கடன் என்பதைத் தாம் உணர்ந்தே இங்ஙனம் கூறினர் என்க.

தூதுவர் மீண்டு போதுவாராகிச் சுந்தரர்க்கு நடந்த வண்ணம் நவின்றனர். தம்பிரான் தோழர் (சுந்தரர்) தம்பிரான் (சிவபெருமான்) மாற்றம் கேட்டு உள்ளத் தடுமாற்றம் உற்றார். 'நீர் எம் இருவரையும் இணைத்திலீர் எனில், என்னுயிர் உடலில் நில்லாது ஏகும்,' என்று இசைத்திட்டார். இறைவர் மீண்டும் பரவையார் இல்லம் நோக்கிச் சென்றனர். அம்மையார் அகம் இளகியது. 'அன்பர்க்காக அங்கொடு இங்கு உழல்வீராகில் இசையாது என் செய்வல்?' என்று கூறித் தம் இசைவை வெளிப் படுத்தினர்.

இதனை நம்பிக்கு நாதனார் மொழிய, நாவலூரர் பரவையார் மாளிகையை நண்ணினார்;

'எழுதுங்கால் கோல்காணாக் கண்ணேபோல்'

கொண்கரைக் கண்ட போது பழி காணாதவர் ஆயினர்; எனவே, கொண்கரை வரவேற்கச் சிறப்புப் பலவும் செய்தார். நெய்வளர் விளக்குத் தூபம் நிறைகுடம் நிரைத்து வைத்தார்; மாமணி வாயில் முன்பு வந்தெதிர் ஏற்க நின்றார்; தண்டளிர்ச் செங்கை பற்றிக்கொண்டு மாளிகையுள் சார்ந்தார். ஒருவரை ஒருவர் உள்ளத்தால் பருகி ஒருவருள் ஒருவர் மேவும் நிலைமையில் உயிர் ஒன்றாயினர்.

'பிரிந்தவர் கூடினால் பேசல் வேண்டுமோ ?'

இன்னணம் இருவரும் தம்முள் கலந்த அன்பினராய் வாழும் நாளில் கழறிற்று அறியும் பெருமானாராம் அரசர் பெருமான் (சேரமான் பெருமாள் நாயனார்) ஆர்வத்தோடு அந்தணர் பெருமான் அழைப்பிற்கிணங்கிப் பரவையார் இல்லம் வந்துற்றனர். பரவையார் என்னும் பூவையாரும் எதிர் கொண்டழைத்து இருவர்க்கும் நீதி வழுவா ஒழுக்கத்து நிறை பூசனைகளை முறையாகச் செய்தார்; கறியும் உணவும் சமைப்பித்து விருந்தும் அளித்திட்டார். பரவையார் மாளிகை பணத்தில் 'குறைவின்றிப் பல்கியதால் சிறப்புக்கொன்றும் குறைந்திலது.

சேரர் பிரானுக்கும் ஆரூர் பிரானுக்கும் உணவு பரிமாறப்பட்ட விதத்தைச் சேக்கிழார்,

'பரிகலங்கள் ஏரின் விளங்கத் திருத்திக்கால்
இரண்டில்படியா ஏத்துதலும்'

என்று குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு கூறியது. இக் கால நாகரிகப்படி தேநீர் விருந்துகள் திருமாளிகை களிலும் திகழ்பூங்காக்களிலும் நடக்கும் திறத்தை நினைப்பிப்பது போன்று உள்ளது.

மற்றுமொரு மாண்புடைய கருத்தையும் ஈண்டே உணர்வோமாக. இக்கால நாகரிகத்திற்சாதி, மத வேறுபாடு இன்றி உடன் உண்ணும் சிறப்பு, மிக்க சிறப்பெனக் கருதப்பட்டு வருகிறது.

இது நம் முன்னோர்க்குப் புதுவதன்று; பழமை யானதே. ஈண்டு அரச குல அன்பராம் சேரரும், அந்தணகுல அன்பராம் ஆரூரரும் ஒருங்கு இருந்து உணவு கொண்டதை உணர்க. முன்னர் அந்தண மரபினரான ஆப்பூதி அடிகளாரும் வேளாளர் குல திலகரான அப்பர் பெருமானும் ஒருங்கு அமர்ந்து உணவு கொண்டதையும் உளங்கொளல் வேண்டும். இந்நிகழ்ச்சிகளை,

'ஒக்க அமுது செய்தருள'

என்ற தொடராலும்,

'மறையோர் தாமும் மருங்கிருந் தமுது செய்ய'

என்ற தொடராலும் முறையே காண்க. இவற்றி னும் சிறந்த சீர்திருத்தக் கருத்துக்களாக வேறு என்ன கூற வேண்டும்?

'பரிகலங்கள் ஏரின் விளங்கத் திருத்தி'

என்பதனால், உணவுப் பொருள்களை இலையில் படைக்காமல் எழிலுடை அகலத்தட்டில் அமைத்து

னர் என்பது புலனுகின்றது அன்றே? இன்ஞேரன்ன நவநாகரிகப் பண்புகளை இப்பொழுது காணும்போது நாம் வியத்தற்கு இல்லை என்க. இவை யாவும் பண்டும் இன்றும் என்றும் உள்ள இயல்பே.

உணவு உண்டபின் பனிநீரும் சந்தனமும் பண்புடன் அளிக்க, அவற்றின் பின் இனிய பஞ்சவாசத்துடன் அடைக்காய் அமுதும் ஈந்து அகமகிழ்ந்தார் பரவையார்.

ஆனுல், ஒன்பதாம் நூற்ருண்டின் தேநீர் விருந்திற்கும் இருபதாம் நூற்ருண்டின் தேநீர் விருந்திற்கும் வேறுபாடு ஒன்றே உளது. இந்நாள் விருந்தினர் விருந்திற்குப் பிறகு புகை பிடித்துப் புகழுடன் திரிவர். அந்நாள் விருந்தினர் பூதியணிந்து பொற்புடன் திகழ்வர். இதனைச் சேக்கிழார்,

'தூய நீறு தங்கள் திருமுடியில் வாங்கித் தொழுதணிந்தார்'

என்றனர்.

நம்பியாரும் நங்கையாரும் நாளும் நனி சிறக்க நல்ல விருந்தளித்ததனுல், ஆரூரர் தம்மைத் தம் நாடு காணச் சேரர் பெருமானுர் அழைத்திட்டார். இரவும் பகலும் இரந்ததனுல், ஆரூர் நம்பியும் அதற்கு இசைந்திட்டார். இசைந்தவர், உடனே செல்ல ஒருப்பட்டிலர். பரவையாரின் உள்ளத்தின் இசைவு பெற்றே பொறையரோடு (சேரரோடு) போக எண்ணினுர். இதனைக் கவிஞர்,

'நங்கை பரவை யாருள்ளத் திசைவால் நம்பி எழுந்தருள'

என்று இசைக்கிறது. முனைப்பாடி நாதனார் முன்னைய நினைவால் இம்முறையைக் கொண்டார் போலும்! அவர் சூடுண்ட பூனையல்லரோ!

சுந்தரரும், சேரரும் செல்லாறுதோறும் பல் தளிகளை (கோவில்களை)ப் பணிந்து சேரநாட்டை அடைய உதிய மன்னர் (சேரர்) நம்பியாரூரர்க்கு நல்ல உபசாரம் செய்து, பன்னாள் இருத்திப் பின் நவமணியும் ஈந்து அனுப்பினர். சுந்தரர் செல்வம் பெற்றுத் திருவாரூர் மீண்டு, பரவையாருடன் பன்னாள் இன்புற்று அன்புற்று அரன் கழல் மறவாது வாழ்ந்து வரலானார்.

பரவையாரும்,

'ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்ல
ஊதியம் இல்லை உயிர்க்கு'

என்பதை நன்கு உணர்ந்து, தம்பிரான் தோழர் தந்த பொருள்களை எல்லாம் எவர்க்கும் ஈந்து இனிது வாழலானார்.

10. ஒற்றியூர் ஒள்ளிழையார்

'சான்றோர் உடைத்துத் தொண்டை நன்னாடு,' எனத் தக்கோர் புகழும் இத்தண்டமிழ் நாட்டில் திருவொற்றியூர் என்னும் திருப்பதி திகழ்கிறது. இது சென்னைக்கு வடபால் அமைந்த கடற்கரைப் பட்டினம்; ஓதம் வந்துலவும் ஒற்றியூர்' என்னும் ஒண்புகழுடையது. இதனைப் பூலோகச் சிவலோகம் என்று புலவர் கூறுவர். இதற்கு அண்மையதாய் 'ஞாயிறு' என்னும் ஒரு நற்பதியுண்டு.

இப்பதியின்கண் வேளாண் குடியினர் பலர் வாழ்ந்து வந்தனர். அவருள் ஞாயிறு கிழார் என்னும் நல்லார் ஒருவர் நலனுற வாழ்ந்து வந்தார். அன்னார் ஆற்றிய அருந்தவப் பயனால் அவர்க்கு ஓர் அருமை மகளார் பிறந்தனர். அம்மகளார் பெற்றோர் போற்ற வளர்மதி போல வளர்ந்து வருவாரானார். இறையன்பும் அம்மகளார்பால் இளமை முதலே வளரலாயிற்று. அம்மகளார் சங்கிலி என்னும் நன்னாமஞ்சூட்டி வழங்கப்படலாயினார். சங்கிலி என்பது ஒரு புனை பெயராகவே இருத்தல் வேண்டும். அவ்வம்மையார் எதையும் ஐயம் திரிபற அறிந்து சங்கை (ஐயம்) இன்றி இருந்த காரணம் பற்றிச் சங்கையிலி என்பது மருவிச் சங்கிலியாயிற்றோ என்று நாம் யூகிக்க இடம் உண்டு. ஆதன் தந்தையார் என்பது எப்படி நாளடைவில் ஆந்தையார் என்று ஆயிற்றோ, அப்படியே

இதுவும் ஆயிற்று என்று கொள்வதில் இழுக்கும் இன்றெனா அறிக. அம்மகளாரை,

'மலைமான் மடந்தை, மலர்ப்பாதம்
மறவா அன்பால் வந்தநெறி
தலையாம் உணர்வு வந்தணையத்
தாமே அறிந்த அறிவுடையார்'

என்று சேக்கிழார் கூறுதலின், எல்லாம் அறிந்த காரணத்தால் ஐயம் இலராய் இருந்தனர் என்பதற்கு இதுவும் ஓர் எடுத்துக்காட்டாய் நிற்கும் என்க. ஆகவே, சங்கிலியார் என்னும் பெயர் அவர்க்குக் காரணக்குறி என்று கொள்ளலாம்.

அம்மகளார் தம்மையொத்த சிறுமகளிர் சில ருடன் கூடி வண்டல் பயின்றும், தண்டலை ஆடியும் இன்புடன் வளர்வாராயினர். சங்கிலியார் ஆடற் பருவமும் கடந்து மணப்பருவம் நண்ணினர். தம் மகளாரது உடற்பொலிவைக் கண்ட இருமுது குரவ ரும் உள்ளம் பூரித்தனர். தண்ணிசை யாழும், தாழ் கடல் தரளமும் (முத்தும்) மண்மிசைச் சாந்தமும் துய்ப்பார் அற்று வாளாவிருப்பின், அவற்றால் யாது பயன்? இசை வல்லான் யாழினை மீட்டினால் அன்றி, பூண்பார் முத்தினைப் பூண்டால் அன்றி, பூசுவார் சாந்தினைப் பூசினால் அன்றி, அவை பயனற்றுத் தம் பெருமையினை இழந்து நிற்கும் அல்லவோ? ஆகவே, அவற்றை நன்முறையில் பயன்படுத்து வார்க்குப் பயன்படுத்துதல் அறிவுடைமை ஆதல் போலும். பருவமங்கையரைக் கடிமணம் புரிந்து கவினுறக் காண்டலே சீரிய முறையெனச் சிந்தித்த

ஞாயிறு கிழார், தம் மனத்துக்கினிய மனைவியாரை நோக்கி, 'நம் குலக்கொழுந்தாகும் திருமகளுக்குத் திருமணம் முடித்தல் வேண்டாவோ?' என்று வினவினார். இதனைக் கேட்ட அவர் மனைவியார், அவ்வாறே மணம் முடித்தற்கு ஆவன செய்யுமாறு அகங்குளிரக் கூறினர்.

சங்கிலியார் பொருளுடையாரையும் பொலிவுடையாரையும் மணக்க இசையாராய், இறைவர் திருவருள் பெற்ற ஒருவரையே மணக்கும் கள்ளமற்ற உள்ளம் உடையராய் இருந்தனர்; பெற்றோர் பேசியதை உடன் இருந்து கேட்டதும், 'என் விளையுமோ! என் எண்ணத்தில் இடி விழுமோ!' என்று ஏக்கம் கொண்டவராய், உணர்வு மயங்கித் தரைமேற் சாய்ந்தார். அருமை மகளார் நிலமிசை விழுந்து அயர்ந்ததைக் கண்ட அம்மையப்பர் உளம் பதைத்துப் பரிந்தெடுத்துப் பனிநீர் தெளித்துத் தடவிக் கொடுத்தனர்.

சங்கிலியார் சிறிது மயக்கந் தீர்ந்து தெளிந்த போது, "அழகுக்கொழுந்தனை அருமரும் மகளே, உனக்கு உற்றது யாது?" என்று உருக்கமாய் வினவினர்.

சங்கிலியார் உள்ளதை உள்ளவாறு உரைக்கலுற்றார்; மந்தணமாக (இரகசியமாக) எதையும் மறைத்து வைத்திலர். "தந்தையீர், தாயீர், நீர் என் கடிமணம் குறித்துப் பேசிய அனைத்தும் காதுறக் கேட்டனன் யான். இம்மை இன்பத்துக்கு மட்டும் என்னை இல்மணம் கொள்ளுறும் நன்மகனர் ஒருவரை

நாட விரும்பாது, அம்மை இன்பத்துக்கும் அடி கோலும் ஆண்டவன் அருள் பெற்ற ஆண்டகை ஒருவரையே அன்புடன் மணக்க அவாவுகின்றேன். ஆதலின், யான் விழையும் ஒருவரையே எனக்குத் திருமணம் முடிப்பீராக. அதன்பொருட்டு யான் ஒற்றியூர் அப்பன் திருத்தளியடைந்து வரங்கிடப் பேன். அதற்கு வாய்ப்புத் தருவீராக,'' என்று தாழ்ந்து பணிந்து புகன்றனர்.

புதல்வியார் இவ்வாறு புகல்வதைக் கேட்ட ஈன்றவர், அயர்வும் அச்சமும் அற்புதமும் எய்தினர். இன்பம் துய்க்கும் இளமையில் இறையருள் நாடும் தன்மை கண்டு வியப்பும், கன்னிப்பருவம் வாய்க்கப் பெற்ற காரிகையைத் தனித்து ஒற்றியூர்க் கோயிலில் விட்டு வைத்தல் யாங்ஙனம் இயலும் என்பதனால் அச்சமும், தம் திருமகளார் விரும்பும் வண்ணம் அம்மணாளன் வாய்ப்பனோ என்னும் எண்ணத் தால் அயர்வும் கொண்டனர்.

இந்நிலையில் ஞாயிறுகிழார் ஞாதியருள் ஒருவன் தனக்குச் சங்கிலியாரை எவ்வாறேனும் மணம் முடிக்க முதியோர் சிலரை விடுத்தனன். வந்தவர் தம் கருத்துக்கூற ஞாயிறுகிழார் அவர்கட்கு உண்மை யாதும் உரையாது, குறிப்பால் இசைவு இன்மை யினைக் கூறி அனுப்பினர்.

' ஏதம் எய்தா வகைமொழிந்து '

என்பதனால் ஞாயிறுகிழார் சொல்வன்மை படைத்த தூயர் என்பதும், இன்சொல் வழங்கும் இதயம்

உடையவர் என்பதும் அறியக் கிடக்கின்றன. மேலும்,

‘ இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது ?’

என்பதை மேற்கொண்ட வாய்மையர் என்பதும் அறிந்தோம்.

சங்கிலியார் எண்ணம் ஈடேறவோ, அன்றி யாது காரணத்தாலோ, மகட்பேச விடுத்த மண வாளன் சின்னுட்கெல்லாம் மண்ணுெடு விட்டு விண்ணுெடு உற்ருன். அவனது மறைவு கேட்ட மாதராரைப் பெற்றவர் மனம் மருண்டனர்; ‘ நம் மகள் இறையருள் பெற்றவனை மணக்க இருக்கை யில் அது பெருத இவன் விரும்பியதால் போலும் இறக்க நேர்ந்தது!’ என்று கருதி, இனி ஆவன செய்வதற்கு முனைந்து நின்றனர். ஞாயிறு கிழார் இனியும் தம் திருமகளார் எண்ணத்தை எவர்க்கும் உரையாது வாளா இருப்பின், இது போல இன்னம் பல ஏதம் நிகழும் என்று நினைத்தவராய்ச் சாதியருள் சிறந்தார் சிலர்க்குச் செப்பினுர்.

திருவொற்றியூரில் சிறந்ததொரு வீட்டை அமைத்தார். அவ்வில்லில் மகளாரை அமர்த்தி, ‘இனி நீ ஈண்டு விழைந்தவாறே தியாகரை வேண் டித் தியானம் புரிவாயாக,’ என்று வேண்டுவன செய்து விடைகொண்டு போயினர். அது கன்னி மாடமாய்க் கவினுடன் திகழ்ந்தது. அவ்வம்மை யாருடன் கன்னியர் சிலரும் உறுதுணையாய் உற்ற

னர். இக்காலத்து நாம் காணும் மேனாட்டுக் கன்னி மாட முறை இருபதாம் நூற்றாண்டில் எழுந்த புது முறையன்று. இஃது ஒன்பதாம் நூற்றாண்டுக்கு முன்பிருந்தே வந்த தமிழ் நாட்டு முறையாகும் என்பதைச் சேக்கிழார் உணர்த்த உணர்ந்த நாம் எத்துணை இன்பங்கொள்ளவேண்டும்! ஓருமின்!

சங்கிலியார் கன்னிமாடத்துத் தம் கடமைகளைச் செய்து வந்தனர்;

'என்கடன்பணி செய்து கிடப்பதே'

என்னும் அப்பர் பெருமான் அருள்வாக்கிற்கிணங்க, அரனார்தமக்கு அலர் மாலை தொடுக்கும் அருந் தொண்டில் ஈடுபட்டனர்; தியாகர் திருக்கோவிலைத் தினந்தோறும் புக்கிறைஞ்சினார். அம்மையார் கன்னியார் ஆதலின், ஆலயத்துள் எழினிவீழ்த்துத் (திரையைத் தொங்கவிட்டு) தம்மை மறைத்து இண்டை (மாலை) கட்டி இன்புறுகையில், இறைவனார் அடிமை கொண்ட ஆரூரர் அரனாரை வணங்க ஆங்குற்றார்.

அப்படி வந்தவர் திரை மறைவிலிருந்து மலர் தொடுக்கும் மண்டபத்தையும் பார்வையிட்டார்.

சங்கிலியார் அழகின் கொழுந்து போல அமர்ந்து, அன்பு நாராக அஞ்செழுத்து நெஞ்சு தொடுக்க அலர் தொடுத்திருப்பதை அகங்குளிர, அம்பகம் (கண்) குளிர ஆரூரர் கண்ணுற்றார்; புறம் போந்தார்; மருங்கு நின்றாரை, "என் உள்ளம் திரித்த இவ்வொள்ளிழையார் யாரோ?" என்று உசாவினார்.

அம்மையார் அழகு ஆரூரர் உள்ளத்தைக் கொள்ளை கொண்டதில் குற்றம் இல்லை.

அருகு நின்றவர் அன்பருக்கு அறிந்தவண்ணம் அறைவார் ஆயினர். 'ஐய, அவர்தாம் சங்கிலியார் என்னும் நன்னாமம் பெற்றவர்; பெருகு தவத்தால் ஈசர் பணிமேற்கொள்ளும் கன்னியார்,' என்றனர்.

நம்பியாரூரர், 'இந்நங்கையை இறைவரை வேண்டிப் பெறுவேன்,' என்று திடங்கொண்டார்; நேரே ஒற்றியப்பர் திருமுன் நின்றார்; 'கங்கையை யும் மலை மங்கையையும் மணந்த மாதேவரே, இங்கு உமக்குத் திருமாலை தொடுத்துத் திருத் தொண்டு புரியும் சங்கிலியைத் தந்து என் வருத்தம் தீரும்,' என்று இரந்து நின்றார்.

நம்பி ஆரூரர்,

> "மங்கை ஒருபால் மகிழ்ந்ததுவும் அன்றி மணிநீள் முடியின்
> கண், கங்கை தன்னைக் கரந்தருளும் காத லுடையீர் !"

என்று விளிக்கின்றார். இவ்வாறு விளித்த தன் நோக்கம் யாது? அது, "நீர் மலையரையன் மடப் பாவையை மணந்ததோடு நில்லாது, கங்கையையும் மணந்து வாழும் விருப்பம் கொண்டு இருந்தீர். ஆதலின், யான் பரவை என்னும் பாவையை மணந் திருக்க ஈண்டுச் சங்கிலியாரையும் கடிமணம் புரிய வேண்டி நிற்றலின், என் அவாவினையும் முடித்து வைப்பீர்,' என்ற உட்பொருளை உணர்த்துவது அன்றோ?

இறைவரும் அன்பர் குறை முடிக்கத் தூண்டு சோதி விளக்கனையார்தம்பால் கனவில் தோன்றி,

'சாரும் தவத்துச் சங்கிலி, கேள்: நின்னைக்கண்ட ஆரூரன் சால என்பால் அன்புடையான்; மேரு வரையின் மேம்பட்ட தவத்தான்; வெண்ணெய் நல்லூரில் யாரும் அறிய யான் ஆள உரியான்; உன்னை அடைய என்னை இரந்தான். நீ அவனை மகிழ்ந்து மணத்தால் அணைவாய்!' என்று கூறினார். சங்கிலியார் உள்ளக்கிடக்கை இன்னதென்பதை நன்கு உணர்ந்த இறைவர் ஆதலின், ஈசன் அருள் பெற்றவரை மணக்க இருக்கும் அம்மாதராருக்கு முன்னறிக்கையாகச் 'சால என்பால் அன்புடையான்' என்று சாற்றினார். தம்பால் அன்பே அன்றி அடிமையும் உடையவர் என்பதை அறிவிக்கவே, 'யாரும் அறிய யான் ஆள உரியன்,' என்று உரைத்திட்டார். 'அவனே உன்பால் ஆசை கொண்டு மணக்க மனங்கொண்டான் ஆதலின், நீ அவனை மணத்தலில் மாசு இல்லை,' என்பார், 'நீ அவனை மணத்தால் அணைவாய் மகிழ்ந்து,' என்றும் மலர்வாய் திறந்து அறிவித்தார்.

எம்பிரான் இசைத்த மாற்றம் ஏந்திழையார் செவி ஏற்று, 'எந்தையீர், நீரே சொல்லின் யான் எதிருரை இயம்பலாமோ?' எனினும், என்னை விரும்பும் எழிலுடையார் ஆரூரர் திரும்பிச் செல்லும் அவாவுடையார் ஆதலின், மணந்த பின் என்னைப் பிரிந்து செல்லின் என் செய்வது?' என்று வினவினார்.

'அன்புடை அணங்கே, நீ அறைவது உண்மை தான். இதுவே ஏதுவாகத் தடைசெய ஒண்ணாது. நம் சுந்தரன் நின்னையும் நின் இடத்தையும் நீங்கா

மைக்கு ஒரு சபதம் செய்யச் செய்வோம்,' என்று சாற்றி, தாய் முகங்காணச் சேய் நிற்பது போல இருந்த சுந்தரரிடம் போந்து, நடந்த வண்ணம் நவின்றனர்.

சங்கரர் தாள் பணிந்து இரந்து, மங்கையார் சபதம் செய்ய வந்த போது இறைவரைத் திருக் கோயிலில் இல்லாமல் திருமகிழின் கீழ் இருக்குமாறு வேண்டினார் சுந்தரர். அன்பு வேண்டும் அரனாரும் அவ்வாறே செய்ய இசைந்தார்.

இறைவர் மகிழ்க்கீழ் இருக்க உடன்பட்ட தையும், சங்கிலியாரிடம் சென்று சாற்றிவிட்டனர்.

பொழுது புலர்ந்தது. புள் ஒலி செய்தது. வன் தொண்டர் வனிதையின் வரவு நோக்கி நின்றிருந் தார். சேய் இழையார் திருப்பள்ளி எழுச்சிக்கு மலர் தொடுக்கும் தூய பணி புரியத் திருக்கோயில் சென்று புக்கார். ஆரூரர் அன்னாரை நெருங்கி, 'இத்தலத்தைவிட்டு யான் பிரியாமைக்கு இசையும் படி இயம்பத் திங்கள் முடியார் திருமுன் போதுவீர்,' என்றழைத்தார். சங்கிலியார் நாணம்மிக்கு, ஒதுங்கிப் பூமண்டபத்துள் புகுந்தார். அம்மையார்க்கு அருகு இருந்த தாதியர், 'இதற்காக இமையவர்கள் பெரு மான் முன் சாற்றுவது அடாது. மகிழ்க்கீழ்க் கூறி னாலும் அமையும்,' என மொழிந்திட்டார். இசை ஞானியாரின் திருமகனாரும் மற்றதனுக்கு இசைந் திட்டார்; மறு மாற்றம் உரைத்திலர். யாவரும் சென்று மகிழை அடைந்தனர். சுந்தரர் முக்காலும் வலம் வந்தார்; 'இத்தலத்தை விட்டு யான் அகலேன்,' என்றும் அறைந்திட்டார்.

பிரிவதில்லை எனச் சத்தியம் செய்த பின்னர்க் கடிமணம் நிகழ்ந்தது. இன்பத் துறையினில் இறங்கினரேனும், இருவரும் தம்பிரான் திருவடிகளில் உணர்வு சிறிதும் பிழையாராய் முப்போதும் போற்றிப் பூசனை புரிவார் ஆயினர். இங்ஙனம் பல நாள் நடந்தன.

ஆரூரர்க்குத் திருவாரூர்த் தியாகேசரைக் காண அவா எழுந்தது.

> 'ஏழிசையாய் இசைப்பயனாய் என்னுடைய தோழனுமாய்
> யான்செய்யும் துரிசுகளுக் குடனாகி
> மாழை ஒண் கண் பரவையைத் தந்தாண்டானை மதியிலா
> ஏழையேன் எத்தனைநாள் பிரிந்திருக்கேன் என் ஆரூர்
> இறைவனையே.'

என்று நினைந்து நினைந்து ஏங்கினார். இவ்வேக்கம் சத்தியத்தையும் மறக்கச் செய்தது; ஆரூர் செல்லவே துணிவு தந்தது.

ஆகவே, ஆரூரர் ஒற்றியூர் எல்லையைக் கடக்க உளங்கொண்டார். எழுத்தறியும் பெருமானைப் போற்றிசைத்துப் புறப்பட்டார். சத்தியம் தவறிய காரணத்தால் அவர் பட்ட கட்டம் பலவாகும், பின்னர்ப் பரமரையே வேண்டி அக்கட்டங்களினின்றும் விடுபட்டு இன்புற்றார்.

சங்கிலியார், கண்ணிழந்தார் பெற்றிழந்தார் எனக் கலக்கமுற்றார்; 'முன்னை வினையின் முடிவு போலும்!' என்று புந்தியில் கொண்டு முன் போலத் திருத்தொண்டின் நெறியின் வழாது வாழ்ந்து வரலானார்.

பயிற்சி வினாக்கள்

1. அழகை வெறுத்த அம்மையார்

1. புனிதவதியார்க்கும், பரமதத்தனுக்கும் நடந்த திருமணம் பொருத்தமற்ற திருமணம் என்பதைச் சேக்கிழார் எங்ஙனம் விளக்கியுள்ளார்?

2. அஃறிணை உயிர்களும் தத்தம் பெடையினிடத்தும், பிணையினிடத்தும், பிடியினிடத்தும் அன்பு கொண்டிருக்கின்றன என்பது எப்படித் தெரிகிறது?

3. அம்மையார் ஏன் மதுரைக்குச் செல்ல நேர்ந்தது?

4. புனிதவதியார் ஏன் கயிலை நோக்கிப் புறப்பட்டார்? பின்பு ஏன் திருவாலங்காட்டை அடைந்தார்? அவர் இறைவனை நோக்கி வேண்டிய வரம் யாது?

2. உண்மைத்துறவுடைய உத்தமியார்

1. திலகவதியார் எதனால் 'உண்மைத்துறவுடைய உத்தமியார்' என்னும் சிறப்பிற்கு உரியவரானார்?

2. திலகவதியார் தம் தம்பியார் திருநாவுக்கரசரிடம் பேரன்பு கொண்டவர் என்பது எதனால் தெரிகிறது?

3. கணவனார்க்கேற்ற காரிகையார்

1. சேக்கிழார் அப்பூதியடிகளாரின் சிறப்பினை எவ்வாறு அறிவித்துள்ளார்?

2. 'புணர்ச்சி பழகுதல் வேண்டா, உணர்ச்சிதான் நட்பாம் கிழமை தரும்' என்னும் குறட்கு அப்பூதியடிகளார் ஓர் எடுத்துக்காட்டாவார் என்பதை நன்கு விளக்குக.

3. அப்பூதி அடிகளார் மனைவியார் 'கணவனார்க்கேற்ற காரிகையார்' என்னும் பெயருக்குப் பொருத்தமானவர் என்பது எதனால் தெரிகிறது?

4. சேக்கிழார் அடியார்களுக்கு நிகழும் தீங்குகளைத் தம் வாயாற்கூற அஞ்சுவர் என்பது எதனால் தெரிகிறது?

5. அப்பர் பெருமானுக்கு உணவு படைக்கையில் நேர்ந்த இடையூறு யாது? பின்பு அஃது எவ்வாறு நீக்கப் பட்டது?

4. தென்னர் குலப்பழி தீர்த்த தெய்வ மாதரார்

1. பாண்டியர் குடி எவ்வெப்பொழுது சிறிது மாசு உற்றது?

2. திருஞானசம்பந்தர் மங்கையர்க்கரசியாரை எவ் வெவ்வாறு புகழ்ந்துள்ளார்?

3. பாண்டியன் எங்ஙனம் வெப்பு நோய் நீங்கப் பெற்று நெடுமாறன் ஆயினன்?

4. மங்கையர்க்கரசியார் 'தென்னர் குலப்பழி தீர்த்த தெய்வ மாதரார்' என்று எதனால் சிறப்பிக்கப்படுகிறார்?

5. மங்கல நாண் ஈந்த மாதரார்

1. 'கலயனார்' என்பவரைப் பற்றிச் சிறு விளக்கம் தருக.

2. இறைவர் 'மங்கல நாண் ஈந்த மாதரார்' இல் லத்தை எங்ஙனம் மாண்புறச் செய்தார்?

6. கணவரைத் திருத்திய காரிகையார்

1. தில்லையின் சிறப்பை நன்கு விளக்குக.

2. திருநீலகண்டருக்கு அப்பெயரமையக் காரணம் யாது?

3. திருநீலகண்ட நாயனாரிடம் அமைந்த சிறு குற்றம் யாது? அதை அம்மையார் எங்ஙனம் மாற்ற வழி கண்டார்?

4. திருநீலகண்ட நாயனார் 'ஏனைய மாதர்களையும் மனத்தினால் தீண்டேன்' என்று கூறக் காரணங்கள் யாவை?

7. உத்தி கூறிய உத்தமியார்

1. 'பொற்ருலியோடு எவையும் போம்' என்பதைத் தக்க காரணங் காட்டி விளக்குக.

2. இளையான்குடி மாறனாரின் குணநலன்களை விளக்குக.

3. உத்தி கூறிய உத்தமியார் என்ன உத்தி கூறினர்? அதனால் விளைந்த நலன் யாது?

8. மனையை மங்கலம் ஆக்கிய மாதரார்

1. மாதர்களுக்குக் கணவரே சிறந்த துணையாவார் என்பதை நன்கு விளக்குக.

2. கலிக்காமர் தோன்றிய நாடு நகரச் சிறப்பையும், அவருடைய குணநலன்களையும் புலப்படுத்துக.

3. சூலைநோய் மிக்கொடுமையானது என்பது எதனால் தெரிகிறது ?

4. கலிக்காமர் ஏன் தம்மையே மாய்த்துக்கொண்டார்? இப்படி மாய்த்துக்கொண்டதிலிருந்து நாம் அறிவன யாவை ?

5. எங்ஙனம் ஏயர்கோன் நாயனாரும் வன்றொண்டரும் இன்ப நண்பினர் ஆயினர் ?

9. ஆரூர் அம்மையார்

1. சோழ நாட்டின் சிறப்பினைத் தொகுத்து வரைக.

2. பரவையாரின் பிறப்பையும் சிறப்பையும் விளக்குக.

3. பரவையார் சுந்தரர்பால் பிணக்குக் கொள்ளக் காரணம் யாது ?

4. இறைவர் சுந்தரர் வேண்டுகோளை நிறைவேற்ற விருப்பங்கொண்டதேன் ?

5. பரவையார் இல்லத்தில் நடந்த விருந்தின் சிறப்பை விளக்குக.

10. ஒற்றியூர் ஒள்ளிழையார்

1. சங்கிலியாரின் சிறப்பியல்பு யாது?

2. இவ்வம்மையாரை ஏன் திருவொற்றியூரக கன்னி மாடத்தில் அமர்த்தினர்?

3. இவ்வம்மையார்க்கும் சுந்தரர்க்கும் திருமணம் நிகழ எஃது ஏதுவாயிற்று?